www.tamilarangam.net

# எரிமலை


மே - 1998



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்




அன்புமிக்க எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். 'எரிமலை' ஜனவரி–பெப்ரவரி இதழ் கிடைக்கப்பெற்றேன். முந்திய இதழ்களும் அவ்வப்போது வந்து சேர்ந்தன. மிக்க நன்றி.

ஈழத்தமிழ்த் தமிழர்களின் இன எழுச்சியையும், அதற்கு ஆதாரமாய் திகழும் சுதந்திர தாகத்தையும், வெற்றி நிச்சயம்– வருங்காலம் உதயமாகியே தீரும் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் விஷயங்களை 'எரிமலை' இதழ்தோறும் பிரசுரித்து வருவது ஊக்கம் தருவதாக உள்ளது.

உலகெங்கும் பரவி வாழ்கிற புலம்பெயர் தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வை உலகுக்கு உணர்த்திய சுதந்திரப் பொன்விழா அணி வகுப்புகள் பற்றி தகவல்களும் படங்களும் உணர்ச்சி ஊட்டக் கூடக் கூடியவை.

தமிழர் வாழ்வைச் சீரழிக்கும் சுரண்டல்கள் பற்றியும், சிங்களவர்களின் வெறித்தனமான போக்குகள் குறித்தும், சிறீலங்கா அரசின் (சந்திரிகா ஆட்சியின்) ஏமாற்றும் செயற்பாடுகள் பற்றியும் 'எரிமலை' மூலம் நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது.

ஈழத்து மக்கள் சிரிப்பை இழந்து விட்ட சீவன்களாக இயங்கிக் கொண்டிருப்பதை எண்ணும் போது இதயவேதனை உண்டாகிறது. சிரிப்பை இழந்த அவர்களது போக்கை சேந்தன் எழுதிய 'சிரிப்பு' உளநெகிழ்ச்சி ஏற்படும் விதத்தில் சித்தரிக்கிறது.

இழக்கப்பட்டதினால் இழந்தது, மீட்கப்பட்டினால் பூத்து விளங்கும் 'எங்கள் மண்ணில் இருக்கின்ற ஒவ்வொரு மக்களின் முகங்களிலும் சிரிப்புப் பூத்துக்குலுங்கும் காலம் வெகுதொலைவில் இல்லை என்ற நம்பிக்கை முளைகொள்வதை 'சிரிப்பு' கட்டுரை திடமாகத் தெரிவிக்கிறது. மக்கள் மனதில் உறுதி வேரூன்றி நின்பதை 'உறுதி' எனும் நிகழ்ச்சிச் சித்திரம் எடுத்துக் காட்டுகிறது. ஈழமக்களின் மன உறுதியும் நம்பிக்கையும் நிச்சயம் வெற்றி பெற்றுத்தரும். எழுச்சிக் குரலாகத் திகழும் 'எரிமலை' யின் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

நன்றி.

அன்பு
வல்லிக்கண்ணன்
சென்னை – தமிழ்நாடு

★★★

"வெல்லட்டும் தமிழீழம்"

அன்புடைய விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுக்கும் வெளியீட்டுப் பிரிவுக்கும், எரிமலை ஆசிரியர் அமைப்பிற்கும் நன்றி கடந்த வந்தனம்.

எரிமலை தொடர்ந்து கிடைக்கப் பெற்று படித்துவருகிறேன்.

தமிழீழ ஆதரவு நிகழ்ச்சி தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருவதில் நான் கலந்து கொண்டு வருகிறேன். 26 தமிழர்கள் தூக்கி தண்டனை விதித்து இருப்பது தமிழினத்தின் மீது அடக்கு முறையாகும். 26 தமிழர் உயிர் காக்கும் நிதி பெறுவதில் என்னை அர்ப்பணித்து கொண்டு உள்ளேன்.

எரிமலை இதழ் மிகவும் நன்றாக உள்ளன. ஈழத்தில் மாண்டு போன விடுதலை வீரர்களின் வரலாறுகளை எரிமலை இதழில் வெளியிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அடிமைதனத்தில் வாழும் தமிழர்களுக்கு உணர்வு பிறக்கும்.

தமிழ்நாட்டில் நெடுமாறன் தலைமையில் ஈழ ஆதரவு இயக்கங்களின் ஒருங்கிணைக்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தாங்கள் எமக்கு பணி செய்ய மேலும் மேலும் உணர்வு பூர்வமான வெளியீடுகளை அனுப்ப வேண்டுகிறேன்.

எமது மக்களுக்காக, மொழிக்காக, மண்ணின் விடுதலைக்காக, உயிர் உள்ளவரை போராடுவேன். பணி செய்வேன். தமிழ்மேல் ஆணை!

நன்றி

அன்புடன்
மேவி.புலி.குமார்
தமிழீழ ஆதரவு ஒருங்கிணைப்பு குழு
தமிழ்நாடு.

★★★

பெரு மதிப்பிற்குரிய "எரிமலை" ஆசிரியர் குழுத்தோழர்களுக்கு,

முதற்கண் எமது தோழமை வணக்கமும், வாழ்த்துக்களும்!

"எரிமலை" 97–ன் இதழ்கள் சிலவற்றையும், "ஒளிவீச்சு" வீடியோ ஒளிப்பேழை (ஓயாத அலைகள் 96) ஒன்றையும் தமிழ்நாடு மார்க்சிய லெனினியக்கட்சி தோழர்கள் மூலம் காணப்பெற்றோம். தமிழீழத்தில் தாயக மீட்புக்காக புலிகள் நடாத்தி வருகின்ற வீரம் செறிந்த போரைப்பற்றியும், சமகால நிகழ்வுகள் குறித்தும் பல உண்மைச் செய்திகளை இவ்விதழ்கள் மூலமாக அறிந்து கொண்டோம்.

வீடியோ சஞ்சிகையினை பல படிகள் எடுத்து எமது மக்களிடம் விரிவாக காண்பித்து வருகிறோம். தமிழினத் தலைவர் மாவீரன் பிரபாகரன் அவர்கள் தலைமையில் புலிவீரர்கள் முன்னேறி வருவது எமது இளைஞர்களுக்கு அளப்பரிய உந்து சக்தியாகத் திகழ்கின்றது. தமிழீழ விடுதலைக்கும், தமிழக விடுதலைக்கும் ஆதரவு இப்போது இங்கு பெருகி வருகிறது.

விரைவில் தமிழீழத்திற்கு ஒரு விடிவு வரும். அதற்காக அனைவரும் உழைப்போம்.

இரா.பாலசுப்ரமணியம்
ஈரோடு–தமிழ்நாடு.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...




'ஜெயசிக்குறு' ஓராண்டு பூர்த்தி
– பக்கம் 04





வன்னிச் சமர்
– பக்கம் 18





தமிழீழ அரசு நோக்கிய பயணத்தில் இருபத்தியிரண்டு ஆண்டுகள்
– பக்கம் 10






தாயகமீட்புப் போரும் உலகத் தமிழரின் பங்கும்
– பக்கம் 28





பெண்கள் போர் வீரர்களாகவும் களவீரர்களாகவும்
– பக்கம் 14



பாகிஸ்தானின் ஏவுகணையும் தென்னாசியாவில் பனிப்போரும்!
– பக்கம் 35

★ மாங்குளம் பகுதிக் காடுகளில் "மரணம்" இப்பொழுது மறைந்து வருகிறது – பக்கம்13

★ தொழிற்சங்கங்களின் போராட்டம் – பக்கம்21

★ அத்துமீறிய குடியேற்றமும் அநாதரவான தமிழினமும் – பக்கம்23

★ புலிகளின் பதிலடிகளால் சிதைந்துவரும் இராணுவத்தின் தொழில்சார் திறன் – பக்கம்25

★ எயர்லங்கா விமான நிறுவனம் விலைபோகும் தேசியப் பெருமை – பக்கம்33

★ 54– வது ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவில் திம்பு கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது. – பக்கம்37

★ சந்திரிகாவுக்கு ஒரு மாளிகை – பக்கம்39

★ நேர்காணல் – பக்கம்40

★ உறுதி– சிறுகதை – பக்கம்44




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடும்பத்தைத் துறந்து கல்வியைத் துறந்து, சுதந்திரம் என்ற இலட்சியத்திற்காக தமது உயிரையும் துச்சமாக மதித்து, போராட்டக் களத்தில் குதித்திருக்கின்றார்கள். இவர்களை ஆயுதப் போராட்டப் பாதைக்குத் தள்ளியது சிங்கள அரச பயங்கரவாதமேயன்றி, வேறொன்றும் இல்லை. அநீதியான, அதர்மமான கொடுங்கோன்மை ஆட்சியை இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. சிறை, சித்திரவரை, உயிர்வதையாகத் தம்மீது திணிக்கப்பட்ட கொடூமான வாழ்வை இவர்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவேதான் அடிமைகளாக வாழ்வதைவிட சுதந்திரத்திற்காகச் சாவதே மேல் என்ற புனித இலட்சியத்திற்காக இரத்தம் சிந்துகிறார்கள்; கண்ணீர் வடிக்கிறார்கள்; உயிரையும் அர்ப்பணித்துத் தியாக வீரர்களாக வீர வரலாறுகளைப் படைக்கின்றார்கள். ஆனால் இனவெறிபிடித்த சிங்கள அரசின் குருட்டுத் தனமான பார்வையில் இவர்கள் பயங்கரவாதிகள், வன்முறைவாதிகள், அராஜகவாதிகள்; இவர்களது உன்னதமான இலட்சியப் போராட்டம் பயங்கரவாதம் பொதுமக்களாகிய உங்களுக்கு உண்மை நிலைமை நண்கு தெரியும். உங்கள் குழந்தைகள் மீது குத்துப்படும் அரசியல் முத்திரைகள் அர்த்தமற்றது. அநியாயமானது என்பதும், உங்களுக்குத் தெரியும்.

நாம் தர்மத்திற்காக, தன்மானத்திற்காக ஆயுதம் ஏந்தியிருக்கிறோம். எமது இலட்சியப் பயணமும் அதற்காக நாம் புரிந்துவரும் உன்னத தியாகங்களும் உங்களுக்குப் புரியும். ஆதலால் நீங்கள் எம்மை அரவணைத்துக் கொள்கிறீர்கள். ஆதரவு அளிக்கிறீர்கள். நாம் மக்கள் சமுத்திரத்தில் சங்கமமாகியுள்ளோம். இதனால் பொதுமக்களாகிய உங்களிடமிருந்து எம்மைப் பிரித்து வைக்கும், தந்திரோபாயங்கள் எதுவும் பயனளிக்கவில்லை. இதனால் விரக்தியுற்று ஆத்திரங்கங்கொண்ட சிங்கள இனவாத அரசு, வெகுசனம் மீது போர் தொடுத்திருக்கின்றது. ஆயுத பலாத்கார அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. உங்களது பிள்ளைகளை நீங்கள் காட்டிக் கொடுக்கிவில்லை என்பதற்காக, உங்களைத் தாங்கொணாத் துன்பத்தின் எல்லைக்குத் தள்ளி, உங்கள் மீது பழிதீர்த்துக் கொள்ள முனைகிறது. எமது சுதந்திரப் போராட்டம் நீண்ட துன்பகரமான வரலாற்றைக் கொண்டது.

**தமிழீழத் தேசியத்தலைவர்**
**மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு

மே 1998

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★


**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*


# வெற்றியை எமதாக்குவோம்

**"எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது. எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும்வரை ஜெயசிக்குறுச் சமர் ஓய்ந்துவிடப்போவதில்லை"**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்
13 -மே.1998

**வ**ன்னி பெருநிலப்பரப்பு ஒரு வரலாற்றை பிரசவிக்கின்றது. சுமார் 40,000 எதிரிப்படைகளின் நெருப்புமழை மத்தியில் தமிழீழம் என்ற உயரிய இலட்சியத்தினை பாதுகாக்க பெரும் சமர் ஒன்றை விடுதலைப் போராளிகள் ஒருவருடகாலமாக மேற்கொள்கின்றனர்.

இச்சமர் புறத்தே புலிகளின் மற்றுமொரு வீரமிகு போர்முனையாக தோற்றம் கொண்டிருப்பினும் அகத்தே தமிழர்களின் எதிர்காலத்திற்கான தீர்க்கமான ஒரு காலகட்டத்தை இது எட்டி நிற்கின்றது.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் போரணிகள் சிங்களத்தின் அதிஉச்ச படையெடுப்பை எதிர்கொண்டுபோராடுகின்றது. மரபு ரீதியான போர் அமைப்பை – போர் ஆற்றலை பெற்றுவிட்டதென்பதே ஜெயசிக்குறுவிற்கு எதிரான, தமிழர்களது போர்ச்சாதனையின் பிரகடனமாகும்.

இப் போர் இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்துவைக்கும் இவ்வேளையில் எமது தாயகத்தைவிட்டு எதிரிப்படைகளை விரட்டி அடிக்கும் தமிழர்களது தீர்மானத்தை மீள ஒருமுறை தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ளார். தலைவரின் இப்பிரகடனத்தில் போரில் ஈடுபடும் எமது மரபுசார் போர் அணிகளை பெயர்குறிப்பிடப்பட்டு பாராட்டப்பட்டதுடன் இப் போரில் எமது மக்கள் ஏற்றுள்ள காத்திரமான பங்கு வரவேற்கப்பட்டுள்ளது.

இது தமிழர் தேசியத்தின் உந்துசையாக திகழும் தமிழீழ விடுதலைப்போர் தன் வளர்ச்சிப்பாதையில் மற்றுமொரு பாச்சலை மேற்கொண்டுள்ளதை புலப்படுத்துகின்றது.

நாம் இன்று தெளிவாக உள்ளோம்; எமது போர் நடவடிக்கைகள் மிகத் தெளிவான திட்டமிடலுடன் முன்னேறி வருகின்றது; எதிரியின் அதி உச்ச பலத்தை நாம் இன்று பரீட்சித்து பார்த்துவிட்டோம்; இதனை முறியடித்து எமது ஆதர்சன இலட்சியமான சுதந்திர தமிழீழ தேசத்தை நாம் பிரகடனப்படுத்தியே தீருவோம் என்பதே தலைவரின் உரையின் மூலமாய் விளங்கும் சேதியாகும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் எமது போராளிகள் படைக்கும் போர்க்கள சாதனைகளால் பெருமிதம் கொள்ளும் அதேவேளை எமது முழுமையான விடுதலைக்கான பாதைதிறப்பை வன்னிச்சமர் அனுபவங்கள் எமக்கு தரும் என்பதை உணரவேண்டும். இந்த வெற்றிக்கான அடிப்படைத் தேவை எமது போராளிகளின் கரம் பலப்படுத்த வேண்டும். 50 பில்லியன் ரூபாய் பட்ஜெட்டை கொண்ட சிங்கள தேசத்தின் இராணுவ இயந்திரத்தை உடைத்தெறியும் தமிழீழ தேசத்தின் போர்முரசிற்கு பின்னால் நாம் அணிதிரண்டு வெற்றியை எமதாக்குவோம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "ஜெயசிக்குறு" ஓராண்டு பூர்த்தி

## "ஜெயசிக்குறு" ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழ் மக்களுக்கு 13.05.98 அன்று ஆற்றிய உரை



எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றைய நாள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாள், எமது எதிரியான சிறீலங்கா அரசின் மிகப் பெரிய படையெடுப்பான 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை நாம் எதிர்த்து நின்று போராடி, இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது. மூன்று மாத காலத்திற்குள் முடிந்துவிடுமென போர்ப்பறை சாற்றி, பெரும் பிரச்சார எடுப்புடன் ஆரம்பமான இப்போர் நடவடிக்கை இன்றுடன் ஒரு வருடமாகியும் இன்னும் முடிவுபெறாது இழுபடுகிறது. ஒரு வருட காலத்தை எட்டிவிட்ட ஒரு தனிச்சமர் என்ற ரீதியில், தமிழீழப் போராட்ட வரலாற்றில் மட்டுமன்றி உலகப் போரியல் வரலாற்றிலும் மிகவும் நீண்டதொரு சமராக இது முக்கியத்துவம் பெறுகிறது. எதிரியின் படையெடுப்பை மூர்க்கமாக எதிர்த்துப் போராடி, எதிரி இராணுவத்தின் நகர்வு வேகத்தை தடுத்து நிறுத்தி, எதிரிப்படைகளை வன்னிக் காட்டிற்குள் முடக்கி வைத்து உலக இராணுவ வரலாற்றில் ஒரு ஒப்பற்ற சாதனையை எமது விடுதலை இயக்கம் நிலைநாட்டியிருக்கிறது.

'ஜெயசிக்குறு'ச் சமர் சாதாரண சமரல்ல. சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமராக, எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர் இது. இந்தச் சமரில் எதிரியானவன் தனது முழுப்பலத்தையும் வளத்தையும் குவித்துப் போரிட்டான். மூன்று பெரும்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறப்புப் படையணிகளும், பின்னணிப் படைகளாகக் கடற்படையினரும், காவற்துறையினருமாகப் பாரிய படைப்படலத்தோடு இந்தச் சமர் நிகழ்ந்தது. கனரக ஆயுத சக்தியாக பெருமளவு பீரங்கிகளும், டாங்கிகளும் தரைப்படைக்கு வலுச் சேர்க்க ஆகாயப்படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்களும், தாக்குதற் ஹெலிகளும் இந்தச் சமரில் பெரும் பங்கு வகித்தன. ஒரு பகை நாடுமீது ஆக்கிரமிப்புத் தாக்குதலை நடத்துவது போன்று சிங்கள தேசம் தனது படைப்பலச் சக்தியை ஒன்று குவித்து, தமிழீழத்தின் இதய பூமியான வன்னி மண்ணீது படையெடுத்தது.

இந்தப் பெரும் படையெடுப்பின் இராணுவக் குறிக்கோள் என்ன? அரசியல் ரீதியான அந்தரங்க நோக்கம் என்ன?

தமிழரின் போக்குவரத்திற்கு வசதியாக, கண்டி நெடுஞ்சாலையைத் திறந்துவிடுவதுதான் 'ஜெயசிக்குறு' வின் இராணுவ இலக்கு என சிங்கள அரசு கூறிவருகிறது. ஆனால், இப்படையெடுப்பின் உண்மையான நோக்கம் அதுவல்ல. 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின் பின்னணியில் மிகவும் ஆபத்தான, நாசகாரமான நோக்கங்கள் இருக்கின்றன.

கண்டி நெடுஞ்சாலை வன்னி மாநிலத்தின் இதயத்தை ஊடறுத்துச் செல்கிறது. இந்த நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதன் மூலம் வன்னியை இரு கூறுகளாகத் துண்டாடி, தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாட்டைச் சிதைத்துவிடலாமென சிங்களப் பேரினவாத அரசு எண்ணியது.

அடுத்ததாக, வன்னிப் பெருநிலப் பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் என்பது சிங்கள அரசுக்குத் தெரியும், இங்குதான் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடமும் பாசறைகளும் நிர்வாகக் கட்டமைப்புகளும் இருக்கின்றன. என்பதும் எதிரிக்குத் தெரியும். எனவே வன்னியின் இதயம் மீது படையெடுப்பு நடாத்தினால் புலிகள் இயக்கம் போருக்கு முகம் கொடுத்தேயாகவேண்டுமென அரசு எண்ணியது. இந்தச் சூழலில், பாரிய படைப்பலத்தையும், படைக்கல சக்தியையும் பயன்படுத்தினால் புலிகள் இயக்கத்தின் இராணுவப் பலத்தை அழித்து அதன் மூலம் தமிழரின் தேசியச் சுதந்திர இயக்கத்திற்கு முடிவு கட்டிவிடலாமென பேரினவாதிகள் கருதினர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து, வட தமிழீழத்தை தென் இலங்கையுடன் இணைத்துவிட்டால் தமிழரின் தேசியப் பிரச்சினை இராணுவ ரீதியில் தீர்வாகிவிடுமென சந்திரிகா அரசு கணக்குப் போட்டது. இத் தந்திரோபாயத்தையே 'சமாதானத்திற்கான' போர் என அரசு பூடகமாகச் சொல்லி வருகிறது.

இத்தகைய நாசகார நோக்குடனேயே மிகவும் ஆபத்தான நோக்கத்தைக் கொண்டது என்பதை நாம் ஆரம்பத்திலிருந்தே புரிந்து கொண்டோம். இது எமது தாயக நிலத்தின் ஒருமைப்பாட்டிற்கு மட்டுமன்றி, எமது விடுதலை இயக்கத்தின் இருப்பிற்குமே எழுந்த மிகப்பெரிய சவாலாகும். எனவே, இப் படையெடுப்பை எமது முழுச் சக்தியையும் பிரயோகித்து மூர்க்கமாக எதிர்ப்பதென நாம் திடசங்கற்பம் பூண்டோம். இந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அசைவியக்கத்தை தடுத்து நிறுத்தி, எதிரிக்குப் பலமான பதிலடிகள் கொடுக்கும் வகையில் நாம் எமது போர் முறைத் திட்டத்தையும் உத்திகளையும் வகுத்தோம்.





'ஜெயசிக்குறு'ச் சமர் ஆரம்பமாவதற்கு முன்னர் சிங்கள அரசும், சிங்கள இராணுவத் தலைமையும் எமது இயக்கத்தின் படை பலம் பற்றியும், போராடும் உறுதி பற்றியும் ஒரு தவறான மதிப்பீட்டை வைத்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் மேற்கொண்ட தந்திரோபாயப் பின் நகர்வையும், எடிபல இராணுவ நடவடிக்கைக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்காததையும் அடிப்படையாக வைத்து, புலிகள் இயக்கம் பலவீனம் அடைந்துவிட்டதாக சிங்கள அரசு கருதியது. இந்தத் தவறான கணிப்பீடு காரணமாகவே 'ஜெசிக்குறு' விற்கு குறுகிய காலக்கெடுக்களை வகுத்து, இராணுவத் தலைமை தலைகுனிய நேரிட்டது.

'ஜெயசிக்குறு' இராணுவத்தை எதிர்கொள்ள நாம் தயார்நிலையில் இருந்தோம். பெரும் எடுப்பிலான ஒரு மரபுவழிப் போருக்கு முகம் கொடுக்கும் வகையில் நாம் எமது இராணுவக் கட்டமைப்பைச் சீர் செய்து, ஒழுங்கமைத்து இருந்தோம். முல்லைத்தீவில் கிட்டிய மாபெரும் வெற்றியை அடுத்து, எமது படைக் கல சக்தி பலம் பெற்றிருந்தது. இந்த ஆயுத பலத்தை அடிப்படையாக வைத்து, பீரங்கிப்படையணி, டாங்கி எதிர்ப்புப் படையணி, விமான எதிர்ப்புப் படையணி என்ற ரீதியில் புதிய படைப்பிரிவுகளை கட்டியெழுப்பினோம். இறுக்கமான ஒழுங்கமைப்புடன் பன்முகத் தாக்குதலை நிகழ்த்தவல்ல படையணிகளாக இவை உருவாக்கப்பட்டன. எதிரியைத் திகைப்பூட்டும் நுட்பமான தாக்குதல் உத்திகளையும் தற்காப்பு முறைகளையும் வகுத்தோம். கேந்திரமான இடங்களில் மிக உறுதியான பாதுகாப்பு நிலைகளை அமைத்தோம். இப்படியாக, சிங்களத்தின் மிகப்பெரிய படையெடுப்பை எதிர்கொள்ள நாம் எம்மைத் தயார் படுத்திக் கொண்டோம்.

சென்ற ஆண்டு மே மாதம் 13–ல் தொடங்கி இன்றுடன் 365 நாட்கள் வரை நீடித்திருக்கும் 'ஜெயசிக்குறு' சமரானது பாரிய அளவிலான தாக்குதல்களையும், மிகவும் உக்கிரமான சண்டைகளையும், பலரகமான மோதல்களையும் கொண்ட பாரிய போர் நடவடிக்கையாகும். வலிந்து தாக்குதல், தற்காப்புத் தாக்குதல், அதிரடித் தாக்குதல் என்ற ரீதியில் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் மீது நாம் நிகழ்த்திய தாக்குதல் எதிரிக்கு என்றுமில்லா பேரிழப்புக்களை ஏற்படுத்தியதோடு, எதிரிப்



படைகளின் நகர்வு வேகத்தை தடுத்து நிறுத்தியது. தாண்டிக்குளத்திலும், பின்னர் கரப்புக்குத்தி, விஞ்ஞான குளத்திலும் நாம் மேற்கொண்ட வெற்றிகரமான வலிந்து தாக்குதல்கள் எதிரிப்படைகளை சிதறடித்து நிலைகுலைய வைத்தது. இவ்விரு தாக்குதல்களிலும் எதிரிக்குப் பெரும் உயிர் தேசமும், பாரிய அளவிலான ஆயுத தளபாட இழப்பும் ஏற்பட்டது. வன்னி மண்ணை ஆக்கிரமித்து, எந்தத் திசையில், எத்தகைய

**ஓயாத புயலாக ஓராண்டு காலம் நீடித்த இப்பெரும் சமரில் எத்தகைய துன்பங்களைச் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளைச் சமாளித்து, எத்தகைய ஆபத்துக்களை எதிர்கொண்டு எமது வீரர்கள் மனவுறுதியோடு போராடினார்களென்பதை நான் நன்கறிவேன்.**

பாதையை அமைத்தாலும் அதனை ஊடுருவித் தாக்கியழிக்கும் துணிவும், ஆற்றலும், பலமும் புலிப் படைக்கு உண்டு என்பதை இத்தாக்குதல்கள் எதிரிக்கு உணர்த்தியிருக்கிறது.

புலிப் படை வீரர்களின் வலுமிக்க தற்காப்புப் போருக்கு தலைசிறந்த உதாரணமாக விளங்கியது புளியங்குளம். இங்கு பலமான பாதுகாப்பு நிலைகளை அமைத்து ஐந்து மாதங்கள் வரை நிலைதளராது நின்று, எதிரியின் பல்வேறு முன்னேற்ற முயற்சிகளை முறியடித்தார்கள் எமது வீரர்கள். புலிவீரர்களின் மூர்க்கத்தனமான தற்காப்புத் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாது, கண்டி வீதிப் பாதையை விட்டு காடுகளுக்குள் அகலக்கால் நீட்டியது சிங்கள இராணுவம். பின்னர் புதூர் சந்தியிலும், மன்னகுளத்திலும், சமீபத்தில் ஒலுமடுவிலும் புலிகள் மேற்கொண்ட துணிகரமான தற்காப்புத் தாக்குதல்கள் எதிரிக்கு பெரிய அளவில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதோடு, எதிரியின் மனவுறுதியையும் உடைத்தது, புளியங்குளத்தை அடுத்து இப்பொழுது மாங்குளத்தைக் கட்டிக்காத்துப் போரிடும் எமது வீரர்கள் எதிரிக்குச் சிம்மசொப்பனமாக விளங்கிவருகிறார்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ஜெயசிக்குறு'ச் சமரில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் தனது இலக்கை அடைவதற்காக சகலவித மான தந்திரோபாயங்களையும் கையாண்டது. போரியல் விஞ்ஞான ஏடுகளிலுள்ள புதிய, புதிய உக்திக ளையும் பரீட்சித்துப் பார்த்தது. போதாக்குறைக்கு அந்நிய இராணுவ மேதாவிகளின் போர்முறைத் திட் டங்களையும் நடைமுறைப்படுத்தி யது. ஆயினும், இந்த போர்த் தந்தி ரங்கள் புலிகளிடம் பலிக்கவில்லை. இவற்றினால் புலிகளின் பாதுகாப்பு வியூகங்களை உடைக்க முடிய வில்லை. இத்தந்திரோபாய முன்



னேற்ற முயற்சிகள் எதிரிக்குப் பின்ன டைவுகளையும் பேரிழப்புகளை யுமே ஏற்படுத்தியது.

இந்த ஓராண்டுச் சமரில். சிறீ லங்கா இராணுவம் மூவாயிரத்திற்கு மேற்பட்ட படையினரைப் பலி கொடுத்திருக்கிறது. ஏழாயிரத்திற் கும் மேற்பட்ட இராணுவத்தினர் உடற்சேதம் அடைந்திருக்கிறார்கள். இந்த நீண்டகாலச் சமரில், சிறப்புப் பயிற்சி பெற்ற முன்னணிப் படைய ணிகள் பல சிதைக்கப்பட்டிருக் கின்றன. டாங்கிப் பிரிவுகள் நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயுதக் களஞ்சியங்கள், வெடிமருந்துக் குதங் கள், இராணுவ வாகனங்கள் அழிக் கப்பட்டிருக்கின்றன. அத்துடன் பெருந்தொகையான ஆயுத தள பாடங்களை புலிகள் இயக்கம் கைப்பற்றியிருக்கிறது. எதிரியின் இழப்பு மிகப் பெரிது. இத்தனை இழப்புக்களைச் சந்தித்தும் இன்னும் எதிரி தனது இலக்கை அடைய வில்லை.

இந்தப் பெரும் சமரில் நாம் எதிர்கொண்ட ஒவ்வொரு சண்டை யும் போர்க்கலையில் எமக்குப் புதிய அனுபவத்தைப் பெற்றுத்தந்தது. இதனால், எமது போராடும் திறன் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறது. இந்தப் போரனுபவம் எமது போராளிகளின் மனோதிடத்தையும் இலச்சிய உறுதியையும் மேலும் வலுவடையச் செய்திருக்கிறது. இந்த ஓராண்டு அக்கினிப் பிரவேசத்தில் நாம் எரிந்து போகவில்லை. மாறாக, நாம் புத்துயிர் பெற்றுப் புதிதாக எழுந்தோம்; பலமாக எழுந்தோம்.

எதிரியின் படைப்பலம் பெரிது, ஆயுத பலமும் பெரிது, வளமும் பெரிது, இந்த வகையில், இராணுவ சமபலம் எதிரிக்கே சாதகமாக இருந்தது. ஆனால், எதிரியிடம் இல் லாத ஒரு பலம் மட்டும் எம்மிடம் இருந்தது. அதுதான், எமது போராளி களின் மனோபலம். எமது போராளி களிடமிருந்தே அசைக்க முடியாத மனவுறுதியும், அதனால் பிறக்கும் அபாரமான துணிவுமே வன்னிக் களத்தில் எமது அதி சக்தி வாய்ந்த ஆயுதமாக இருந்தது. மலையாக எதிரியும் மடுவாக நாமும், சமசீரற்ற இராணுவ நிலையில் நின்றபோதும், இந்த நீண்ட சமரில் எமது போரா ளிகள் வெளிக்காட்டிய நெஞ்சுறுதி யானது எமக்கு மலையான பலத் தைக் கொடுத்தது. அந்த மலையான பலமே, வன்னியில் சிங்கள இரா ணுவப் பூதத்தை நிலைகுலைய வைத் தது.

ஓயாத புயலாக ஓராண்டு காலம் நீடித்த இப்பெரும் சமரில் எத்தகைய துன்பங்களைச் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளைச் சமாளித்து, எத்த





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைய ஆபத்துக்களை எதிர்கொண்டு எமது வீரர்கள் மனவுறுதியோடு போராடினார்கள் என்பதை நான் நன்கறிவேன்.

நெருப்பு மழையாக ஓயாது பொழிந்த பீரங்கி எறிகணைகளுக்கும், மின்னல் வேகத்தில் நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சுக்கும் முகம் கொடுத்து, ஓய்வில்லாது, உறக்கமில்லாது, உருப்படியான உணவில்லாது எமது வீரர்கள் சளைக்காமல் போரிட்டார்கள்.



வன்னிக் களத்தில் இயற்கை அன்னையும் எமது போராளிகளுக்கு இரக்கம் காட்டவில்லை. மாரிப் பெருமழையும், உறையவைக்கும் பனியும், கோடையின் கொழுத்தும் வெயிலும், பாம்பும், நுளம்பும், மலேரியாவுமாக வன்னிக் காட்டின் கொடுமையான சூழலையும் எமது போராளிகள் சகிக்க வேண்டியிருந்தது.

போர் ஓய்ந்த வேளையிலும் எமது போராளிகளுக்கு இரக்கம் காட்டவில்லை. பதுங்கு குழிகள் வெட்டி, பாதுகாப்பு அரண்கள் கட்டி அந்தக் காப்பரண்களில் குடியிருந்து, இரவு பகலாக விழித்திருந்து, எமது மண்ணைக் காப்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

'ஜெயசிக்குறு'ச் சமரில் எமது போராளிகள் வெளிப்படுத்திய மன வலிமையும், செயலாற்றலும் அபார மான சகிப்புத்தன்மையும் பெரிதும் பாராட்டத்தக்கது. எமது வீரர்களின் இந்தத் தலைசிறந்த போர்ப் பண்புகளைக் கண்டு நான் பெருமை கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சமரில் எமது தளபதிகள் வகித்த பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தளபதிகளின் தளராத உறுதியும் திறனாற்றலும், கடும் உழைப்பும் காரணமாகவே வன்னிக் களத்தில் நாம் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்ட முடிந்தது. படையணிகளைச் சீரமைத்து, ஒழுங்கமைத்து, தாக்குதல் திட்டங்களைச் செம்மையாகச் செயற்படுத்தி, களத்தில் போராளிகளை ஊக்குவித்து, வழிநடத்தி, எமது தளபதிகள் காட்டிய செயற்திறன் பெரிதும் பாராட்டத்தக்கது.

பல்வேறு பிரிவினரதும் ஒட்டுமொத்த முயற்சிகள் ஒன்றுகுவிக்கப்பட்டதாகவே இப்பாரிய படையெடுப்பிற்கு நாம் முகங்கொடுத்தோம். ஒவ்வொரு பிரிவும் தனது பணியைத் திறம்படச் செய்தது. எதிரியின் பல முன்னேற்ற முயற்சிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்ட பீரங்கிப் படைப்பிரிவு, பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டு

**நாம், எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமதுஇனத்தின் உயிருக்குநேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்குநிகரானது எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும்வரை 'ஜெயசிக்குறு'ச் சமர் ஓய்ந்துவிடப்போவதில்லை**



எதிரியின் நிலைகளையும், நகர்வுகளையும் கண்காணித்து அறிவித்த வேவுப் பிரிவு, எதிரியின் டாங்கி, கவசவாகன அணிகளைச் சிதைத்த டாங்கி எதிர்ப்பு விஷேட அணி, எதிரியின் மனவுறுதியைச் சிதறடித்த கரும்புலி அணி, தாக்கும் ஹெலிகள் பலவற்றை களத்திலிருந்து அகற்றிய விமான எதிர்ப்பு அணி ஆகிய படைப்பிரிவுகளின் சாதனைகள் பாராட்டுக்குரியவை.

எமது இயக்கத்தின் மருத்துவப் பிரிவு இந்தச் சமரில் ஆற்றிய பங்கு மகத்தானது. விழுப்புண் அடைந்த பெருந்தொகையான போராளிகளுக்கு திறம்படச் சிகிச்சையளித்து, பராமரித்து, அவர்களது உயிர்காத்து எமது மருத்துவப் பிரிவினர் ஆற்றிய பங்கை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

பலத்த இடர்களுக்கும் உயிராபத்துக்களுக்கும் மத்தியில் வீரம் செறிந்த இப்போராட்டத்தை ஆவணப்படுத்திய வீடியோ, புகைப்படப் பிரிவினருக்கும் எனது பாராட்டுக்கள்.


எறிகணைத் தாக்குதல்கள், குண்டு வீச்சுகளுக்கும் முகம் கொடுத்து, இந்த நீண்ட காலச் சமரில் தமது பங்கைத் திறம்படச் செய்த வாகனப் பிரிவினருக்கும், வழங்கல் பிரிவினருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

இச்சமரில் பொது மக்களின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பங்களிப்பும் இருந்திருக்கிறது. இதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது போராளிகளின் உயிர் காக்க இரத்த தானம் வழங்கி போராளிகளின் பசி தீர்க்க உலர் உணவு வழங்கி எமது போராளிகளின் பாதுகாப்பிற்காக பதுங்கு குழிகள் வெட்டி, எமது மக்கள் ஆற்றிய பெருந்தொண்டிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

நாளையுடன் இரண்டாம் ஆண்டில் கால் எடுத்துவைக்கும் 'ஜெயசிக்குறு'ச் சமர் மீண்டும் தொடர்ந்து நீண்டு செல்லவிருக்கிறது. இதற்கு காலவரையறை இடுவதற்கு சிங்கள அரசுக்கு இப்பொழுது துணிவில்லை. எனினும் இந்த இராணுவ நடவடிக்கையோடு அரசியல் நோக்குகளும் பின்னிப்பிணைந்து கிடப்பதால் இந்தப் பாதை திறப்புச் சமரை அரசு கைவிடப் போவதில்லை. இராணுவக் கட்டளைப் பீடத்தளபதிகளை மாற்றியும், இராணுவ அதிகாரிகளுக்கு முதிராநிலைப் பதவியுயர்வுகளை வழங்கியும், இராணுவத்திலிருந்து விலகியோடியவர்களுக்கு மாறி, மாறிப் பாவ மன்னிப்புக்களை வழங்கியும், ஊக்கமிழந்து சோர்ந்துபோன இராணுவ இயந்திரத்தை முடுக்கிவிடுவதற்கு சிங்கள அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. இதனால் மீண்டும் 'ஜெயசிக்குறு'ச் சமர் தொடரும். மீண்டும் இந்த வணங்கா மண்ணில், ஆக்கிரமிப்பாளர்களின் இரத்தம் ஆறாக ஓடவிருக்கிறது. மீண்டும் ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் கண்டிப் பிரபத்துவ வர்க்கத்தின் வரட்டுக் கௌரவத்திற்கும் குருட்டுக் கொள்கைக்கும் பலிக்கடாவாகப் போகிறார்கள்.

ஜெயசிக்குறுச் சமரின் களநிலை உண்மைகளை சந்திரிகா அரசு இருட்டடிப்புச் செய்து வருகிறது, போரின் பேரிழப்புக்களை மூடிமறைத்து, பொய்யான பரப்புரைகளைச் செய்து, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது. ஆயினும், இந்த இராணுவ நடவடிக்கை ஓராண்டு காலம் நீடித்த தனிச் சமராக உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும் உண்மையை அரசால் மூடிமறைக்க முடியவில்லை. இச்சமர் நீண்ட காலம் நீடித்துச் செல்வதையும், அதன் நிச்சயமற்ற எதிர்காலத்தையும் கணிப்பிடும் பொழுது இப்படை நடவடிக்கையானது சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்ட பாரிய இராணுவப் பின்னடைவாகவே உலகம் மதிப்பீடு செய்யும். அத்தோடு, இச் சமரில் எமது இயக்கம் வெளிப்படுத்திய போர்த் திறன், உலக இராணுவ நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. தமிழர் படையான புலிப்படை, வீரம் மிக்க ஒரு தேசிய விடுதலை இராணுவமாகப் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது என்ற உண்மையையும் உலகம் உணர்ந்துள்ளது.

'ஜெயசிக்குறு'ச் சமர் சந்திரிகா அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. தமிழரின் தாயக மண்ணை இராணுவ பலத்தால் அடக்கி ஆளவேண்டுமென்ற ஆதிக்க வெறி சிங்கள தேசத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது.

நாம், எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது. எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் வரை 'ஜெயசிக்குறு'ச் சமர் ஓய்ந்து விடப்போவதில்லை.



'ஜெயசிக்குறு'ச் சமரில், வீரமுடன் களமாடி, எமது மண்ணின் விடிவிற்காக மடிந்து போன ஆயிரத்து முன்னூறு போராளிகளுக்கும் எனது சிரம் தாழ்த்தி வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்

▽



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ அரசு நோக்கிய பயணத்தில் இருபத்தியிரண்டு



1998-ஆம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதியுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது 22-வது அகவையினை நிறைவுசெய்திருக்கிறது. சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தின் மீது மேற்கொண்டு வந்த ஒடுக்குமுறைகளின் காரணமாக தவிர்க்க முடியாத வரலாற்றுக் குழந்தையாய் 1972-இல் தோற்றம் கண்ட தமிழ்ப் புதிய புலிகள் இயக்கம் 1976-ம் ஆண்டு மே மாதம் 5- திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாய் பரிணமித்தது. இந்த வகையில் போராட்டத்தில் புலிகள் இயக்கத்தின் தோற்றுவாய் கால் நூற்றாண்டினைவிட கூடிய காலவோட்டத்தினைக் கொண்டிருக்கிறது. அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாய் போராட்டத்தில் புலிகள் இயக்கத்தின் பதிவுகளை வரலாறு 22 வருடங்களாகப் பதிவுசெய்து வைத்திருக்கின்றது.

இன்று இப் பதிவுகள் கூறும் செய்தி தான் என்ன? தமிழீழ மக்களின் அரசியல் சமூக பொருளாதார வரலாற்றில் புலிகள் இயக்கம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் எவை? புலிகள் இயக்கத்தின் ஊடாக தமிழீழ மக்களின் வரலாற்றில் ஏற்படுத்தப் பட்டுவரும் மாற்றங்கள் எத்தகைய நன்மைகளை மக்களுக்கு வழங்கப் போகின்றது?

இத்தகைய கேள்விகளுக்கு உரிய தெளிவான பதில்கள் எம் அனைவரது மனங்களில் ஆழப்பதிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமான தாகும். இவற்றை புரிந்து கொள்வதற்கு புலிகள் இயக்கத்தின் இலட்சியக் குறிக்கோள்களைப் புரிந்து கொள்வது அடிப்படையானதாகும்.

விடுதலைப்புலிகள் இயக்கம் தேசிய விடுதலை, சமூக விடுதலை என்று இரு குறிக்கோள்களை நோக்காகக் கொண்டே தனது போராட்ட இலக்கினை வகுத்திருக்கின்றது.

இங்கு தேசிய விடுதலை என்பது தமிழீழ மக்களின் தாயகத்தின் பரிபூரண சுதந்திரத்தினையும், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்பட்டு வரும் தமிழீழ மக்களின் அரசியல் விடுதலையினையும் சுதந்திர, பொதுவுடைமைத் தன்னாட்சித் தமிழீழ அரசின் நிர்மாணத்தையும் குறித்து நிற்கிறது.

சமூகவிடுதலை என்பது, எமது சமூகத்தில் நிலவும் சகலவிதமான சமூக அநீதிகளும் ஒழிந்த ஒடுக்கல் முறைகளும் சுரண்டால் முறைகளும் அகன்ற ஒரு புதிய புரட்சிகர சமதர்ம சமுதாய நிர்மாணத்தைக் குறித்து நிற்கின்றது.

ஒற்றைக் கைத்துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தனது இலட்சியங்களை அடைந்துகொள்வதில் கடந்த 22 வருடங்களுக்குள் அடைந்துள்ள வளர்ச்சியினை நோக்கும் போது மேற்கூறப் பட்ட வினாக்களுக்குரிய பதில்களைக் கண்டு கொள்வது இலகுவானதாகும்.

கடந்த 22 ஆண்டுகளில் புலிகள் இயக்கத்தின் தலைமையில் தேசிய விடுதலை, சமூக விடுதலை என்ற அரசியல் குறிக்கோள்களில் தமிழீழ மக்கள் கணிசமான வளர்ச்சியினை அடைந்திருக்கின்றனர். தமிழீழ அரசின் நிர்மாணத்தின் அவசியம் மக்கள் மனங்களில் ஆழமாய் பதிந்திருப்பதுடன், அத்தகைய அரசின் நிர்மாணம் நடைமுறைச் சாத்தியமாயும் உணரப் பட்டிருக்கின்றது. ஈழத்தமிழர் வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத தேச உருவாக்கம் (Nation Building) தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தேசம் என்ற பெரிய அலகினுள் ஊர், பிரதேசம் என்று சிறு அலகுகளைத் தாண்டி மக்கள் ஒன்றிணைந்து கூடிவாழும் மனப்பாங்கு தோற்றம் கண்டு வருகிறது. மதம், சாதி என்ற சமூகக் கூறுகளால் பிளவு பட்டுப்போகாது அவற்றையும் கடந்த ஒரு திரட்சியாய் உருப்பெறுவதற்கான அடித்தளம் இடப்பட்டிருக்கிறது. இந்த வகையில் தேசிய ரீதியான ஒடுக்கு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலடிகள்!

முறைகளிலும் சமூக ரீதியான ஒடுக்கு முறைகளும் அகன்ற ஒரு புதியதோர் சமூகத்தினை நிர்மாணிக்கக்கூடிய ஓர் சக்தியாக விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதனை 22 வருட கால வரலாற்றுப் பதிவுகள் உறுதி செய்கின்றது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை அடையப்படுவதற்கும் தமிழீழ அரசு நிர்மாணிக்கப்படுவதற்கும் தமிழர் படையணி அத்தியாவசியமானது. இத் தமிழர் படையணியே தமிழீழ அரசின் பாதுகாப்புப் படைகளாக அமையும். எந்தவொரு அரசும் தனது பாதுகாப்புக்காக தரைப்படை, கடற்படை, வான்படையினைக் கொண்டிருப்பது போல தமிழீழ அரசும் அத்தகைய படையணிகளைக் கொண்டதாக அமைய வேண்டும். இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படையணிகளே, தமிழீழ அரசு முழுமையான நிர்மாணம் பெறும்போது தமிழீழ தேசத்தின் பாதுகாப்புப் படைகளாக அமையப் போகின்றன. எந்தவொரு அரசும் மரபுப்போரினை எதிர்கொள்ளக்கூடிய வகையிலேயே தனது பாதுகாப்புப் படைகளைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கும். இந்தவகையில், தமிழீழ அரசும், மரபுப் போரினை எதிர் கொள்ளக்கூடிய வகையிலேயே தனது பாதுகாப்புப் படைகளைத் தயார்ப்படுத்தி வைத்திருக்க வேண்டும். நாம் இவ்வாறு குறிப்பிடுவது, தமிழீழ அரசு என்றும் யுத்த முனைப்பு கொண்டிருக்கவேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல. மாறாக, சிங்களத்துடன் நீண்ட தரை எல்லைகளைக் கொண்ட தமிழீழம் தனது பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள, மரபுப்போர் வலுவுடைய, வலிமைமிக்க பாதுகாப்புப்படைகளைக் கொண்டிருக்கவேண்டிய அவசியத்தினை வலியுறுத்தவே இத்தகைய மரபுப்போர் வலுவுடைய ஓர் பாதுகாப்புப் படையினைக் கட்டியெழுப்புவது இலகுவானதொரு விடயமல்ல. ஏனெனில், ஆயுதம் தரிப்பது சட்டரீதியாக அங்கீகாரம் பெற்ற அரசுகளுக்குரிய உரிமையாக உலகரங்கில் கருதப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற அரசினைத் தவிர்தவர்கள் ஆயுதம் தரிப்பதனை அடக்கி ஒடுக்குவதற்கு அனைத்துல அங்கீகாரம் பெறுப்படுவது ஒப்பீட்டளவில் இலகுவானதாகும். இத்தகைய சூழலில், வேறு நாடுகளின் ஆதரவின்றி ஓர் ஆயுதம் தாங்கிய படையணிகளை வளர்த்தெடுப்பது மிகக் கடினமான செயற்பாடாக இருக்கும். பல்வேறு காரணங்களுக்காக ஆயுதப் போராட்டத்திற்கு உந்துசக்தி அளிக்கும் பல்வேறு நாடுகளும் தமது தேவைகள் பூர்த்தியான பின்னர் ஆயுதம் களைவினையும் தமது முக்கிய செயற்பாடாக கொள்வது பொதுவான நடமுறையாக இருந்து வருகிறது. உதாரணமாக சிறீலங்கா அரசினைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்கு சிறீலங்கா அரசின் மீது தமிழ்ப் போராளிகள் மூலம் ஆயுத அழுத்தம் கொடுக்க முனைந்த இந்திய அரசு, 1987 இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகத் தனது நோக்கினை நிறைவேற்றும் நிலை உருவாகியதுடன் மேற்கொள்ள முனைந்த ஆயுதக் களைதல் முயற்சியினைக் குறிப்பிடலாம்.

இத்தகைய பின்னணியிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 22 வருட கால வளர்ச்சியினை நாம் நோக்க



வேண்டும். ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் இன்று மரபுப் போர் வலு கொண்ட தமிழர் படையணிகளைக் கொண்ட ஓர் பெரும் அமைப்பாக வளர்ச்சி கண்டிருப்பது ஒரு மகத்தான சாதனையாகும். தரைப்படை, கடற்படை, வான்படை என்ற வகையில் தமிழீழ அரசின் பாதுகாப்புப்படைகளாக புலிகள் இயக்கத்தின் படையணிகள் வளர்ச்சி கண்டுவருகின்றன. இன்று புலிகள் அமைப்பின் தரைப்படை பல்வேறு படையணிகளைக் கொண்டதாக வளர்ச்சி கண்டிருக்கிறது. அண்மையில் டாங்கி எதிர்ப்புப் படையணி, பீரங்கிப் படையணி போன்ற படையணிகள் புதிதாய் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக டாங்கிப் படையணி உட்பட மேலும் பல படையணிகள் உருவாக்கப்படுவது நடைமுறைச் சாத்தியமாகும். தமிழீழ தேசத்தின் கடற்படையாக வளர்ச்சி கண்டுள்ள கடற்புலிகள் அணியும் விரிவாக்கம் கண்டுவருகிறது. தமிழீழ கடற்பரப்பினை எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கும் நடைமுறையில் தமிழீழ கடற்படை மேலும் பலம் பெற்று வருவது அவசியமானதாகும். தமிழீழ வான் பரப்பினை எதிரியிடமிருந்து பாதுகாக்க தற்போது விமான எதிர்ப்புப் படையணியும் களத்தில் குதித்துள்ளது. தமிழீழத்தின் வான்பரப்பில் தமிழீழ விமானங்கள் பறக்கும் நிலை தோற்றம் பெறுவது எதிர்காலத் தேவையாய் இருக்கும்.

இந்த வகையில், புலிகள் இயக்கத்தின் 22 வருடகால வளர்ச்சி, ஈழத் தமிழ் மக்கள் தமக்கென அமைக்கும் நாட்டிற்கான பாதுகாப்புப் படையணிகளை உருவாக்கியுள்ளமை தமிழீழ மக்களின் வரலாற்றில் முக்கியமானதாகும்.

இதனைவிட, தமிழீழ அரச நிர்மாணத்திற்கும் அதன் நிர்வாகத்திற்குமான அடித்தளமாக பல்வேறு கட்டுமானங்கள் புலிகள் இயக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளன. இக் கட்டுமானங்கள் உருவாகும் தமிழீழ தேசத்தின் அத்திவாரமாய் உள்ளன.

நாம் இவ்விடத்தில் அரசு (STATE) என்பதனையும் அரசாங்கத்தினையும் (GOVERNMENT) வேறுபடுத்திப் பார்த்தல் அவசியமானது. தமிழில், அரசு, அரசாங்கம் ஆகிய இரண்டும் ஒன்றாகப் பார்க்கப்படும் அல்லது ஒன்றோடு ஒன்று குழப்பிக் கொள்ளப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படும் பதங்க ளாக அமைந்துவிட்டன. நாட்டின் நிர்வாகத்திற்கு அவசியமான சட்டமியற்றல்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை, பாதுகாப்புத்துறை உள்ளடங்களான நாட்டை நிர்வகிப்பதற்குத் தேவையான கட்டுமானங்கள் பொதுவாக அரசு என்ற பதத்தால் போத்துக்கேயர் ஒல்லாந்தர் குறிக்கப்பட அந்தக் கட்டுமானங்களை நிர்வகிக்கும் அலகாக அரசாங்கம் அமைந்திருக்கிறது. உதாரணமாக சிறீலங்காவின் பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்கனவே அரசாக அமைந்துள்ள சிறீலங்கா அரசின், நிர்வாகத்தை வழிநடாத்தும் அரசாங்கத்தை அமைத்துக் கொள்ளவே தமக்குள் போட்டிபோட்டுக்கொள்கின்றன. சிங்கள தேசத்திற்கு அரசு உள்ளது. அரசாங்கத்தை அமைப்பதற்காகவே அவர்கள் தமக்குள் மோதிக் கொள்கின்றனர்.

ஆனால் தமிழர் என்ற குடியேற்ற ஆட்சிக் காலத்தில் தனது அரசினை இழந்துவிட்டது. இதனால் தமிழர்களுக்கு அண்மைக்காலம் வரை அரசும் இல்லை; அரசாங்கமும் இல்லை; சிங்கள பௌத்த பேரினவாதம் ஈழத்தமிழ் மக்களை விழுங்க முற்பட்டபோது அதில் இருந்து பாதுகாத்துக் கொள்ள தமக்கென ஒரு அரசு அமைக்கப்படுதல் அவசியம் என தமிழீழ மக்கள் உணர்ந்தனர். அந்த உணர்வை நடைமுறைச் சாத்தியமாக்கும் முயற்சியில் விடுதலைப்புலிகள் இயக்கம் அடைந்துள்ள வளர்ச்சி 22 வருடகால வரலாற்றில் மிக முக்கியமானதாகும்.

விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கு நடாத்தி வரும் போராட்டம், மக்கள் மனதில் தமிழீழ அரச உருவாக்கம் குறித்த நம்பிக்கை விதைகளை நாட்டியுள்ளது. எதிரியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நிறுவப்பட்ட அரசு நோக்கிய அரசு (DEFACTO STATE) அந்த நம்பிக்கை ஊற்றுக்களை மக்கள் மனங்களில் தோற்றுவித்தது. நடைமுறைக்கு சாத்தியமில்லாதது என்று கருத்தப்பட்ட பல விடயங்கள் சாத்தியமானது தான் என்ற கருத்தியல் மாற்றம் மக்கள் மனங்களில் நிகழ்ந்தது. தமிழீழ அரசுக்குரிய கட்டுமானங்கள் உருவாக்கப்பட்டபோதே இம் மாற்றங்கள் நிகழ்ந்தது. தமிழீழ நிர்வாகத்துறை, தமிழீழ காவல்துறை, நீதித்துறை, தமிழீழ வைப்பகம், உட்கட்டுமானங்கள் குறித்த வேலைத் திட்டங்கள், உட்பட பல்வேறு துறைகளின் செயற்பாடுகள் இந் நம்பிக்கைகளை மக்கள் மனங்களில் தோற்றுவித்தது.

தமிழீழ மக்களின் மீது தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டு வந்த சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழீழம் குறித்த தமிழீழ மக்களின் உளவியல் நம்பிக்கையினைச் சிதைப்பது தமது மேலாதிக்கத்திற்கு அவசியம் என உணர்ந்து இராணுவ ஆக்கிரமிப்பினை அரசு நோக்கிய அரசு அமைந்திருந்த பிரதேசங்களை நோக்கித் திருப்பியது. யாழ் குடாநாட்டினை ஆக்கிரமித்தது. இத்தகைய ஆக்கிரமிப்புப் போரின் விளைவாக 'தமிழீழம்' என்பது நடைமுறைச் சாத்தியமற்ற வெறும் கனவு என்ற உளவியல் எண்ணத்தினை தமிழ் மக்கள் மனதில் தோற்றுவிக்க பகிரத முயற்சியினை எடுத்துவருகிறது.

சிங்களத்தின் முயற்சி ஒரு சில குறுங்கால நன்மைகளை சிங்களத்திற்கு வழங்கிய போதும், இவ் ஆக்கிரமிப்புப்போர் தமிழ்த் தேசியத்தினை மேலும் வளர்த்தது. இப்போரின் தவிர்க்கமுடியாத வரலாற்று வளர்ச்சிப் போக்கு தமிழீழத்தின் அவசியத்தினை ஆழமாக உணர்த்தியது. யாழ் குடாவில் அமைக்கப்பட்டிருந்த அரச கட்டுமானங்கள் சிதைக்கப்பட்டபோது குறிப்பிடத்தக்களவு நம்பிக்கையீனம் மக்கள் மத்தியில் வெளிப்பட்ட போதும், இன்றைய நிலையில் மக்களின் நம்பிக்கையும் உறுதியும் மேலும் வலுப்பெறத்தொடங்கியுள்ளது. சிங்களம் நடாத்தும் ஆக்கிரமிப்புப் போரில் வெற்றிபெறாதுவிடின் தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலம் அடிமைத்தனம்மிக்கதாய் அமைந்து விடும் எனும் உணர்வு ஒருபுறமும், 'ஜெயசிக்குறு' சமரில் விடுதலைப் புலிகள் இயக்கம் காட்டிவரும் வீரமிகு சாதனைகள் மறுபுறமாய் மக்கள் மத்தியில் புத்தெழுச்சியினைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த 22 வருட காலத்தில் ஈழத் தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணமித்துள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் தேசியவிடுதலை, சமூக விடுதலை என்பதனை அடைந்து கொள்வதில் எந்தவித விட்டுக்கொடுப்புமற்ற போராட்டத்தினை நடாத்தும் சக்தியும் உறுதியும்மிக்கது என்பதனை வரலாறு பதிந்துவைத்துள்ளது. தற்போது போர் நெருக்கடிகள் மக்கள் மீது துன்பச் சுமையினைச் சுமத்தியுள்ள போதும், போராட்ட இலக்கில் வெற்றிபெறும் போது கிடைக்கக்கூடிய அரசியற் சுதந்திரமும் தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வை சுபீட்சம் மிக்கதாய் மாற்றும். உலகப்பந்தில் பல சாதனைகளைப் புரியும் நாடாய் எமது தாயகம் பரிணமிக்கும்.

இத்தகைய ஓர் எழுச்சி எப்படி சாத்தியமானது? வராது வந்த மாமணி போல் தமிழர் தாயகத்திற்கு கிடைத்த தலைமையால் தான் இது சாத்தியமானது. 1970–களின் ஆரம்பத்தில் 'தம்பி' என்ற பதிவைக்கொண்டிருந்த தலைவர் இன்று போராளிகள் நெஞ்சில் அண்ணளாவாகவும் தமிழீழ மக்கள் மனதில் தேசியத் தலைவராகவும் பதிவு செய்யப்பட்டிருப்பது 22 வவுட வளர்ச்சியினைக் காட்டும் அதிஉச்ச குறியீடு அல்லவா!

**வேந்தன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாங்குளம் பகுதிக்காடுகளில் 'மரணம்' இப்பொழுது மறைந்து வாழ்கின்றது

அண்மையில் 'ஜெயசிக்குறு' நடவடிக்கை பகுதிகளுக்கு சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சினால் அழைத்துவரப்பட்ட செய்தியாளர் ஒருவர் 'ஐலண்ட்' பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள்....

**மாங்குளம் காடுகளில் இந்த நாட்களில் மயான அமைதி காணப்படுகிறது. அங்கு வசித்து வந்த யானைகள், சிறுத்தைகள், கரடிகள், மான்கள், காட்டுப் பன்றிகள் எல்லாம் காட்டைவிட்டு வெளியேறி ஓடிவிட்ட நிலையில், பறவைகள் மட்டும் அங்கு காணப் படுகின்றன. அவையும் கூட அச்சத் துடன் கிறீச்சிடும் ஓசைதான் கேட் கிறது. வெள்ளை, நீலநிற வண்ணாத் துப்பூச்சிகள் மட்டுமே அப்பகுதியில் பறந்து திரிகின்றன. மரணம் மாங் குளம் காடுகளில் மறைத்து வாழ்கிறது.**

சிறுபற்றைகளுக்கு கீழே முகமெல் லாம் சேறும், தூசியும் பூசப்பட்ட நிலையில் தலைக்கு பச்சைநிற உருமறைப்பு அங்கி அணிந்தவாறு விரல்கள் 50 கலிபர் துப்பாக்கிகளின் விசைகளில் இருக்க, உருமறைப்பு செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய் களை எவரும் காணலாம்.

மூன்று மைல்களுக்கு அப்பா லுள்ள கண்ணுக்குத் தெரியாத "எதிரி யால்" ஏவப்படும் 81 மி.மீ மோட் டார் மற்றும் ஆட்லறி ஷெல்களால் சில நிமிடங்களுக்கு ஒருமுறை அமைதி குலைந்து கொண்டிருந்தது.

துப்பாக்கி ஏந்திய இராணுவத்தி னர் அவதானமாக ஓசையெதுவும் எழாதவாறே தமது அசைவுகளை மேற்கொள்கின்றனர் ஓசையும் இரா ணுவம் இருக்கும் இடத்தை அடர்ந்த மறைவுக்கு பின்னால் இருந்து உன் னிப்பாக அவதானித்துக் கொண்டி ருக்கும் புலிகளுக்கு காட்டிக்கொடுத்து விடக்கூடும். எந்தவொரு சத்தமும் அவர்களுக்கு புலிகளின் 81 மி.மீ எறிகணைகளால் மரணத்தை ஏற்ப டுத்தக்கூடும்.

மாங்குளம் ஒரு அடர்ந்த காட்டுப் பகுதி. பத்து யாருக்கு அப்பால் பார்க்க முடியாது. மரம் மரமாக முன்னேறும் படையினர் அடுத்த மரத்துக்குப் பின்னால் இருக்கும் ஒரு புலிகள் உறுப்பினருடன் முகத்துக்கு முகம்மோத நேரலாம். கிளைமோர் கண்ணிவெடி மீது அல்லது ஜொனி மிதிவெடி மீது நடக்கநேரலாம்.

அதைவிட அதிகம் அச்சமூட்டு வது மோட்டார் ஷெல்தாக்குதல். புலிகள் தமது கைகளில் இந்தப் பகுதி இருந்த போது ஒவ்வொரு மரத்திற் குமான வீச்சை கணித்து பெயின்ரி னால் இலக்கமிட்டு தமது மோட் டார் இயக்குனர்களுக்கு கொடுத்து வைத்திருக்கின்றனர். ஒரு புலி உறுப் பினர் ஏதாவது ஒரு மரத்திற்குப் பின்னால் இருந்து குறிப்பிட்ட மரத் தடிக்கு படையினர் வரும்போது சைகை கொடுக்க அந்த மரம் நோக்கி சரமாரியான பீரங்கித்தாக்குதல் நடத்தப்படுகிறது. பெரும்பாலும் சிறப்புப்பயிற்சி பெற்ற இராணுவப் பிரிவுகளை உள்ளடக்கிய 53 ஆவது, 55 ஆவது, 56 ஆவது படைப்பிரிவு கள் மொத்தமாக 30 ஆயிரம் பேர் மாங்குளம் நோக்கிய நகர்வில் ஈடு பட்டுள்ளனர். வடக்கே கிளிநொச்சி யில் மேலும் 10 ஆயிரம் படையின ரைக் கொண்ட 54-வது படைப் பிரிவு இந்த நடவடிக்கையில் எந்த நேரமும் இணைந்துகொள்ளத்தக்க நிலையில் வைக்கப்பட்டுள்ளது. "பாரிய சண்டை எமக்கு முன்னால் உள்ளது ஆகக்குறைந்தது ஆயிரம் விடுதலைப் புலிகள் மாங்குளம் நகரத்தில் நிலை கொண்டுள்ளனர் என நாம் கணித் துள்ளோம். அவர்கள் கடும்சண்டை யில் ஈடுபடுவர் என எதிர்பார்க்கி றோம்" என வடக்கு- கிழக்கு நடவ டிக்கைத் தளபதியும் சிறீலங்கா இரா ணுவத்தின் இரண்டாவது சிரேஷ்ட உயரதிகாரியுமான மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரிய தெரிவித்தார்.

ஆனால் அந்த ஆயிரம் பேர் மட்டும் அங்கு தனியாகவில்லை. நூற்றுக்கணக்கான விடுதலைப்புலி கள் மாங்குளத்திலிருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி துணுக்காய் பகுதிகளில் நிலை கொண்டுள்ளனர்.

மாங்குளம் பலமாக அரண் செய் யப்பட்டுள்ளது. பெரும் மோதலை எதிர்பார்த்து புலிகளின் பிரதான வீதியில் ஜொனிவெடிகள், அமுக்கக் கண்ணிவெடி, நிலக்கண்ணிவெடி, பதுங்குகுழிகள், சுரங்கங்கள் என பல்வேறு வகையாலும் அரண் செய் துள்ளனர். இந்த வீதியில் நகர்வது பெரும் இரத்தக் களரியை ஏற்படுத்தும்.

பிரதான வீதிக்கு கிழக்கே 15 கிலோ மீற்றர் தூரத்திற்கு ஆயிரக் கணக்கான கடற்படையினர் பாது காப்பில் ஈடுபட்டுள்ளனர். இதுபோல வீதிக்க மேற்குப் பகுதியில் விமானப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ள னர். மேலும் பொலிசாரும், விஷே அதிரடிப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் கொழும்பிலுள்ள அரசி யல்வாதிகள், ஜெனரல் போல படை யினர் எவரும் இந்த நடவடிக்கை முடியும் தறுவாயில் உள்ளது என நம்பி தம்மைத்தாமே முட்டாள்க ளாக்கிக் கொள்ளும் நிலையில்இல்லை.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் போர்க்கள...

ஆங்கில மூலம் அஜித்தா கதிர்காமர்
தமிழில் தென்றல்

இலங்கையில் பெண்கள் குழுக்கள் தங்களது பல வகைப்பட்ட நியாயங்களுக்காகவும் போராடும் அதே வேளையில், சமூக வரையறைக்குள் பெண்களின் பங்களிப்பானது ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்திருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். போரில் போர் வீரர்களாகவும், களத்தில் சண்டை பிடிப்பவர்களாகவும், மற்றும் எந்தப் பக்கத்திலாயினும் தம்மால் இயன்றவரை பெண்கள் பங்களிக்கின்றனர். வடக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெண்கள் அதிகளவில் இணைந்து வருகிறார்கள் என்பது கண்கூடு. அதேபோல் தெற்கிலும், இராணுவத்திலும் காவற்துறையிலும் சேரும் பெண்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. அலுவலக வேலைகளில் பெண்கள் அடையாளத்துக்காக மட்டுமல்லாமல் உண்மையான யுத்த வீரர்களாக திறமையாகப் பயிற்றப்பட்டு எதிரியை நகர வீதிகளிலும் இதனைவிட கடினமாகவுள்ள காட்டுப் பகுதிகளிலும்கூட சந்தித்துப் போரிடும் வல்லமை உடையவர்களாகவே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

நவீன காலப் பெண்களுக்கு இத்தகைய பங்களிப்பு புதிதான ஒன்றாக இருக்கலாம். ஆனால் உண்மையில் வரலாறு வேறுவிதமாகவே உள்ளது. மனித வரலாற்றுக் காலம் பூராவும் போர்க் களத்தில் உக்கிரமாக நின்று ஆண்களைப் பெண்களே தூண்டி வந்துள்ளார்களெனத் தெரியவருகிறது. கொள்ளைகளிலும், படையெடுப்புக்களிலும் ஆண்களோடு பெண்களும் சேர்ந்து போயிருந்தார்கள். யுத்த களங்களில் போராட பெண்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். போர் முனைகளில் காயமடைந்த ஆண்களையும் பெண்களே பராமரித்தனர். போர்க் களங்களில் ஆண்கள் நிற்க வீட்டு வேலைகளை பெண்களே கவனித்து வந்தார்கள் என்பதும் உண்மை. தமது நாளாந்த வாழ்க்கைக்குத் திரும்பிய காயப்பட்ட போர் வீரர்களை பராமரிக்க இவர்கள் தயாராக இருந்தனர்.

பெண்களின் பங்களிப்பில்லாமல் போர் எதுவும் நடைபெற்றதாக தகவல்கள் இல்லை. பெண்கள் சாதாரணமாக வீட்டை பராமரிப்பவர்களாகவும் குழந்தைகளை பெற்றுக் கொள்ளுபவர்களாகவும் அண்மைக் காலத்தில் பெரும் மனக்குறையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைப்படி வருமானம் பெற்றுக் கொடுப்பவர்களாகவும் மட்டுமே சமுதாயத்தில் இடம்வகிக்கிறார்கள் என்று நம்பியிருப்போருக்கு, இந்த நாட்டில் பெண்கள் விரும்பி அடையக்கூடிய புதிய வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வது இயலாது இருக்கும். இது ஆண்களோடு எவ்வித தடையுமின்றி பெண்களும் சரிசமமாக தடம்பதிக்க ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வாய்ப்பும் ஆகும்.



## எதிர்பாராதது

தற்கால பெண்ணொருத்தி தனது நாட்டைப் பாதுகாப்பதற்காக ஆயுத மேந்துகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கின்றாள். இதன்மூலம் காலப்போக்கில் தனது குடும்பத்தையும் வீட்டுச் சூழலையும் பிறக்கப்போகும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்கின்றவர்களாக மாறுகிறாள். இராணுவ அல்லது காவற்துறை சீருடையில் இவள் எதிர்க்கும் எதிரிப்படையிலும் கூடுதலாக பெண்களே காணப்படுகின்றனர். இது மேலும் மேலும் அதிகரித்துச் செல்கிறது. விடுதலைப்புலிகளின் பெண்கள் முன்னணியானது முன்னேறும் சண்டைப்பிரிவுகளாகவும், தற்கொலைக் குண்டுதாரிகளாகவும் இருக்கிறது.

மூர்க்கத்தனமான சண்டைக் களங்கள் பெண்களுக்குரியனவல்ல என்று அநேகர் கருத்துத் தெரிவிக்கலாம். எவ்வாறாயினும் பெண்கள் ஆண்களைப் போன்றே ஆக்ரோஷமுள்ளவராகவும் போராட்டத் துடிப்பு மிகுந்தவர்களாகவும் உள்ளார்கள் என்று பெண்களைப் போர்த்திறன் பெற்றவர்கள் என வாதாடுபவர்கள் குறிப்பிடுகிறார்கள். மூன்றாம் மண்டல நாடுகளிலுள்ள பல விடுதலை இயக்கங்கள் சண்டைக்கான விருப்பப் படியான ஆட்சேர்ப்பில் பெண்களைச் சேர்த்துக் கொண்டமை இதற்கு சான்று பகிர்கின்றது.

இதனால் நாம், ஆண்களைவிட பெண்கள் கூடுதலாக சாவை விளைவிக்கின்ற சூழ்நிலையை எதிர்கொள்கின்றோமோ?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீரர்களாகவும் வீரர்களாகவும்



கம்பீரமான, நிமிர்ந்த தன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக சில வேளைகளில் சாதாரண வளர்த்தியுடன் ஆயுதமேந்திக் கொண்டு வீதிகளில் நடந்து செல்லும் பெண் காவற் துறை உறுப்பினர் ஒருவரை கருதுகோளாக எடுங்கள்!

அவர்களுடைய நீளக் காற்சட்டைகள், சண்டைச் சப்பாத்துகள், தொப்பிகளுக்குள்ளே நீளமான கூந்தல் லாவகமாக மடித்து வைக்கப்பட்டுள்ள தன்மை, கடும் பயிற்சியினால் கிடைத்த தன்னம்பிக்கையின் மூலம் ஆயுதத்தை எளிமையாக ஏந்தி வைத்திருக்கும் பாணி ஆகியவற்றைப் பார்க்கையில் உண்மையில் ஒருவர் "இந்தப் பெண்கள் என்ன சிறீலங்காப் பெண்களின் புதிய ஒரு வகையினரோ" என ஆச்சரியப்படுவார்.

இவர்கள் நிற்கும் சோதனைச் சாவடிகளில் விசாரணைக்காக தடுத்து நிறுத்தப்படும் போது தான் பயப்படுவதாக எமக்குத் தெரிந்த ஒரு பெண்மணி கூறினார். இவர்களைப் பார்க்கும்போது அவர்களில் தாமாக வரவழைத்துக் கொண்ட ஒரு மூர்க்கமான வலிந்து தாக்கும் தன்மை தென்படுவதாகவும் மேலும்கூறியுள்ளார்.

பெண்களை இந்த யுத்த களங்களில் சண்டைபிடிப்பதற்காக இராணுவத்தில் சேரத் தூண்டியது என்ன வாயிருக்கும்? தனது தாய் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்ற நாட்டுப்பற்றுடைய கடமை உணர்வா? அல்லது இந்த ஆண்கள் உலகத்தில் தன்னுரிமையை நிலைநாட்டவா? இல்லாவிடின் அதிகாரத்தின் மீதும் கட்டுப்படுத்தல் மீதும் கொண்டுள்ள அவாவா?

## சிறிய தலைக்குனிவு

முன்னைநாள் இராஜதந்திரியான மனெல் அபயசேகரா தனது பார்வையில், இராணுவத்தில் இருப்பது பெண்களோ, ஆண்களோ என்பது பிரச்சினை அல்ல எனக் கூறுகிறார். ஆனால் விடுதலைப்புலிகளைப் பொறுத்தமட்டில் குண்டுத் தாக்குதல்கள் போன்ற மூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் பெண்கள் ஈடுபடுவதும் இந்த நடவடிக்கைகள் புகழப்படுவதும் பாராட்டப்படுவதும் சமூகத்தையும் பெண்களையும் நலிவுறச் செய்கின்றன.

"ஒழுங்கான ஒரு இராணுவ அமைப்பெனில், அங்கு வளக்கங்கள் விதிகளாக்கப்பட்டிருக்கும். ஆனால் ஒரு பயங்கரவாதக் குழுவொன்றில் இலக்கை எட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் சகலவித அணுகுமுறைகளும் இருக்கும். இதில் ஈடுபடுவது என்பது பெண்களைப் பொறுத்த மட்டில் பெருமைக் குறைவை ஏற்படுத்தும். அவர்கள் உயிரை உயிராக மதிப்பதில்லை."

தேசிய பெண்கள் கழகத்தின் தலைவராக இருக்கும் மனெல் பெண்கள் துப்பாக்கிக்கும் அதன் வழி வந்த வன்முறைகளுக்கும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு அவர்கள் மனதில் தோன்றும் எத்தகைய உளவியல் தீர்மானங்கள் துணை போகின்றன என்பது பற்றி தன்னைத்தானே கேட்டுக் கொள்கிறார். விடுதலைப் புலிகளைப்பற்றிய தனது கருத்தில் சிலவற்றை இவர் கூறினார்;

"இவர்கள் எப்பொழுதும் அசாத்தியத் திறமையுடையவர்களாக இருப்பதைக் கண்டு அதிசயப்படுகின்றேன். ஏனெனில் மற்றவரையும் போலல்லாது தற்கொலையாளி ஒருவர் அசாத்தியத் திறமைகளைக் கொண்டிருக்க வேண்டும். நோயாளியாக இருந்தாலும் செத்துக்கொண்டிருப்பவராக இருந்தாலும் எல்லோரும் வாழ்வதற்காகவே போராடுகின்றார்கள். இவர்கள் தாம் சாக வேண்டும் என்று விரும்பினால்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதற்கு சரியான காரணம் ஒன்று இருந்தே ஆகவேண்டும். ஆனால் இந்தச் சாவு அர்த்தமுள்ள ஒன்றாக இருக்கவேண்டும். நாங்கள் தற்கொலை செய்வதற்கு, சிலவேளைகளில் ஏதேனும் ஒன்றை இழந்த தாக்கத்துக்கு உட்பட்டிருக்கலாம். அல்லது வேறுபல உளவியல் காரணங்கள் இருக்கலாம். ஒரு தற்கொலைக் குண்டுதாரி ஏதோவொன்றை அழிக்கிறாள். அதன் மூலம் தன்னைத்தானேயே அளித்துக் கொள்கிறாள். வெறுப்பும் மாயை நீங்கிய தன்மையுமே இதற்கு காரணம் ஆகும்".

வணிக, தொழில்சார் பெண்கள் ஒன்றியத்தின் இணை செயலாளராகவும் தொழிற்துறை ஒன்றில் காரியதரசியாகவும் கடமையாற்றும் மல்காந்தி டி.சில்வாவிடம் பெண்கள் ஆயுதமேந்த தகுதியாவதற்கு எத்தகைய ஆளுமையைக் கொண்டிருக்கவேண்டும் என்ற கேள்வியைக் கேட்டேன்.

அவருடைய பதில் வருமாறு. "குறிப்பிட்ட பெண் உளவியல் ரீதியாக இதன் பாதிப்புக்குள்ளாகி இருக்க வேண்டும், கசப்பான அனுபவங்களைக் கொண்டிருக்க வேண்டும். சிலவேளைகளில் தங்கள் அன்புக்குரியவர்களை இவ் வன்முறையினால் இழந்திருக்க வேண்டும். இவைதான் அவளை ஆயுதமேந்தச் செய்கின்றன".

ஆனால் இவருடைய கருத்தின்படி, ஆயுதப்படை ஒன்றில் சேருவதற்கு பழிவாங்கும் நோக்கமும் காரணமாக இருக்கலாம் என்கிறார். இது ஒரு வகை "பாடம் புகட்ட வேண்டும்" எனும் போக்கு. ஆனால் இந்தக் கொள்கையானது ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ இருக்கக் கூடாத தவறான இலக்கு கொண்ட கொள்கையாகும்.

ஆக மொத்தத்தில் இது சமத்துவம் கேட்கும் பெண்களின் கோரிக்கைகளில் ஒரு சாதகமான முன்னேற்றமாகும். அத்துடன் இம் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் இற்றை வரை பெண்கள் எட்டியிராத சிகரங்களைத் தொடுவார்கள் என்பது நிச்சயம்.

## அந்தஸ்து

ஒரு புகழ் பெற்ற வணிகத் துறைப் பெண்மணியாக இருக்கும் ராணி ரட்னாயக்கா, பெண்கள் யுத்தத்தில் ஈடுபடுதல் எனும் கோட்பாட்டை எதிர்க்கிறார். ஏனெனில் இவரது கருத்துப்படி, குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்கும் காரணிகளுள் பெண்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர். பெண்கள் யுத்தத்துக்கு வெளியே போகும்போது குழந்தைகள் தவறான வழிகளில் செல்லத் தலைப்படுவர் என்பது இவரது விவாதம். சில பெண்கள் ஆயுதப் படையில் சேர்ந்து சில உயர் பதவிகளை அடைந்திருப்பதையும் அவர்கள் ஆயுதம் கொண்டு செல்வதையும் பார்த்து இவர் பெருமை கொள்ளும் அதே நேரம், போர் முனையில் சென்று பெண்கள் சண்டைபிடிப்பதை இவர் விரும்பவில்லை.

இவர் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளின் கொள்கைகளையும் நோக்குகின்றார். இப்போராளிகள் தங்களது நியாயத்திற்கு அப்பால், தாங்களே தங்களுக்கான ஒரு வாழ்க்கை முறையை பகுத்துக் கொள்ளும் வாய்ப்பாகவே இதைப் பயன்படுத்துகின்றனர். பழகும் சுதந்திரமும், கருத்து மோதலுக்கான வாய்ப்பும் இவ்வியக்கத்தில் சேர்ந்து கொள்ளும் பெண்கள் அடையும் நன்மைகளாகும்.

அல்லாது போனால் வடக்கின் மரபியல் கட்டுப்பாடு நிறைந்த வாழ்க்கை முறையானது எந்தவொரு இளம் பெண்ணுக்கும் இந்த வாய்ப்பை வழங்கமாட்டாது.

விடுதலைப் புலிப் பெண் போராளிகளின் கொள்கையைப் பற்றியும் இலட்சிய தற்கொடை பற்றியும் ஒருவர் கேள்வி கேட்டால் அக் கேள்விக்கு கீழ்வருவன விளக்கமாக அமையும்.

தமது தாயக நிலத்தில் சிறீலங்கா இராணுவத்திற்கு எந்த இடமும் உரித்தாகாது என்று உறுதியாக நம்பும் தமிழ் கெரில்லாப் பெண் போராளிகள் படையினரோடு சண்டை பிடிப்பதற்கு தெளிவான திடகாத்திரமான உறுதி பூண்டிருக்கிறார்கள். தங்களுடைய தாய் நாட்டை விடுவிக்க எத்தனை வருட காலம் சென்றாலும் இந்த அசைக்க முடியாத நம்பிக்கை மூலம் போராட்டத்தைக் கொண்டு நடத்துவார்கள் என்பது உறுதி.

இந்த வைராக்கியப் பலமே இவர்களைப் போராடவும், தங்களது இராணுவ நடவடிக்கைகள் மூலம் கிடைத்த வெற்றிகளை அனுப



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விக்கவும் வழிகோலுகின்றன. இந்த வைராக்கியமே தங்களது சகாக்கள் போர்க்களத்தில் வீரச் சாவைத் தழுவிக் கொள்ளும் போது அவர்களை உளவியல் ரீதியாக தளர்வு றாமல் செய்கிறது. இதே வைராக்கியம்தான் உன்னத தற்கொடைகளைச் செய்ய இவர்களைத் தயாராக்குகின்றது. (அடேல் ஆன், விடுதலை புலிகளின் பெண் போராளிகள் 1993 பக்கம்–1).

பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு பாகுபாடு காட்டாத அதிகாரியாக இருக்கும் ராதிகா குமாரசாமியிடம் இதுபற்றிய கருத்துக்கள் பற்றி கேட்கப்பட்டபோது, பெண் போராளிகளின் கொள்கைபற்றிய தனது கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

"ஆயுதப் படைகளிலிருக்கும் பெண்களில் எண்ணப்போக்கு வெறுமனே சமூகம் இராணுவமயமாகி வருவதையே காட்டுகிறது. அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டும் பெரிய அறிகுறியாக இது எனக்குத் தெரியவில்லை. ஏனெனில் ஏற்கனவே ஒழுங்கு விதிகளின் படி இயங்கும் ஒரு விடுதலை அமைப்பில் இவர்கள் இணைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களாலேயே இவர்களுக்காக தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனவே இங்கு புதிதாக அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லையே. வெறும் சுடுதல் மட்டுமென்றால் இது சரியாக இருக்கும். இந்த நிலைப்பாடு ஆராயப்பட வேண்டும்.

சமூகத்திற்கு இதனால் என்ன பலன்கள் கிடைக்கும் என்பதுபற்றி பெண்கள் யோசிக்கவேண்டும். பிளவுகள் தோன்றிய சிறீலங்காவின் நிலைமைகள் பற்றி ஒருவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

சுதந்திரமாகச் சிந்திக்கும் ஆற்றலுடைய மக்கள் சிறீலங்காவில் இச் சிறிய பெண்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றப் பாய்ச்சலை அங்கீகரித்து, அதற்கு சார்பாக ஆதரவளித்தாலும் இதற்கப்பால், ஆயுதப் போராட்டத்தில் பெண்கள் பங்குபற்றுவதன் விளைவு பற்றி ஒருவர் கட்டாயம் சிந்தித்தே ஆகவேண்டும்".

## முன்னுரிமைகள்

தேசிய விடுதலைப் போராட்ட காலங்களைத் தொடர்ந்து அவதானிக்கையில், பெண்களின் பங்களிப்பு விரிவடைந்து சென்றதையும், அவர்களின் பங்களிப்பு புதிதாக வரையறுக்கப்பட்டு வந்ததையும் தெளிவாகக் காணலாம்.

கேள்வி என்னவென்றால் ஒரு தேசியம் எழுப்பப்படும்போதும் அல்லது ஆட்சிமுறை மாறும் போதும் இப்பங்களிப்பினை மீள வரையறை செய்வதும், பெண்மையை மீள வடிவமைப்பதும் எவ்வளவு தூரம் சமாதானம் தோன்றிய காலத்திற்கும் எடுத்துச் செல்லப்படும் என்பதாகும்.

அலுவல்களில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

இந்த உள்நாட்டு யுத்தத்தினால் சமூகம் தனது வளங்கள் அனைத்தையும் எதிரியோடு மேற்கொள்ளும் யுத்தத்திலேயே பயன்படுத்துகின்றது. அநேக மூன்றாம் மண்டல நாடுகளில் பெண்கள் ஆயுதப்போராட்டத்தில் பங்கேற்பது இதன் தேவையை எடுத்துக் காட்டுகின்றது. எவ்வாறாயினும் யுத்த நடவடிக்கைகளில் பெண்களையும் ஈடுபடுத்தும் நடவடிக்கையானது அவர்கள் பொது அரங்கில் முக்கிய கதாபாத்திரங்களாக மாறி இருப்பதையே காட்டுகின்றது. இங்கு கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் சமூக



போர்ச்சூழ்நிலையும் முரண்பாடுகளும், இயற்கை அழிவுகளும் பெண்களை அவர்களின் போராட்ட உணர்ச்சிகளையும் ஆழ மன உந்துதல்களையும் முன்னணிக்கு கொண்டு செல்ல உதவுகின்றன. ஆனால் எங்களைப்போன்ற ஆசிய நாடுகளிலுள்ள ஒருவர் இதனையிட்டு மிகவும் ஆச்சரியப்படலாம். பெண்ணொருத்தி ஆயுதமேந்தியதற்கு காரணம் ஒன்றில் நாட்டின் பாதுகாப்பாக இருக்கலாம், அல்லது விடுதலைப்புலிகளின் நியாயங்களின் எடுத்துக்காட்டுக்காக இருக்கலாம். இந்த செயல்முறை நடைபெற்று முடிந்ததன் பின் இவர்கள் உள்ளீட்டு வட்டத்தினுள் காணப்படும் இவர்களின் வெளித்தோற்றம் போர் முடிவடைந்தவுடனும் மறைந்து போகுமா? அல்லது இந்த யுத்த காலத்தில் இவர்கள் பெற்ற பால்சமத்துவம் என்ற பலன் அமைதி ஏற்படப் போகும் காலத்திற்கும் நீடிக்குமா?

இந்தக் கடைசி வாக்கியம் சுருக்கமாக எல்லாவற்றையும் தெளிவாக்குகின்றது. தற்காலப் பெண்போராளிகளின் நிலைப்பாடுகள் பற்றியும், விரைவில் வருமென எதிர்பார்க்கும் போர் முடிவுற்ற சிறீலங்காவில், அவர்களின் நிலை என்ன என்பது பற்றியும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வன்னிச் சமர்

## இரு தேசிய இராணுவங்களின் சமநிலை

**தமிழர்களின் நவீன போரியல் வரலாற்றில் ஒரு அடிப்படை மாற்றம் இடம்பெற்றுவருகிறது. தம் அரசியல் சுதந்திரத்தை நிர்ணயிப்ப தற்கான ஆயுத போராட்டப் பாதை யில், தமிழர்களின் போரிடும் ஆற்றல் செழுமைப்படுத்தப்பட்டு, நவீன தமி ழர் படை அணிகள் உருவாகிவரு வதை வன்னிப் போர்முனைகளின் கடந்த ஒரு வருடகால வரலாறு பதிவு செய்கிறது.**

அரசியல் இலட்சியத்தை வென் றெடுப்பதற்கான தமிழர்களின் ஆயு தப் போராட்டம், தன் போக்கினூடு முதிர்ச்சி கண்டு ஒரு தேசம் உரு வாகுவதற்கான அடிப்படை தேவைக ளில் ஒன்றான மரபு ரீதியாக போரிடும் ஆற்றல் கொண்ட போர் அணிகளை இன்று உருவாக்கி வருகின்றது. சிறு சிறு கெரில்லா அணிகளாக நகர ஆரம்பித்த விடுதலைப்புலிகளின் போர் அணிகள் இன்று சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவு, சிறுத்தை படைப்பிரிவு, இம்ரான் பாண்டியன் படைப்பிரிவு, மாலதி படைப்பிரிவு, விக்டர் கவச எதிர்ப்பு படைப்பிரிவு என பல்வேறு பாரிய போர் அணிகளாக உருவாகி எதிரியின் சுமார் 100,000 துருப்புக்களை போர் முனையில் கொண்டுள்ள எதிரியின் தரைப்படையினையும் விமான கடற் படைகளையும் நேருக்குநேர் எதிர் கொண்டு போராடி வருகின்றதை வரலாறு பதிவுசெய்துள்ளது.

★★★

சிறீலங்காவின் 9 படைப்பிரிவு களில் 4 முன்னணி பிரிவுகள் ஜெய சிக்குறு போர்முனையில் நிறுத்தப் பட்டுள்ளன. அமெரிக்க உதவித் திட்டங்களின் கீழ் பயிற்றுவிக்கப் பட்ட சிறீலங்காவின் ஏ.எம்.யூ எனப்படும் விஷேட படைப்பிரிவும் பிற அதிரடிப்படைகளும் போர் முனைக்கு நகர்த்தப்பட்டன. அதீத மாக குவிக்கப்பட்ட டாங்கிகளும், கிபீர் குண்டுவீச்சு விமானங்களும் தரைப்படை நகர்வுகளுக்கு ஆதர வான குண்டுவீச்சுக்களை மேற் கொண்டன. இதுதான் சிங்களத்தின் அதி உச்சபலமென கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களும், இரா ணுவ ஆய்வாளர்களும் வர்ணித்தனர்.

இப் போர் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய சர்வதேச இராஜதந்திர சமப்படுத்தல்களை சிங்கள அரசு திறம்பட புரிந்திருந்தது. இடப் பெயர்வுகளால் குவிக்கப்பட்டுள்ள மக்கள் வாழும் பிரதேசங்களை ஊடறுத்து வகுக்கப்பட்ட இத்திட் டம் ஏராளமான பொதுமக்கள் அழிவை ஏற்படுத்தும் என பிரித்தா னிய அரசிடம் முறையிடப்பட்ட போது முன்னைய பிரித்தானிய அரசின் அதிகாரி ஒருவர், சிங்கள அரசின் உண்மையான பாதைதிறப்பு முயற்சி இது எனவும் இதன்மூலம் யாழ் குடா மக்களுக்கு உணவு விநியோகத்தை மேற்கொள்ள சந்தி ரிகா முயல்வதாகவும் பதிலளித்திருந் தார். சந்திரிகா அரசின் தீர்வுப் பொதியும், திட்டமிடப்பட்ட பிரச் சார நடவடிக்கைகளும் ஜெயசிக்குறு விற்கு ஏற்புடைய சர்வதேச சூழ் நிலையை உருவாக்கிக் கொடுத்தி ருந்தது. யாழ் குடா மீதான ஆக்கிர மிப்பும் 'எடிபல' 'சத்ஜெய' நடவ டிக்கைகளை விடுதலைப்புலிகள் கையாண்ட யுக்திரீதியான தந்தி ரோபாய நடவடிக்கைகள் தந்த குழப்பமும் ஜெயசிக்குறுவிற்கு கண் மூடித்தனமான ஆதரவை சிங்கள தேசத்திடமிருந்து ஈட்டிக்கொடுத்தது.

ஆனால், ஒரு வருடகால போர் அனைத்து கணிப்பீடுகளையும் தலை கீழாக்கியது. தமிழ் விடுதலைப் போராளிகள் தமது அரசியல் இலட்சி யத்தை பாதுகாக்கவும் சிங்கள இனவாத அடக்குமுறையை முறிய டிக்கவும் என தாம் கொண்டுள்ள திடசங்கற்பத்தை நிரூபித்துள்ளனர்.

புளியங்குளம் மாங்குளம் நகர் களை பாதுகாக்க புலிகள் நடாத்தும் வரையறை செய்யப்பட்ட போர் நகர்வுகள் தமிழீழ விடுதலை அண் மித்து வருகின்றது என்பதற்கான ஆதாரங்களாகும். புலிகளின் கனரக படையணிகள் எதிரிப்படைகள் மீது நடாத்தும் பீரங்கி எறிகணைத் தாக்குதல்கள் தமிழர் சேனைகளின்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திட்டமிடல் – போரிடும் ஆற்றலை புலப்படுத்துகின்றது. விக்டர் கவச எதிர்ப்பு போர் அணிகள் இன்று சிங்கள தரைப்படை நகர்வுகளின் முள்ளந்தண்டாக திகழும் டாங்கி அணிகளை நிலைகுலைய செய்து வருகின்றது.


★★★



இன்று இலங்கைத் தீவானது இரு உட் கட்டமைப்புக்களை கொண்ட இராணுவங்களை கொண்டதாக உருவாகிவிட்டது. இரு தேசியங்களை கொண்ட தீவின் சமநிலை இவ்விரு இராணுவங்களுக்கு இடையேயான சமநிலையில்தான் நிறுவப் படவுள்ளது.

சிங்கள தேசம் இன்று தன் இனவாத தேசிய அடையாளத்தை தமிழர் தேசியத்தை தகர்த்தெறிவதன் மூலம் பாதுகாக்க முனைகிறது. இவ் அழிப்பு முயற்சியின் மூல ஆதாரமாக சிங்கள இராணுவம் திகழ்கின்றது.

இவ் மூல ஆதாரத்தை சூழவே சிங்கள தேசத்தின் சமூக பண்பாட்டு மத வாத நடவடிக்கைகள் மெதுவாக நகர்த்தப்பட்டு பலப்படுத்தப்பட்டது. தமது பொருளாதார



இழப்புகளையும் சுமைகளையும் தாங்கிக் கொண்டு தம் மூலஉத்தி வெற்றி அடைய சிங்களதேசம் உழைத்தது. இவ் இனவெறி நடவடிக்கைகளின் பின்னால் ஒரு பாரிய அரசியல் பண்பாட்டு தலைமை தோற்றுவிக்கப்பட்டது. ஜெயவர்த்தனா முதல் சந்திரிகாவரை இவ் இராணுவ மயப்படுத்தப்பட்ட சிங்கள இனவெறி நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்களாகவும், பிரதிபலிப்பவர்களாகவும் திகழ்ந்தனர்.

இன்று சிறீலங்காவின் பெரும் பகுதி பொருளாதார வளம் போரிற்கு செலவழிக்கப்பட்டுள்ளது. அடிமட்ட சிங்கள மக்களை மோசமாக பாதிக்கும் பொருளாதார ஆபத்தை கொண்டபோதும் தனியார்மயப் படுத்தல் இராணுவ மூல உபாயத்தை பாதுகாக்க துரிதமாக நடத்தப்படுகின்றது.

மறுபுறம் சிங்கள தேசத்தின் போர்முகத்தை மறைப்பதற்காக போடப்பட்ட முகமூடிதான் சமாதான திட்டங்களும் தீர்வுப் பொதிகளும் என்ற தமிழர்களின் அனுபவம் மீளமீள நிரூபனமாயுள்ளதுடன் நவீன சிங்கள இனவாதப் போர் மூலம் சமாதானம் என்ற சமன்பாட்டை முன்வைத்ததன் மூலம் போர்தான் தீர்வுக்கான மூலமான பாதை என்பதை நிரூபித்துவிட்டது.

இன்றைய சிங்கள இனவாத



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பு தமிழர்களின் தீர்மானகரமான அரசியல் இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகளாக இராணுவ சேதங்களையும், பொருளாதார இழப்புகளையும் எதிர்கொண்டது. தொடர்ச்சியான உயிரிழப்புக்கள் போர்முனைகளுக்கு தேவைப்படும் துருப்புக்களை எண்ணிக்கை அளவில் வழங்குவதற்கு தடைக்கற்களாக அமைந்தது. இதனை நிவர்த்தி செய்வதற்கான பாரிய பிரச்சார நடவடிக்கைகளும், திட்டங்களும் சிங்களத்தால் வகுக்கப்படுகின்றன. தமது இனவெறி யுக்தியின் மூலமான இராணுவ பலத்தை பாதுகாக்க சிங்களபௌத்தமத அமைப்புக்களும், சிங்கள பொதுஜன அமைப்புக்களும் கடுமையாக உழைப்பதை சமகால பதிவுகள் தெரியப்படுத்துகின்றன. சிங்கள அரச அமைப்பின் ஒவ்வொரு துறையும் இவ் மூல உபாயத்தை பாதுகாக்க உழைப்பதற்கு அண்மையில் சிறீலங்கா மீன்பிடி அமைச்சு ஊர்காவல்படை பாணியில் கடல் அணியொன்றை உருவாக்க முயல்வதை உதாரணமாக சுட்டிக்காட்டலாம்.

இன்றைய சிங்கள இராணுவ அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை கட்டாய ஆட்பயிற்சி பற்றி பேசியுள்ளார். சிங்கள தேசத்திற்கு சுமார் 450,000 படையினர் தேவையென முன்னாள் இராணுவத் தளபதிகள் கணிப்பிடுகின்றனர். வான்படையும், கடல்படையும் தமது போர் கலங்களை பலப்படுத்த உழைக்கின்றன. சீன– பாகிஸ்தான் உதவிகள், அமெரிக்க ஆதரவு என்பன இப் பலமான சிங்கள இராணுவ உருவாக்கத்திற்கு ஆதரவாக நிற்கும் என எப்படி எதிர்பார்க்கின்றனர்.

★★★

தமிழர் போர் அணிகள் தமது போர் ஆற்றலை கால ஓட்டத்திற்கு மேம்படுத்திவருகின்றனர். தெளிவாக வரையறை செய்யப்பட்ட தமது அரசியல் இலட்சியமான தமிழீழ விடுதலையை நோக்கியே தமிழர்களின் போர் ஆற்றல் செழுமைப்படுத்தப்படுகின்றது. ஒரு மரபுரீதியான போர் அணிவகுப்பே ஈற்றில் தமிழர்களின் தேசிய இலட்சியத்தை அடைவதற்கான தேவை என்பதை தமிழர்களின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தெளிவாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

இதேவேளை தமிழர் தேசம் சிறியதும் பல்வேறுபட்ட புவிசார் அரசியல் முரண்பாடுகளை எதிர்கொள்வதும் ஆகும். எமது போரியல் ஆற்றலை இக் காரணிகள் பெரிதும் பாதிக்கின்றன. ஆயுத தளபாட விநியோகம் முதல் படை நகர்வுகளின் திட்டமிடல்வரை இத் தடங்களைத் தாண்டியே பரிணாமம் எடுத்துவருகின்றது. ஆனால் தமிழர்களின் போரியல் சிந்தனைகள் மரபுரீதியான சிந்தனைகள் போன்றதல்ல. இது தற்தியாகத்தையும் இலட்சிய வேட்கையையும் கொண்ட போராளிகளின் கூட்டு உழைப்பை– துல்லியமான திட்டமிடலை– தீர்க்கமான நடைமுறைப்படுத்தலை பற்றி கட்டி எழுப்பப்பட்டு, விரைவாக நகரும் ஆற்றலைக் கொண்ட நவீன மரபுசார் போர்க்கோட்பாடுகளை கொண்ட அணிகளாகும். இங்கு மேற்கூறப்பட்ட ஒவ்வொரு மூல காரணங்களும் ஆழமாக எடுத்தாராயப்பட்டு கையாளப்படும் ஒரு போரியல் பண்பாடு தமிழர்களில் முகிழ்ப்பதைக் காணலாம்.

இத் தமிழர்களின் படை அணிகளின் முழுமையானது சிங்கள இனவாத ஆக்கிரமிப்பை தமிழர் தேசத்திலிருந்து விரட்டி தமிழர் தாயகத்தை மீட்கும் என்பது போரியல் நோக்கில் எதிர்பார்ப்பாக இருந்தாலும் தமிழர்களின் அரசியல் பண்பாட்டு மாற்றங்களுக்கு இப் புதிய மாற்றமும் எழுச்சியும் பாதுகாவலாக திகழப்போகின்றது. தமிழர்களின் சர்வதேச உறவுகளை இது தீர்மானிக்கப் போகின்றது.

★★★

சிங்கள தமிழ் தேசியங்களுக்கு இடையிலான பிணக்கு இலங்கைத் தீவில் இரு தேசியங்களின் நலன் களைப் பேணும் இராணுவத்தை உருவாக்கிவிட்டது என்பதற்கு வன்னிச்சமர்க் களங்கள் தகுந்த ஆதாரங்கள் ஆகும். இந்த இரு இராணுவங்களின் எதிர்காலம் முரண்பட்ட திசைகளில் இருக்கும் என்பது இயற்கையின் நியதியாக இருக்கும். ஏனெனில் தமிழர் சேனைகள் படிப்படியாக வளர்ச்சிகண்டு பலமான ஒரு விடுதலை இராணுவமாகவும் சிங்கள சேனைகள் இனவாத நோயினால் பீடிக்கப்பட்டு வீக்கமடையும் ஒரு தோல்விகர இராணுவமாகவுமே உருவாகியுள்ளது.

**நாதன்**

## நொறுக்குத் தீனி

சிறீலங்காவில் இன்று நாளொரு அரச நிறுவனமும் பொழுதொரு நிலப்பரப்பாக அன்னிய நாட்டுக் கம்பனிகளிற்கு குறிப்பாக ஐரோப்பிய, அமெரிக்க கம்பனிகளிற்கு விற்கப்படுகின்றன.

அண்மையில் கட்டுநாயக்கா விமான நிலைய வளாகத்தில் பாதுகாப்பான பகுதி என உறுதிப்படுத்தப்பட்ட 10 ஏக்கர் நிலப்பரப்பு சுவிஸ் எயர் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

சிறிது காலத்திற்கு முன்பு அனுராதபுரம் பகுதியில் உள்ள எப்பாவெல பொகபேற்றுப் பிரதேசம் அமெரிக்க மெக்காரான் நிறுவனத்துக்கு விற்கப்படுவது குறித்த விவகாரம் வடமத்தியமாகாண சிங்கள மக்கள் மத்தியில் கொதிநிலையை உருவாக்கியது.

கொழும்பு துறைமுகத்தில் குயின் எலிசபெத் இறங்குதுறை விவகாரம் கூட பலத்த எதிர்ப்புகளை உருவாக்கியது.

போகிற போக்கைப் பார்த்தால் ஜனாதிபதி மாளிகைகூட இந்தப்பட்டியலில் சேர்த்துவிடுமோ என்று அஞ்சுகிறாரார்களாம் சிங்களப் பொதுஜனம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொழிற் சங்கங்களின் போராட்டம் அரசைக் கவிழ்க்கும் ஒரு சதி?

தென்னிலங்கையில் இன்று பெரும் முனைப்படைந்து வரும் தொழிலாளர் போராட்டங்கள் சிறீலங்காவின் முக்கிய துறைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. இதைத் தீர்ப்பதற்கு பல வழிகளிலும் பிரச்சினைகளில் மூழ்கியுள்ள சிறீலங்காவின் பொதுஜன ஐக்கிய முன்னணி விழி பிதுங்கி திண்டாடிக் கொண்டிருக்கிறது எனலாம்.

தபால்துறை, துறைமுகம், எயார் லங்கா, வங்கிகள், போக்குவரத்துச் சேவைகள் சுகாதார சேவைகள் ஆகியவற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தொடர்ச்சியான போராட்டங்களை தொழிலாளர்கள் நடாத்திக்கொண்டிருக்கின்றனர். உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்த முடியாத அரசு தொழிலாளர்கள் சாதாரண சம்பள உயர்வுக் கோரிக்கைகளை வழங்கவோ அது பற்றி பேச்சுவார்த்தை நடத்தவோ தயாராக இல்லாதது மட்டுமன்றி வெறுமனே இது அரசுக்கு எதிரான சதி வேலைகள் என்றும், ஐக்கிய தேசியக் கட்சியும், ஜனதா விமுக்தி பெரமுனவும் இதன் பின்னணியில் இருந்து செயற்படுகின்றன என தொடர்ந்து ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டே இருக்கிறது.

சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபின்னர் முதன்முதலில் சுகாதாரத் துறையில் வைத்தியர்களும், தாதிமார்களும் நடாத்திய வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு முகம் கொடுத்தது. அப்போது சுகாதார அமைச்சராக இருந்த ஏ. எச். எம் பௌசி அவர்களுக்கு எதிராக நடந்துகொண்ட முறையினால் அவர் அமைச்சையே மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. இவரது ராசியோ என்னவோ தற்போது போக்குவரத்துச் சேவையிலும் புகையிரத ஊழியர்கள் ஒரு வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்துவதற்கு தயாராகி வருவதாக தெரியவருகிறது.

அடுத்ததாக துறைமுகத் தொழிலாளர்கள் கொழும்பு எலிசபெத் இறங்கு துறையை பி அண்ட் ஓ என்னும் அவுஸ்ரேலிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு எதிராக நடாத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டங்களாகும்.

> இன்று சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ள யுத்தத்தினால் மீளவே முடியாத நிதி நெருக்கடியிலும் பொருளாதாரச் சீர்குலைவிலும் சிக்கியுள்ளது. அது இன்று சிறீலங்காவிலுள்ள எல்லாத் துறையையும் தனியார் மயப்படுத்தல் என்ற போர்வையில் வெளிநாட்டவர்க்குத் தாரைவார்ப்பதை தமது அன்றாட கடமைகளில் ஒன்றாக மாற்றிவிட்டது.

இன்று முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள தபால் துறை ஊழியர்களின் போராட்டமானது அரசுக்கும், தொழிலாளருக்குமான கௌரவப் போராக பரிணமித்துள்ளது. தமது 17 கோரிக்கைகளுக்கான மேலதிக வேலை பகிஸ்கரிப்பு போராட்டத்தை நடாத்தி வருவதால் பல இலட்சக் கணக்கான கடிதங்கள் தேங்கிக் கிடக்கும் சூழ்நிலையில் தொழிலாளர்களை போதைப் பொருள் கடத்தல் கும்பலின் மாபியா இயக்கத்திற்கு உவமையாக சிறீலங்கா அரசின் அமைச்சர்கள் குறிப்பிடுமளவிற்கு அப்போராட்டம் இட்டுச்சென்றுள்ளது.

**க. புஸ்பராஜன்**

இவ்வாறாக, சந்திரிகா அரசாங்கம் இறுதியாக விற்பனை செய்த எயர் லங்காவைச் சேர்ந்த சுமார் 6000 பேர் தற்பொழுது உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். ஊழியர்களின் சேவைகளை உத்தரவாதப்படுத்திக் கொடுத்த பின்னரே எமிரேட்ஸ் நிறுவனத்திற்கு நிர்வாகம் கையளிக்கப்படும் என உறுதியளித்த அரசாங்கம் தற்பொழுது அவசர அவசரமாக எயர்லங்காவைக் கையளித்துள்ளது. இது மட்டுமல்ல எயர் லங்காவை விற்பனை செய்வது பற்றி ஆராய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் நிமிக்கப்பட்ட குழுவுக்குக்கூடத் தெரியாமல் இரகசியமாக இவ் விற்பனை நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ள யுத்தத்தினால் மீளவே முடியாத நிதி நெருக்கடியிலும் பொருளாதாரச் சீர்குலைவிலும் சிக்கியுள்ளது. அது இன்று சிறீலங்காவிலுள்ள எல்லாத் துறையையும் தனியார் மயப்படுத்தல் என்ற போர்வையில் வெளிநாட்டவர்க்குத் தாரைவார்ப்பதை தமது அன்றாட கடமைகளில் ஒன்றாக மாற்றிவிட்டது.

கடந்த வருட யுத்தத்திற்காக ரெலிகொம் நிறுவனம் விற்ற நிதி பயன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தப்பட்டதாக பொ.ஐ.மு—வின் அமைச்சர் ஒருவரே குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் எயர்லங்காவை விற்ற நிதி இவ்வருட யுத்தத்திற்கென செலவழித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று சிறீலங்கா அரசு தான் வெளிநாட்டவர்க்கு விற்பனை செய்யும் நிறுவனங்களின் பங்குகளின் 40 வீதங்களை வெளிநாட்டவர்க்கும் 51 வீதத்தை அரசுக்கும், 9 வீதத்தை தொழிலாளர்க்கும் விற்பனை செய்வதாகக் கூறிக்கொள்கிறது. இந்த ஏமாற்றமான நடைமுறையினால் 9 வீதப் பங்குகளை சொந்தமாகக் கொண்ட தொழிலாளர்கள் எதுவிதப் போராட்டங்களையோ நடவடிக்கைகளையோ எடுக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இன்றைய பொ.ஐ.மு அரசு முன்னைய ஐ.தே.க ஆட்சியின் போது நடைபெற்ற தொழிலாளர் போராட்டங்களை சிறில் மத்தியு போன்ற அரசியல்வாதிகள் தமது குண்டர்களைக் கொண்டு அடித்து விரட்டியதையும் பொலிசின் அராஜக நடவடிக்கைகளையும் பொதுமக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தே தொழிலாளர் வர்க்கத்தின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று அமைச்சர்களாகவுள்ள பட்டி வீரக்கோன், அலவி மௌலானா, பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார போன்றோர் குண்டர்களால் தாக்கப்பட்டும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு குழப்பம் விளைவிக்கவும், கைக்குண்டுகள் வைத்திருந்தனர் எனவும் பொய்க் குற்றச்சாட்டுகளின் பெயரில் நீதிமன்றத்தில்கூட நிறுத்தப்பட்டனர்.

தொழிலாளர்த் தலைவர்கள் எனக்கூறி பொ.ஐ.மு—ல் ஒட்டிக் கொண்டிருக்கும் இடதுசாரிகளும், தொண்டமான், சந்தரசேகரன் போன்றோர்களும் இரட்டைவேடம் போடுவோர்களாகவே காட்சியளிக்கின்றனர். கபினெட் அமைச்சர்கள் கூட்டத்தில் தமது ஆதரவைத் தெரிவித்துவிட்டு வெளியில் வந்து தொழிற் போராட்டங்களில் பங்கு பற்றுகின்றனர். இவர்கள் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, ஆட்சியாளர்களுக்கும் விசுவாசமற்றவர்களாகவே உள்ளனர்.

> **எது எவவாறாயினும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆண்டால் என்ன? ஐ.தே.கஆண்டால் என்ன? தொழிலாளர்களின் வாழ்வு விடியப்போவதில்லை. அவர்கள் மாறிமாறி வரும் ஆட்சிகளுக்கு புள்ளடி போடுவதைவிடுத்து மாற்றுவழியொன்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலமே தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பதே நிதர்சன உண்மையாகும்.**

இதன்விளைவாகவே இன்று பொ.ஐ.மு—வினால் பிற்போக்குவாதிகள் எனவும், ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகள் எனவும் முதலாளித்துவத்தின் பிரதிநிதிகள் எனவும் குற்றஞ் சாட்டப்பட்ட ஐ.தே.க—வினர் தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்க வைத்த பெருமையும் பொ.ஐ.மு அரசுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்குமே உரியதாகும்.

தற்போது நடைபெறும் தொழிலாளர் போராட்டங்கள் எந்தப் பின்னணியில் நடைபெறுகிறது? இதற்குப் பின்னால் உள்ள சக்திகள் என்ன? அரசைக் கவிழ்க்க சதி செய்கின்றனவா? என்பதைக் கண்டறிய பட்டி வீரக்கோன், அமரசிறி தொடாங்கொட, ஜோன் செனவிரத்தின ஆகியோரைக் கொண்ட ஆணைக்குழுவை நியமித்ததன் மூலம் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தொழிலாளர்களை எந்தக் கோணத்தில் அணுக விளைகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

ஆனால் இன்று இடதுசாரிகள் எனக்கூறிக்கொண்டு இன்றைய பொ.ஐ.மு. அரசுக்கு முண்டுகொடுக்கும் லங்கா சமசமாஜக் கட்சியினர், கம்யூனிஸ் கட்சியினர் தொழிலாளர்களுக்காக எவ்வித குரலும் எழுப்ப முடியாது வாய் மூடி மௌனியாக இருப்பதுதான் வேடிக்கையிலும் வேதனையானது எனலாம்.

ஆனால், புதுவருடப்பிறப்பை முன்னிட்டும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் தாம் வெற்றியீட்ட வேண்டுமெனவும் கங்கணம் கட்டியுள்ள பொ.ஐ.மு அரசு தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இன்று அவசர அவசரமாக முனைவது போல் நாடகமாட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளது. இதன் காரணமாகவே வேலை நிறுத்தம் குறித்து ஆராய ஆணைக்குழுவை அமைத்துள்ளது. இவ் ஒவ்வொரு குழுவிலும் மூவர் அல்லது இருவர் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு வேலை நிறுத்தம் செய்யும் துறையின் தொழிலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சியில் பொ.ஐ.மு பகீரதப் பிரயத்தனத்தில் இன்று இறங்கியுள்ளது.

மறுபுறமாக தாம் ஆட்சியிலிருக்கும்போது தொழிலாளர் விரோதப் போக்கை கடைப்பிடித்த ஐ.தே.கட்சியோ இன்று ஜனநாயகம் பற்றியும், தொழிலாளர் நலன் பற்றியும், வாய் கிழிய பிரச்சாரத்தில் இறங்கியுள்ளது இன்று குறிப்பாக சிறீலங்காவின் தொழிலாளர்களது பிரச்சினை பொ.ஐ.மு—ஐப் பொறுத்தவரை தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், ஐ.தே.க—வைப் பொறுத்தவரை தாம் இழந்த ஆட்சியை மீண்டும் ஒருமுறை பெறுவதற்காகவுமே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது எனலாம்.

எது எவவாறாயினும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆண்டால் என்ன? ஐ.தே.க ஆண்டால் என்ன? தொழிலாளர்களின் வாழ்வு விடியப்போவதில்லை. அவர்கள் மாறிமாறி வரும் ஆட்சிகளுக்கு புள்ளடி போடுவதை விடுத்து மாற்றுவழியொன்றைத் தேர்ந்தெடுப்பதன் மூலமே தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பதே நிதர்சன உண்மையாகும்.

▼▼



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அத்துமீறிய குடியேற்றமும் அநாதரவான தமிழினமும்

தமிழர் தாயகமாக கருதப்படும் வடகிழக்கில் அன்றிலிருந்து இன்றுவரை இவ்வுலகத் தீவில் ஆட்சி செலுத்திவரும் சிங்களப் பேரினவாதக் கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்ட சதி வலையில் சிங்களவர்களைக் குடியேற்றி வந்துள்ளனர்.

1930–ஆம் ஆண்டில் டி.எஸ் சேனநாயக்கா அவர்களின் மூளையில் இது நன்கு பதிந்துள்ளது என்பது தெட்டத் தெளிவாக உணரக் கூடியதாய் இருக்கின்றது.

தமிழர்களைக் கீழ்மைப்படுத்தி அவர்களது பூவீக நிலங்களைச் சிதைத்து துண்டாடும் திட்டங்கள் முதல் கட்டமாக கிழக்கு மாகாணத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டன.

“ஆற்றுப் பள்ளத்தாக்கு” அபிவிருத்தி திட்டம்” என்ற பெயரில் பட்டிப்பளை, கல்லோயா’ வாகவும் நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்புச் செய்கின்றோம் என்ற பூச்சாண்டியில் பதிவில் குளம், ‘பதவியா’ என்ற பெயராகவும் மாறியது. “அல்லை”, “கந்தளாய்” குளங்கள் சிங்களவரின் வயல்களுக்கு தமிழர் பிரதேசத்தின் நீரைப்பாய்ச்சும் திட்டமானது.

1960–ம் ஆண்டு சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றது. 1970–ஆம் ஆண்டு 1500 சதுரமைல் பரப்பளவில் “அம்பாறை”, “சேருவாவில” என சிங்களத் தொகுதிகள் முளைத்தன.

இதேபோல் மணலாற்றில் 3650–ற்கு மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. 1984–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24–ம் திகதி நாயாற்றுக்கு மேற்கேயும், தெற்கேயும் உள்ள பல தமிழ்த் தொன்மைக் கிராமங்கள் சிங்கள குடியேற்றமாக மாறியது. இதன் விளைவு 1986–ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் “வெலிஓயா” என்ற பெயரில் சிங்கள வாக்காளர் பட்டியல் இணைக்கப்பட்டது.



1988–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் திகதி இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டத்தின் பெரும் பகுதி விஷேட பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டது. சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அரசினால் முன்வைக்கப்பட்ட பிரகடனம் இது என்பது தெளிவு.

திருமலை மாவட்டத்தை உற்று நோக்குவோம். இது வடகிழக்கு தமிழர் தாயகத்தின் முக்கிய வரலாற்றுப் புகழ் மிக்க ஒரு மாவட்டமாகும். இங்கு சிங்களக் குடியேற்றங்கள் எல்லை மீறியதாகவே உள்ளன.

இங்கு 1962–ம் ஆண்டிற்கு முன்பே குடியேற்றங்கள் இடம் பெற்றுள்ளன. பனிக்கட்டிமுறிப்பு என்ற தமிழ்ப் பெயர் “பனிக்கட்டியாவ” என மாற்றப்பட்டது. பன்குளத்தின் அருகே அமைந்த ஊர் தான் பனிக்கட்டி முறிப்பு எனப்படுவது. இங்கு ஒரு விகாரையும் நிறுவ சிங்களவர்கள் முயன்றனர். இது எட்வேட் என்னும் இங்கிலாந்து அரசர் காலத்திலும் கூட தனித் தமிழ் கிராமமாக இருந்தமைக்கான வரலாற்று ஆவணங்கள் இன்றும் உள்ளன.

பன்குளத்தில் உள்ள கனகசபை என்ற தமிழ் மகனின் சொந்தக் காணியை அபகரித்து, 1973 09 27–ம் திகதி சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும், அமைச்சருமாக இருந்த கே.பி.இரத்நாயக்கா பௌத்த பாடசாலைக்கு அடிக்கல் நாட்டினார். விஸ்வராமா சாபாவ பௌத்த கோயில் அடிக்கல் நாட்டு விழாவும் தமிழர் பூமியில் அன்று கோலாகலமாக இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கப்பல்துறை, பாலம்போட்ட ஆறு ஆகிய இடங்களில் உள்ள தமிழர்களின் காணிகளில் சுமார் 5000 ஏக்கரில் சிங்களக் குடும்பங்களை குடியமர்த்த வேண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென, 04 09 1854–ல் தீர்மான மிடப்பட்ட திருமலை துறைமுக அதிகாரசபையின் தீர்மானத்தை செயல்படுத்த வேண்டுமென பலர் வெளிப்படுத்தினர். பன்றி இறைச் சிக்கடை நடத்தி/ பொடியப்பு சிங்கோ என்ற சிங்களவரின் மனை விக்கு சமாதான நீதவான் பதவி கிடைத்தது. அத்துடன் பன்றி இறைச் சிக்கடை பொடியப்பு சிங்கோ, பௌத்த விகாரையின் கமிட்டி தலை வராகவும் இருந்துள்ளார்.

கட்டுக்குளப்பற்று மேற்கு, எல் லையில் உள்ள குருவியன் குளம், பொய் ஒடிச்சான் குளங்களோடு தொடர்புடைய காட்டுப் பிரதே சத்தை திருமலை அரச அதிபரே நிர்வகித்து வந்தார். அதை பௌத்த விகாரை பரிபாலனசபை 1988–ல் பொறுப்பேற்று குடியேற்றத்தை உரு வாக்கியது. அது மட்டுமன்றி முதலிக் குளத்தின் அருகே விமானப்படை முகாமையும் சிங்களக் குடியிருப்பை யும் உருவாக்கி முதலிக்குளம் என்ற தமிழ் பெயரை "மொறவேவ" என்ற பெயரோடு ஊரை நிறுவி, தமிழர்க ளின் 340 ஏக்கர் நீர்ப்பாசனக் காணியும் பறித்தெடுக்கப்பட்டு பாரிய சிங்கள குடியேற்றமாக மாறியது. இவ்வாறாக மாறி மாறி ஆட்சிபீட மேறிய சிங்கள அரசுகள் இன்று (1998) சுமார் 128–ற்கும் மேலாக திருமலை மண்ணில் சிங்களக் கிரா மங்களை உருவாக்கியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் உள்ள பெரிய குளம் என்னும் தமிழ் பிரதேசத்தில் 500 ஏக்கர் நிலத்தை பௌத்த விகாரைகளுக்கும் சிங்களக் குடிக ளுக்கும் கொடுக்கவேண்டி 1965 ஜூலை 26–ம் திகதி திருமலைக் கச்சேரியில் உயர் அதிகாரிகளின் கூட்டம் நடைபெற்றது.

இவ்வாறான மகாநாடுகள் மூலம் 1973–ம் ஆண்டில் 10738 குடும்பங் கள் இம் மாவட்டத்தில் அத்துமீறிக் குடியேறியுள்ளன. இது அன்று வெளியான "சுதந்திரன்" இதழின் கருத்தாகும்.

தமிழ் மக்களின் தாயகத்தை துண்டாடுவதில் இவ்வரசாங்கங்கள் காட்டிய ஆர்வத்தையும் அவாவையும் அப்பட்டமாகப் படம் போட்டுக் காட்டுகின்றன இவ்வாக்குமூலம் வாசகர்களின் அறிதலுக்காகக் கொடுக் கப்பட வேண்டியதே.

1983–ம் ஆண்டு வான் ஓயா, மல்வத்து ஓயா பிரதேசங்களில் சிங் கள மக்களை குடியேற்றும் வேலை கள் ஆரம்பித்துவிட்டன. மகாவலி அமைச்சரின் இந்த இரகசியத் திட் டத்தை தமிழர்கள் சிலர் தடுப்பதற் கான காரியங்களில் இயங்கி வந்த னர். இவற்றையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு 45000 மக்களை குடி யேற்றுவதில் வெற்றி கண்டோம் என பேறிமன் குணரெட்ண ஒரு சமயம் கூறியிருந்தார்.

இந்தக் குடியேற்றங்கள் தாயகத்தை அழித்துவிடும் என்பது உண்மை. எனவேதான் திட்டமிட்ட முறையில் வலு கெட்டித்தனமாக அன்று தொடக்கம் இன்றுவரை வடகிழக் கில் சிங்களக் குடியேற்றம் நடை பெற்றுக் கொண்டே வந்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மல்வத்து ஓயா குடியேற்றத்தினூ டாக மன்னாரை வடமேல் மாகா ணத்திலிருந்து அப்புறப்படுத்தும் நாச கார நோக்கமும் இருந்தது. பதவியாக் குடியேற்றத்தினை பாதுகாக்கவும் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேச மான வடக்கையும் கிழக்கையும் பிரித்து– தமிழ் மக்களைவேறுபடுத் தும் மையக்கல்லாகவும் வெலிஓயா குடியேற்றத்திட்டம் விளங்கிவருகி றது.

மேற்குறிப்பிட்ட குடியேற்றத்திட் டங்களில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வின் மகன் ரவி ஜெயவர்த்தனா முன்னின்று உழைத்தார்.

திருகோணமலைக்கு வடக்கே இருக்கும் யான் ஓயா பிரதேசத்தில் ஐம்பதாயிரம் மக்களை குடியமர்த்தி யாழ்ப்பாணத்திலிருந்து திருகோண மலையையும் மட்டக்களப்பையும் துண்டித்து பதவியாக் குடியேற் றத்தை வலுப்படுத்துவது இங்கு மாறி, மாறி ஆட்சிபீடமேறிய பேரினவாத அரசுகளின் உள்நோக்கமாகும்.

திருகோணமலை, வடகிழக்கு மாகாண அரசின் தலைநகரம் என் றும் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்றும் தலைநிமிர்ந்து சொல்கின் றோம்.

அதே திருகோணமலையில் இன்று– அதாவது 1998 வரை குடியே றியுள்ள சிங்களக் குடியேற்றங்களின் விபரத்தைப் பாருங்கள்.

| | |
|---|---|
| சிறிமாபுர | அபயபுர |
| மகித்தபுர | 4–ம் கட்டை |
| ஆண்டான்குளம் | வெல்கம்காரை |
| 10–ம் கட்டை | மொறகிவன |
| மயில்வேவ | நாமல்வத்த |
| வானலை | கிளப்பன்பேக் |
| நாலந்த | கமதல்சுபுர |
| குறிஞ்சாக்குளம் | கொறவப்பொத்தான |
| 6–ம் கட்டை | 20–ம் கட்டை |
| கமதல்புர | புலஸ்திபுர |
| கோவில்வத்த | பாரியூற்று |
| கோவில்கடவல | 97–99–ம் கட்டை |
| சீனி ஆலை | ஜெயந்திபுர |
| ஜயபுர | தெகிவத்தை |
| கிலாப்பனை | அரிப்பு |
| கல்லாறு | அலிஓலுவ |
| சரசுரா | 1–ம், 2–ம் கொலனி |
| சிறிபுர | மட்கோ |
| சேருவில | கந்தளாய் |
| 13–ம் கட்டை | பன்குளம் |
| செவல பேக் | மண்டலபுர |
| சுமதிபுர | சோமாபுர |
| எல் 1.பி.1.2 | கல்மேபுயால |
| சாலியபுர | அக்கோபுர |
| கித்துளுத்து | அளுத்ஓயா |
| பொலிகண்டி | அடம்பன் |
| கல்லறவு | கிழ்புள்பிட்டியாவ |
| மகாதீவுல்வேல | வேப்பங்குளம் |
| மல்கிபிறிப் | 98–ம் கட்டை |
| லங்கிரிகடவைப்பு | கோமரங்கலெவ |
| நிலவுக்கடவேவ | ஒட்டிசுட்டாக்குளம் |
| மன்மதவாச்சி | சிங்கபுர |
| பொக்கியாட் | உன்பத்து |
| நாச்சிக்குடா | 5–ம்கட்டை |
| 3–ம் கட்டை | மொறவேவா |
| சுமித்ராவகம | மகாவல்கம |
| அல்லை | கொட்டுவே |
| கல்கட்டுவெல | கோம்புகட்டுவ |
| கல்கனிவெவ | மோநாமை |
| பொத்தலவெவ | குழுக்காவெல |
| மீசஸ்வெல | றொட்டுவேல |
| ஆனைக்கட்டி | கருந்தகம |
| பெக்கிலிகடவெல | தெள்ளியா |
| சமந்தபுர | பராக்கிரமபுர |
| கிரிச்சண்டுகாயலிகள | |
| 97–92–93–ம் கட்டை | |

இன்னும் எத்தனையோ இன்று முளைந்துள்ளன.

இந்த அத்துமீறிய குடியேற்றங் களால் அநாதரவாகியுள்ளது தமி ழினமே.

நன்றி– தினக்கதிர்
மட்டக்களப்பிலிருந்து
வெளிவரும் பத்திரிகை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளின் பதிலடிகளால் சிதைவுற்ற இராணுவத்தின் "தொழில்சார் திறன்"

ஜெயசிக்குறு படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உலகில் உள்ள தொழில்சார் திறன்மிக்க இராணுவத்தில் சிறீலங்கா இராணுவமும் ஒன்றென சிறீலங்கா ஆட்சியாளர்கள் பெருமை பேசிக்கொண்டனர். சிறீலங்கா இராணுவம் போரிடும் ஆற்றலில் உலகின் வேறு எந்த இராணுவத்திற்கும் சளைத்ததல்ல எனவும் அவர்கள் கூறினர்.

ஆனால் ஜெயசிக்குறுவின் அனுபவமானது ஒருபுறம் சிறீலங்கா இராணுவத்தின் "தொழில்சார் திறனை" கேள்விக்குள்ளாக்கியுள்ள அதே வேளை விடுதலைப்புலிகளின் போரிடும் ஆற்றல் குறித்து உலகில் பெரும் பிரமிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதனைச் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு அண்மைக்காலத்தில் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளே தெளிவுபடுத்துபவையாகவுள்ளன.

சிறீலங்கா அரசு இன்று ஆயுதப் படைக்கெனப் பெரும் ஆயுதம் மற்றும் ஆளனைத்தேடலில் இறங்கியுள்ளது. அதே வேளை ஆயுதப் படைக்கெனப் பெரும் பயிற்சித் திட்டங்களிடம் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளது. மறுவளமாகக் கூறுவதானால் தொழில்சார் தேர்ச்சியை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதன் தேவை அண்மைக்காலத்தில் சிறீலங்கா ஆயுதப் படையினருக்கு தரையிலும்– கடலிலும் கிடைத்த அனுபவத்தின் பாற்பட்டதாகும்.

ஜெயசிக்குறுபடை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது சிறீலங்கா இராணுவத்தில் விஷேட படைப்பிரிவு, விஷேட கொமாண்டோ படைப்பிரிவு என்பன சிறப்புத் தேர்ச்சி பெற்ற படையணிகளாக இருந்தன. இதில் விஷேட படைப் பிரிவு இரண்டாம்கட்ட ஈழப்போர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதொன்றாக இருந்தது. இப்படையணி ஆரம்பத்தில் கிழக்கில் தீவிரமானதாகச் செயற்பட்டது. பெரும் இனப்படுகொலைகளுக்கும் இது காரணமாய் இருந்தது.

இதன் பின்னர் சந்திரிகா அரசாங்கத்தினர் உருவாக்கப்பட்டதே விஷேட கொமோண்டோப் படைப் பிரிவாகும். அமெரிக்க "கிறீன்பெரே" அமைப்பினால் விஷேடமாகப் பயிற்றுவிக்க இவ்வணி ஜெயசிக்குறுவின் போது தாக்குதலில் முக்கிய பாத்திரம் வகிக்கும் ஒன்றாகவும் மாறியது.



ஜெயசிக்குறு நடவடிக்கைக்கு முன்னரே விஷேடபடையணி விடுதலைப்புலிகளிடம் சில பலமான அடிகளைப்பெற்றுக் கொண்டது. இதில் முல்லைத்தீவு முகாமை விடுதலைப்புலிகள் தாக்கியபோது அலம்பிலில் தரையிறங்கிய விஷேட படைப்பிரிவு வாங்கிய அடியினையும் சத்ஜெய நடவடிக்கையின் போது பரந்தன் பகுதியில் வாங்கிய அடியினையும் குறிப்பிடமுடியும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்விரு அணிகளுக்கும் புறம்பாக "எயார் மொபைல் போஸ்" என்னும் சிறப்புப் படையணி ஒன்றும் ஜெயசிக்குறு காலத்தில் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சினால் உருவாக்கப்பெற்றிருந்தது. மிகவும் தேர்ச்சி பெற்ற ஆளணியைக் கொண்ட இப்படைப்பிரிவு உலங்கு வானூர்திகள் மூலம் தரையிறங்கித் திடீர்த் தாக்குதல்களை மேற்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டதாகும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட படையணிகளைச் சேர்ந்தோர் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களாகவும் அதே சமயம் நவீன ஆயுதபாணிகளாகவும் ஆக்கப்பட்டிருந்தனர். இப்படைப்பிரிவுகளின் சுடுதிறன் சாதாரண படைப்பிரிவுகளின் சுடுதிறனைவிட மிக அதிகமானதாக இருந்ததோடு மட்டுமல்ல– இப்படைப்பிரிவுகளுக்கு ஆளணித் தெரிவின் போது உடல் வலுவும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

இந்த நிலையில் இப்படைப்பிரிவுகளின் மீது சிறீலங்கா அரசு அசைக்கமுடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்தது. அதே போன்று ஆரம்பத்தில் இப்படைப்பிரிவுகளும் தமது செயற்பாட்டை காட்டின என்றே கொள்ளலாம். ஆயினும் ஜெயசிக்குறு நடவடிக்கைக்கு முன்னரே விஷேட படையணி விடுதலைப்புலிகளிடம் சில பலமான அடிகளைப்பெற்றுக் கொண்டது. இதில் முல்லைத்தீவு முகாமை விடுதலைப்புலிகள் தாக்கியபோது அலம்பிலில் தரையிறங்கிய விஷேட படைப்பிரிவு வாங்கிய அடியினையும் சத்ஜய நடவடிக்கையின் போது பரந்தன் பகுதியில் வாங்கிய அடியினையும் குறிப்பிடமுடியும்.

இச்சமர்களின் போது இவ்விஷேட படைப்பிரிவு பல படையினரை இழந்ததோடு – சில கட்டளை அதிகாரிகளையும் இழந்தது. இது இப்படையணியைப் பெரிதும் சிதைவுறச் செய்ததாகவே அமைந்தது.

இந்த நிலையில் ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் இப்படையணி முதன்மைக்குரிய படையணியாகச் செயலாற்ற முடியாததொரு நிலையில் இருந்ததென்றே கூறலாம். இருப்பினும் ஜெயசிக்குறு படைநகர்வில் இப்படையணியின் நகர்வும் குறிப்பிடத்தகதாகவே இருந்தது.

இருப்பினும் ஜெயசிக்குறு நடவடிக்கை நெருக்கடிகளைச் சந்திக்கச் சந்திக்க புதிதாக உருவாக்கப்பட்ட "எயார் மொபைல் போஸ்" மற்றும் விஷேட கொமாண்டோப் படைப்பிரிவு என்பன தாக்குதல் அணிகளில் முக்கிய படையணிகளாக செயற்படத்தொடங்கின. இவற்றிற்கு வழங்கப்பட்ட வெளிநாட்டவரின் பயிற்சி மற்றும் ஆயுத தளபாட வசதிகள் என்பன இவை ஆற்றல் மிக்க படைப்பிரிவுகளாக உருவாகக் காரணமாயின.

ஆனால், இப்படைப்பிரிவுகளும் ஜெயசிக்குறு படை நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் தாக்குதல் அணிகளிடம் பலமான அடிகளை வாங்கிக் கட்டிக்கொண்டன. இதில் "எயார் மொபைல் போஸ்" புதூர் சந்தியில் செப்டம்பர்மாதம் 9–ம் திகதி இடம்பெற்ற கடும்சமர் ஒன்றில் பலத்த இழப்புக்களைச் சந்தித்தது. இவ்விழப்பானது இப்படையணியைப் பெரிதும் பலவீனப்படுத்துவதாக இருந்தது. இத்தாக்குதலில் பலியான படையினர் தொகை 40–ற்கும் அதிகமானதென் பது உறுதியாயினும் மொத்த எண்ணிக்கையை சரியாக ஊர்ஜிதம் செய்யக்கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும் இச்சமரில் 250–க்கு மேற்பட்ட படையினர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இதன் பின்னர் ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் விஷேட கொமாண்டோப் படைப்பிரிவு, முக்கிய தாக்குதல் படைப்பிரிவு என்ற நிலையில் உருவாகியிருந்தது. இப்படைப்பிரிவானது இராணுவத்தின் நகர்வுகளின் போது முன்னணிப் படையணியாகச் செயற்பட்டு ஜெயசிக்குறு படை நகர்வுகள் சிலவற்றின்போது பெரும் உதவி புரிந்ததாகவும் இருந்தது.

ஆயினும் டிசம்பர் 4–ம் திகதி மாங்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளின் பலமான பதிலடியில் சிக்கிக் கொண்ட இப்படையணி பெரும் இழப்பைச் சந்தித்தது. இத்தாக்குதலின் போது 300–ற்கும் அதிகமான படையினரையும், இப்படை நகர்விற்குப் பொறுப்பேற்றுச் சென்ற கட்டளை அதிகாரியையும் அது இழந்தது.

இச்சமரின் தோல்வியை சிறீலங்கா இராணுவத் தரப்பு வெளிக்காட்டிக் கொள்ளாவிடினும் கொழும்பிலுள்ள இராணுவ நோக்கர்கள், வெளிநாட்டுச் செய்தியாளர்கள் யாவருமே ஒப்புக்கொண்டிருந்தனர். பதின்னான்கு ஆண்டுகாலச் சமர்களில் பெரும் சமர் எனவும், சிறிலங்கா இராணுவ வரலாற்றில் ஏற்பட்ட பெரும் இழப்புக்களில் ஒன்று எனவும் இச்சமர் பற்றி குறிப்பிட்டிருந்தன.

இதன் பின்னர் சிறீலங்கா அரசும் இராணுவத் தலைமையும் தமது இராணுவத்தின் தொழில்சார் திறமையில் கொண்டிருந்த நம்பிக்கையில் கணிசமான அளவு இழக்க வேண்டி வந்தது எனலாம். இதனை வெளிப்படையாகக் கூறிக்கொள்வதற்கு அவை தயக்கம் காட்டுபவையாக இருப்பினும்கூட சிறீலங்கா இராணுவத்தின் திறனை அதிகரிக்

**சிறீலங்கா இராணுவத்திற்கு இன்று ஆளணி – தளபாடங்கள் தேடுதலில் மட்டும் சந்திரிகா அரசு ஈடுபட்டால் போதுமானதாக இல்லை. இராணுவத்தின் தொழில்சார்திறனையும் அதிகரிக்க வேண்டிய தேவை அதற்கு உண்டு. ஏனெனில் ஜெயசிக்குறு நடவடிக்கையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவ சிறப்புப் படையணிகள் பல புலிகளின் பதிலடிகளால் பெருமளவில் சிதைக்கப்பட்டுவிட்டன.**

**ஜெயராஜ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கும் முயற்சியில் அவை இறங்கியிருப்பதிலிருந்தே இதனை எவரும் புரிந்துகொள்ளமுடியும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே இராணுவப் பயிற்சித் திட்டங்கள் அரசால் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இப் பயிற்சித் திட்டங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமாகத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்கள் அதிகாரிகள் மட்டத்திலானவையாகவே உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை போர் தந்திரோபாயங்கள், யுக்திகள் பற்றியனவாகும்.

இதேசமயம் துருப்புக்களுக்கான பயிற்சித் திட்டங்கள் உள்நாட்டில் வெளிநாட்டவர்களின் கீழ் நேரடியாக இடம் பெறுபவையாகவும் ஆலோசனைகளுடன் இடம்பெறுபவையாகவும் உள்ளன. இதில் முக்கிய அம்சமாக இரகசியமான நகர்வுகள், விரைந்து தாக்குதல் என்பன முக்கிய பயிற்சித் திட்டங்களாகவுள்ளன.

இவற்றின் ஒரு அம்சமாகவே இராணுவத்தினரின் சுடுதிறனை அதிகரித்தலும் உள்ளது. அதாவது முன்னணித்தாக்குதல் அணியின் ஆளணி எண்ணிக்கைகளைக் குறைத்து சுடுதிறனை அதிகரிப்பதன் மூலம் இழப்புக்களின் எண்ணிக்கையை குறைத்தலாகும். இது ஒருவகையில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறையினை ஈடு செய்வதற்குமான ஒரு மாற்று நடவடிக்கையுமாகும்.

இந்த ரீதியில் சிறீலங்கா அரசு இன்று இராணுவத்திற்கான ஆளணி, தளபாட பெருக்கத்துடன் தமது இராணுவத்தின் தொழில்சார் திறமையையும் அதிகரிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆனால் இராணுவத்தின் ஆளணி, ஆயுத தளபாட பெருக்கமும், தொழில்சார் திறனும் மட்டும் இப்போர்க்கள நிலவரத்தை தீர்மானிப்பவை அல்ல. விடுதலைப் புலிகளின் போராடும் ஆற்றலும் அதற்கும் மேலாக போராளிகளின் இலட்சியப்பற்றும் தியாகங்களுமே களநிலவரத்தைத் தீர்மானிப்பவையாக இருந்துவந்துள்ளன என்பதே சரியானதாகும்.

●●

# வன்னி வாகை சூடும்

சிற்றருவி கொலுசணிந்து சிலுசிலுத்து ஓட
சிறு திரளி துள்ளி விளையாடும்
வாண்டுகள் கூட்டம் வாய்க்கால் நீரில்
மாரித்தவளையாய் தாவி பின் மீளும்

கண்முன்னே பலமுறை கன்று மடிமுட்டும்
கறவையில் மீண்டும் பால் சுரக்கும்
தேவை எங்களுக்கு எதுவெனக் கண்டு
பாதை திறக்கவோ வந்தான் பகைவன்

தினையும் குரக்கனும் சிந்தியே கிடக்க
தின்ற பட்சிகள் செரிக்கப் பறக்கும்
அகன்ற தோகையில் வண்ணம் சேர்த்த
அழகு மயில்கள் அகவிப் பறக்கும்

ஒப்பனை செய்யாத உயிர் ஓவியங்கள்
இடுப்பொடிய விறகொடித்துச் செல்லும்
வேலும் வாளுமாய் வீரம் விளை மண்ணில்
வெற்றி நிட்சயம் வெல்வது எங்ஙனம்

தாண்டிக் குளச்சமர் தடையுடைத்து வெல்ல
தானைப் புலிவீர் தாய்நிலம் வீழ்ந்தனர்
ஓமந்தை ஒரு நாள் ஒளிப்பிளம்பானது
ஓலமடு தடையினில் கரும்புலி புகுந்தது

மன்னன் குளம் களமெல்லாம் மானம்தான் என்றது
பன்னிரு திங்கள் பகை தடுத்தாடி
வெற்றிக்கு வீழ்ந்த வீரரை போற்றுவோம்.

**சோதியா**
நோர்வே

## தோழா !

நாமாவது எழுதிவைக்க வேண்டும்
நம் தாய் தகப்பன் பாதுகாக்காத
நமது இழப்புகளை துயரங்களை
நாளை பின்பு பயன்படுமல்லவா
கவிதைகளோ ஆயுதங்களோ
செய்ய
எங்கே என் முகம்

காலத்தை
வீணாக்குவதைப்
போன்ற காரியம்
எதுவுமில்லை. அப்படி
வீணாக்காமல்
இருப்பதைப் போன்ற
சிரமமான காரியம்
எதுவுமில்லை

**ஹென்றி போர்ட்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாயக மீட்புப் உலகத்

தமிழீழத் தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் நீங்கள் வாழ்ந்து வந்த போதும், உங்களது சொந்த மண்ணின் விடுதலைக்காக, உங்களது சொந்த மக்களின் விடிவிற்காக, காலம் காலாமாக நீங்கள் செய்து வரும் பங்களிப்பிற்கும் உதவிகளுக்கும், தமிழீழ மக்களின் சார்பில், முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழீழ மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் பொழுதெல்லாம், அவலங்கள் ஏற்படும் பொழுதெல்லாம், நீங்கள் உணர்வோடு கிளர்ந்தெழுந்து நின்று சேர்த்து குரல் கொடுத்து, மானிடத்தின் மனச்சாட்சியை தட்டிக்கேட்டு வருகிறீர்கள். உலகின் தலைநகரங்கள் எங்கும் ஊர்வலங்கள் நடத்தி, ஆர்ப்பாட்டப்பேரணிகள் நடத்தி, உலகளாவிய ரீதியில் நீங்கள் நடத்திவரும் எழுச்சிப் போராட்டங்கள் எமது தேசவிடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுத்தருகிறது.

கடல்கடந்து, புலம்பெயர்ந்து அந்நிய தேசங்களில், அந்நிய பண்பாட்டுச் சூழலில் நீங்கள் வாழ்ந்து வந்த போதும், உங்களது தேசப்பற்றும் இனப்பற்றும் தணியாத நெருப்பாக எரிவதைக்காண எமக்கு மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படுகிறது. தாயக பாசத்துடன் தேசத்தின் விடுதலைக்காக, உலக அரங்கில் நீங்கள் எழுப்பிவரும் உரிமைக்குரல், ஒடுக்கப்பட்டு வரும் எமது மக்களிற்கு தெம்பையும் திடத்தையும் கொடுத்து வருகிறது. பாராமுகங் காட்டும் இந்த உலகத்தில் நாம் தனித்து நிற்கவில்லையென்ற தன்னம்பிக்கையையும் எமக்குத் தருகிறது.

உலகின் எந்தப் பகுதியில், எந்தச் சூழலில், எந்தத்தகுதியுடன் நீங்கள் வாழ்ந்தாலும், தமிழீழத்தில் தான், அந்தத்தாயக பூமியில்தான் உங்களது வேர் ஆழப்புதைந்து கிடக்கிறது. இந்த மண்ணில் தான் உங்களது இனத்தனித்துவத்தின் அடையாளம் பதிந்து கிடக்கிறது. இந்த மண் உங்களது இரத்தத்தோடும், ஆன்மாவோடும், உங்களது வரலாற்றோடும் ஒன்று கலந்து கிடக்கிறது. இத்தாயக தேசம் எதிரியின் ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி அழிந்து போகாது பாதுகாப்பதில் உங்களுக்கும் பெரும் பங்கு உண்டு; பொறுப்பு உண்டு; கடப்பாடு உண்டு.

## ஆக்கிரமித்த பகுதிகளில் இராணுவப் பேயாட்சி

இன்று எமது தாயகம் பெரும் ஆபத்தையும், அழிவையும் எதிர்கொண்டு நிற்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்றைய அரசு, மிகவும் பெரியளவிலான போரை எமது மண் மீது ஏவிவிட்டிருக்கிறது. தமிழரின் தாயகத்தை ஆக்கிரமித்து, சிதைத்து, அழிப்பது எதிரியின் நோக்கம், தமிழரின் தேசிய அடையாளத்தை அழித்து, சிங்கள பௌத்த ஆட்சியின் கீழ் தமிழரை அடிமை கொள்வது இதன் குறிக்கோள்.

சிங்கள அரசின் இந்த ஆக்கிரமிப்புப் போர் எமது தேசத்தின் வளத்திற்கு என்றுமில்லாத பெரும் நாசத்தை விளைவித்து வருகின்றது. படையெடுப்புப்புகள் என்றும், படைநகர்வுகள் என்றும், பாதுகாப்பு வலயங்கள் என்றும், பாதை திறப்பு என்றும் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தேசத்தில் ஒரு ஊழிக்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரும் தமிழரின் பங்கும்



கூத்தை நடத்திவவுகின்றது. வீதிகளை தகர்த்து, வீடுகளை சிதைத்து, கட்டிடங்களை தரைமட்டமாக்கி, மரங்கள், தோட்டங்கள், வயல்களை அழித்து எண்ணற்ற கோடி பெறுமதியான சொத்தழிவை ஏற்படுத்தி வருகிறது. எமது முன்னோரும், மூதாதையோரும் அரும்பாடுபட்டு கட்டியெழுப்பிய நகரங்களும், பட்டினங்களும் வளமிகு கிராமங்களும், முகந்தெரியாதவாறு சிதைக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழரது வரலாற்றுப் புகழ்மிக்க, பழம்பெரும் நகரங்கள் இராணுவ ஆட்சியின் இரும்புப்பிடிக்குள் சிக்கி, சீரழிந்து வருகின்றன. இங்குள்ள மக்கள், சுதந்திரத்தை இழந்து கௌரவத்தை இழந்து, பெரும் பயத்துடனும், பதற்றத்துடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கெல்லாம் இராணுவ அட்டூழியம் தலைவிரித்தாடுகிறது. இங்கு நாளாந்தம், சுற்றிவளைப்புகளும், தேடுதல்களும், கைது செய்தலும், காணாமற்போதலும், கொலையும், பாலியல் வன்முறையுமாக இராணுவ பேயாட்சி நடந்து வருகிறது. இப்பொழுது யுத்தம் முனைப்புப் பெறும் வன்னிப் பெருநிலத்தில், பாதைதிறப்பு என்ற திட்டத்துடன் இராணுவம் அகலக் கால் வைக்க முனைகிறது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்பதால், இங்கு வாழும் மக்களை, திட்டமிட்ட முறையில், அரசு தண்டித்து வருகிறது. உணவிற்கும் மருந்துப் பொருட்களுக்கும் தடை விதித்து நிவாரணத்தை நிறுத்தியதால், பசியும் பட்டினியும், நோயும் சாவுமாக, இங்குள்ள மக்கள் படும் அவலங்கள் மிகக் கொடியது.

## பாராமுகம் காட்டும் சர்வதேச சமூகம்

தமிழர் தாயகத்தில், போர் என்ற போர்வையின் கீழ், சமாதானத்திற்காக யுத்தம் என்ற கோசத்தின் கீழ், திட்டமிட்ட முறையில் இன அழிப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழர் தேசம் படிப்படியாக ஆக்கிரமிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு வருகிறது. எமது மண்ணில் நிகழ்ந்துவரும் இந்த மாபெரும் அவலத்தை, இன அழிவை, கண்டுங் காணாததுபோல, உலக பாராமுகம் காட்டிவருகிறது. மௌனம் சாதித்து வருகிறது. ஆனால், அதே வேளை, எமது எதிரியின் இன அழிப்புப் போருக்கு, முழு உலகமும் முண்டுகொடுத்து வருகிறது. பெருந்தொகையில் நிதியுதவி வழங்கி வருகிறது. பெருமளவில் ஆயுதங்களை அள்ளிக் கொடுக்கிறது. உலகத்தின் ஆதரவும், உதவியும் இருப்பதால் தான் சந்திரிகா அரசினால் இந்தப் போரை தொடர்ந்து நடத்த முடிகிறது. சிங்களப் படையினருக்கு பேரிழப்புகள் ஏற்பட்டபோதும், போர்ச் செலவினம் சிகரத்தை எட்டியபோதும், பொருளாதாரம் சீர்குலைந்தபோதும், அரசாங்கம் போர் வெறி கொண்டு இராணுவ கடும் போக்கை கடைப்பிடிப்பதற்கு உலகத்தின் ஆதரவுதான் காரணம்.

சந்திரிகா அரசின் உண்மையான இனவாத முகத்தை உலகமானது இன்னும் அடையாளம் காணவில்லை. மாறாக, சந்திரிகாவை ஒரு சமாதானப்பிரியையாகவே காண்கி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றது. சந்திரிகா நடாத்தும் போர், சமாதானத்திற்காகவும் தமிழரின் விமோசனத்திற்காகவும் மேற்கொள்ளப்படுவதாக நம்புகின்றது. ஒரு புறம் சமாதானப் போர் என்றும், மறுபுறம் தீர்வுப்பொதி என்றும், சந்திரிகா அரசு முன்னெடுக்கும் இரட்டை அணுகுமுறையானது இலங்கைத் தீவில் சமாதானத்தை தோற்றுவித்து, தமிழரின் இனப்பிரச்சினையை தீர்த்துவைத்து, ஒரு நிலையான ஆட்சிமுறைக்கு வழிகோலும் என உலகம் எதிர்பார்த்து நின்கின்றது. அப்படியான ஒரு அரசியல் மாயையைத்தான், சிங்கள அரசு உலகத்திற்கு உருவகித்து காட்டி இருக்கிறது. மிகவும் நுட்பமான பிரச்சார உத்திகளைக் கையாண்டு, உண்மைகளை திரித்து ராஜரீக வித்தை காட்டி; மிகவும் சாதுரியமான முறையில் சர்வதேச உலகத்தை ஏமாற்றி இருக்கிறது. ஒரு அரசு என்ற ரீதியில் சிறீலங்காவின் குரலிற்கு ஒரு அரசு நம்பகத்தன்மை இருக்கும் என உலக நாடுகள் எண்ணிக்கையிருக்கலாம். அந்தக் குரலும், ஒரு தமிழனின் குரலாக ஒலித்து, சந்திரிகாவின் இனவழிப்புப் போரை சமாதானத்திற்கான போராக நியாயப்படுத்திய போது, அதனை உலகம் நம்பியது. தமிழரின் மூளைவளத்தை விலை கொடுத்து வாங்கி, அதனை தமிழருக்கு எதிராகப் பயன்படுத்தும் அரசியல் சாணக்கியம் சந்திரிகா அரசிடம் உண்டு என்பதை உலகம் எப்படித்தான் புரிந்து கொள்ளப் போகிறது.

இன்றைய உலகமானது மனித நீதி என்ற அச்சில் சுழலவில்லை. மனிதம், தர்மம் என்ற தார்மீக அறங்கள் உலக உறவுகளை நிர்ணயிக்கவில்லை. ஒவ்வொரு உலக நாடும் தனது தேசிய நலனுக்கே முதன்மை கொடுக்கின்றது. இந்த நலனைப் பேணும் அடிப்படையிலேயே இன்றைய உலக ஒழுங்கும் உலக உறவுகளும் அமையப்பெற்றிருக்கின்றன. இதுவே இன்றைய உலக யதார்த்தம்.

இலங்கையில் நெருக்கடி தீர்த்து, சமாதானமும் நிலையான ஆட்சியும் தோன்றினால் தமது நலன்களைப் பேண வாய்ப்பாக இருக்குமென உலகநாடுகள் கருதலாம். இந்த எதிர்பார்ப்பில் தவறில்லை. ஆனால் இந்தச் சாதனையை சந்திரிகா அரசு நிலைநாட்டிவிடப்போகிறது என கவலையையும் கொடுக்கின்றது.

## சிங்கள அரசின் நாசகார நோக்கம்

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தமிழர் தேசத்தில் அமைதியைக் கொண்டு வருவது இந்த அரசின் நோக்கமல்ல. தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து, தமிழரின் வளங்களை அழித்து, தமிழரை அடிமை கொள்வதுதான் இந்த அரசின் நோக்கம். இதனால் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், இலங்கைத் தீவில், நிலையான சமாதானம் தோன்றுவது சாத்தியமில்லை. எப்பொழுதுதான் இந்த உண்மையை உணர்ந்து உலகம் விழித்துக் கொள்ளப்போகிறதோ எமக்குத் தெரியாது. ஆனாலும், உண்மைகள் நீண்டகாலம் உறங்கப் போவதில்லை என்பதுமட்டும் உண்மை. என்றோ ஒரு நாள், உலக அரங்கில், சந்திரிகாவின் சமாதான வேடம் கலையப்போவது திண்ணம். அவரது பொய்யான முகமூடி கழன்றுவிழும் பொழுதுதான் சிங்களப் பேரினவாதத்தின் அசிங்கமான முகத்தை உலகம் கண்டுகொள்ளும். அப்பொழுதுதான் ஒடுக்கப்படும் எமது இனத்தின் விடுதலைக்குரல் உலகத்தின் செவிகளில் நுழையும். அந்தக் காலம் அண்மித்துக்கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தை கனிய வைப்பது எமது போராட்ட வலுவில்தான் தங்கியிருக்கிறது.

முழு உலகமும் முண்டுகொடுத்து நிற்க, சந்திரிகா அரசானது தனது முழுப்படை பலத்தையும் பயன்படுத்தி, புலிகள் இயக்கத்துடன் மூர்க்கமாகப் போரிட்டு வருகிறது. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகத் தொடரும் இக்கடும் போரில் சிங்கள இராணுவத்திற்கே பெரிய அளவிலான உயிரிழப்பும், ஆயுத இழப்பும் ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணக் குடாநாடு இராணுவத்தின் பிடிக்குள் வீழ்ந்தபோதும், தமிழீழத்தின் பல பகுதிகள் எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்திருக்கிறது. தந்திரோபாயப் பின் நகர்வின் அவசியம் காரணமாகவே நாம் யாழ்ப்பாணத்தை இழக்க நேரிட்டது. ஆயினும், இந்தப் போரில் நாம் பல சாதனைகளை ஈட்டி, எதிரிக்கு பேரிழைப்புகளை ஏற்படுத்தி வருகிறோம்.

இப்பொழுது, வன்னிப் பெரு நிலப்பரப்பில், போர் விரிவாக்கம் பெற்றிருக்கிறது. யாழ்ப்பாணத்திற்காக தரைப்பாதை திறப்பு என்ற போர்வையில், வடமாநிலத்தை துண்டாடி, தமிழர் தாயத்தை உருக்குலைக்க சிங்கள அரசு திட்டமிட்டிருக்கிறது. இந்த நாசகார நோக்குடன் வன்னியில் பெரும் படையெடுப்பை ஆரம்பித்திருக்கிறது. இந்தப் படையெடுப்பை எதிர்த்து, எமது வீரர்கள் ஆவேசமாகப் போரிட்டு வருகிறார்

**பிறந்த மண்ணைப் பிரிந்து, அந்நிய நாடுகளில் வாழ்ந்துவரும் நீங்கள் என்றோ ஒரு நாள் தாயகம் நோக்கிய பயணத்தைத் தொடர்வீர்கள். அன்று எமது தாயகம், அடக்குமுறையாளனின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு, ஒரு சுதந்திர தேசமாக, இறைமையுள்ள நாடாக அமைந்திருக்கும். அந்தச் சுதந்திர தேசத்தைக் கட்டியெழுப்பி, ஒரு வளம்மிகு நாடாக உருவாக்குவதற்கு உங்களது பொறுப்பாகவும் பணியாகவும் இருக்கும். இதுவே எமது இலட்சியக்கனவு. இந்த இலட்சியக்கனவு ஒருநாள் நிறைகாண்பது திண்ணம்.**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள். எமது உக்கிரமான கடும் எதிர்ப்பு காரணமாக, எதிரிப்படையணிகள் பெரும் இழப்புக்களை சந்தித்து வருகின்றன. ஆயினும் படைநகர்வைத் தொடர்ந்து தனது குறிக்கோளை அடைவதில் எதிரி தீவிரமாக நிற்கிறான். இதனால் வன்னிப் பெருநிமானது, சிங்கள இராணுவத்தினதும் விடுதலைப்புலிகளதும் மிகப் பெரிய பலப்பரீட்சைகளின் போர்க்களமாக மாறிவருகிறது.

# அனைத்துலக தமிழீழ மக்களுக்கு தேசியத் தலைவரின் அறைகூவல்

நாம் ஒரு சிறிய தேசிய இனம். எமது விடுதலைப் போராட்டத்திற்கு எந்த ஒரு உலக நாடும் உதவி வழங்கவில்லை. இதனால் எமது இயக்கத்தின் பலமும் வளமும் வரையறுக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும் இதுவரை காலமும், எமது பலத்தையும் வளத்தையும் நுட்பமாகப் பயன்படுத்தி, எமது பலம் சிதைந்து போகாமல் சாதுரியமாகப் போரிட்டு, எதிரிக்கு பெரும் சவாலாக நிற்றோம்.

சிங்களம் பெரிய ஒரு தேசிய இனம். அத்தோடு அரசு என்ற அந்தஸ்தைப் பெற்று, உலகத்தோடு உறவுகளை வைத்திருக்கிறது. அதன் பலமும் வளமும் மிகப்பெரிது. முழு உலகமும் அதற்கு முண்டுகொடுத்து நிற்கிறது. எல்லா வகையிலும் உதவிகளை வழங்கி வருகின்றது. இப்படியான பலம் பொருந்திய பகைவனுடன், நாம் தனித்து நின்று போராடி நிலைத்து நிற்பது என்பது ஒரு மகத்தான சாதனை என்றே சொல்ல வேண்டும்.

எமது இயக்கம் முன்னெடுத்து வரும் விடுதலைப்போராட்டம் இருபது ஆண்டுகளுக்கு மேலான வீர வரலாற்றைக் கொண்டது. இந்த நீண்டகாலத்தில், எத்தனையோ இடர்களிற்கும் மத்தியில் ஓயாத

## எமது மக்களிடமிருந்து எமது சக்தி பிறக்கிறது

புயலாக நின்று நாம் போராடிவருகிறோம். எமது பேராற்றலைக் கண்டு உலகமே வியந்து நிற்கிறது. தனித்து நின்று, எமது சொந்தக் கால்களில் நிலைத்து நின்று எமது சக்திக்கு மிஞ்சிய பகைவருடன் நாம் போராட முடிந்ததென்றால், அதனை எமது மக்களின் மண்பற்றும் விடுதலைப்பற்றும் பிரதானமானது, அந்தத் தணியாத ஊற்றில் இருந்தே எமது சக்தி பிறக்கிறது.

தமிழீழ மக்கள், காலம்காலமாக எமது போராட்டத்திற்கு தம்மாலான உதவிகளை வழங்கி வந்திருக்கிறார்கள். பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். மண்மீட்புப் போருக்கு அவர்கள் செய்த அன்பளிப்புகள் அளப்பரியது. அன்று தொட்டு இன்றுவரை, அவர்களது பங்களிப்பு எமது பலத்திற்கும் வளத்திற்கும் ஆதாரமாக இருந்து வருகிறது. ஆயினும், இன்றைய போர்ச் சூழலில், எமது மக்களின் நிலை பரிதாபத்திற்குரியது. போர் நெருக்கடியும், பொருளாதார அழுத்தங்களும், இராணுவ ஆக்கிரமிப்பும், இடப்பெயர்வும், அகதி வாழ்வுமாக எமது மக்கள் சுமக்கமுடியாத பெரும் பளுக்களைச் சுமந்து நிற்கின்றார்கள். சந்திரிகா அரசு இந்த நிலைக்கு எமது மக்களைத் தள்ளி விட்டிருக்கிறது. தமிழர் தேசத்தின் வாழ்வையும் வளத்தையும் சிதைத்து, அதன் மூலமாக தமிழரின் போராடும் ஆற்றலை அழிப்பதும் பேரினவாதத்தின் குறிக்கோள். இந்த தந்திரம் புதிதானதல்ல. விடுதலைப் போர் நிகழ்ந்த எல்லா நாடுகளிலும் அடக்குமுறையாளர் கையாளும் ஒடுக்குமுறை வடிவம் இது. ஆயினும் முந்தய சிங்கள அரசுகளை விட, சந்திரிகா அரசு இந்தப் பொருள்வள அழிப்புத் தந்திரோபாயத்தை மிகவும் தீவிரமாக, ஈவிரக்கமற்ற முறையில் செயற்படுத்தி வருகிறது. இதனால் எமது மக்கள் வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கிறார்கள். துன்பமும் துயரமும் நிறைந்த சோகமான வாழ்க்கையைத் தழுவி நிற்கும் எமது மக்களிடம் இருந்து நாம் பொருள் உதவியை எதிர்பார்க்க முடியாது. அது அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டது.

## புலிகளின் வலுவில் தமிழரின் தலைவிதி

இப்படியானதொரு சோதனையான காலகட்டத்தில், எமது தேசத்தின் விடுதலைச் சுடர் அணைந்து போகாது பாதுகாப்பது உங்களது கையில்தான் தங்கியிருக்கிறது. புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களாகிய நீங்களே, எமது போராட்டத்துக்கு கைகொடுத்து உதவவேண்டும். இன்றைய காலமும் சூழலும் உங்களது பங்களிப்பைத்தான் வேண்டி நிற்கிறது.

காலம்காலாமாக, எமது போராட்டத்திற்கு நீங்கள் உதவி வருகிறீர்கள். பல்வேறு வழிகளில் பங்களிப்புச் செய்து வருகிறீர்கள். இந்தப் பங்களிப்புகள் எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பெரிதும் உதவியாக இருந்திருக்கின்றன. ஈழத் தமிழரின் போராட்ட வரலாறு இந்தப் பங்களிப்பை என்றும் பதிவுசெய்து வைத்திருக்கும், ஆயினும், இன்று தமிழீழத்தில் உருவாகியிருக்கும் சூழ்நிலை வித்தியாசமானது. ஆபத்தானது, இன்று, போர் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. இதுவரையும், விடுதலைப்போராட்டத்தில் பங்குகொண்டு உதவிய மக்கள், இன்று ஜீவமரணப் போராட்டத்தில் இடர்பட்டு வாழ்கிறார்கள். தமிழீழ மக்களின் தலைவிதியே, புலிகளின் இயக்கத்தின் போராட்டவலுவில், போராடும் சக்தியில் தங்கிநிற்கிறது. தமிழர் தேசத்தின் பாதுகாப்பும், தமிழரின் எதிர்கால அரசியல் வாழ்வும் இன்றைய போரின் போக்கில் தான் தங்கியிருக்கிறது. இந்த இக்கட்டான நிலைமையில், தமிழினத்தின் போராட்ட சக்தியான எமது இயக்கத்தின் பலத்திற்கும் வளத்திற்கும் வலுச் சேர்ப்பது உங்களது பொறுப்பும் கடனும் ஆகிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலகத் தமிழர் சமூகம் மிகப் பலமான சக்தி

தேசவிடுதலைப் போராட்டங்களுக்கு உந்துசக்தியாக விளங்குவது தேசப்பற்று. தேசப்பற்றானது உணர்வு பூர்வமானது. மனிதர்களின் அடிமனதில் ஆழவேரோடி நிற்பது. காலத்திற்கும் இடத்திற்கும் அப்பால் மனிதர்களை ஆட்கொண்டு நிற்கும் ஒரு அபூர்வமான சக்தி. இந்த மண்பற்று, புலம்பெயர்ந்த மக்களிடம் தீவிரம் பெறுவது இயல்பு. ஏனென்றால் பிறந்த மண்ணில் இருந்து, வளர்ந்த மண்ணில் இருந்து, பெயர்ந்து நிற்பவர்கள் அவர்கள், அவர்களுக்குத்தான் பிறந்த மண்ணின் பிரிவுத் துயரம் தெரியும். எனவே தான், புலம்பெயர்ந்த மக்கள், தத்தம் தேசவிடுதலைப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்குகொள்கிறார்கள். பங்களிப்புச் செய்கிறார்கள். விடுதலை வரலாறுகள் புகட்டும் உண்மை இது.

பிறந்த மண்ணைப் பிரிந்து செல்வதற்கு பல காரணங்கள் இருக்கலாம் ஆயினும் பெரும்பாலும், உள்நாட்டில் எழும் அமைதியின்மையும், கொந்தளிப்பும் காரணமாகவே, மக்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்து கொள்கிறார்கள். இலங்கையில் ஏற்பட்ட இன ஒடுக்குமுறையும், அதனால் எழுந்த உள்நாட்டு நெருக்கடியும் காரணமாகவே தமிழீழ மக்களாகிய நீங்களும் உங்களது பிறந்த மண்ணை விட்டுப் பிரிந்துசெல்ல நேர்ந்தது.. சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகளே உங்களை இந்த மண்ணில் இருந்து வெளியேற நிர்ப்பந்தித்தது. உங்களது சொந்த மண்ணில் நீங்கள் அமைதியாக நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ்வதற்கு சிங்கள இனவாதம் இடமளிக்கவில்லை. அதனால் நீங்கள் வெளியுலகப் பயணத்தை மேற்கொண்டீர்கள். தமிழர்களைத் தமிழர்களது தாயகத்தில் இருந்து புலம்பெயர நிர்ப்பந்திப்பதும் பேரினவாதிகளின் தந்திரோபாயங்களில் ஒன்று. பெருந்தொகையில் தமிழர்கள் குடிபெயர்ந்தால், தமிழர் தேசம் பலவீனமடைந்து– தமிழர் தேசம் சிதைந்து போகுமென சிங்கள ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழர் சமூகமானது பலம்வாய்ந்த சக்தியாக நின்று தமிழீழ விடுதலைப் போருக்கு உதவி வருவதாக எமது எதிரியே பகிரங்கமாகப் பிரகடனம் செய்துவருகிறான். அத்தோடு, புலம்பெயர்ந்த தமிழருக்கும் புலிகள் இயக்கத்திற்கும் மத்தியிலான உறவுகளைத் துண்டித்து, வெளிநாட்டு உதவிகளை நிறுத்தி, தமிழீழ விடுதலைப்போராட்டத்தை பலவீனப்படுத்திவிட சிங்கள அரசு பகீரத முயற்சிகளை செய்து வருகின்றது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

தமிழரின் சுதந்திர இயக்கம், தமிழீழத்தில் வேர்பதித்து நின்றாலும், அந்த விருட்சத்தின் கிளைகள் உலகமெங்கும் பரந்து, வியாபித்து நிற்கின்றன என்பது எமது எதிரிக்குத் தெரியும். நாம் சிறிய தேசிய இனமாக இருந்தாலும் எமது பலம் பெரிது. அந்தப் பலம் உலகளாவிய சக்தியாக விஸ்வரூபப் பரிமாணம் எடுத்து நிற்கிறது. இந்தப் பெரும் சக்தியானது தனது முழுப்பலத்துடன் தமிழீழ விடுதலைப் போருக்குத் தோள்கொடுத்து நின்றால், தமிழீழம் ஒரு சுதந்திர தேசமாக உருப்பெறுவதை தடுக்க முடியாதென்பதும் எமது எதிரிக்குத் தெரியும். எனவே தான் தமிழரின் பலமும் வளமும் ஒன்றுகுவிந்து, தமிழீழப் போராட்டம் வலுப்பெறுவதைத் தடுக்க எதிரி தன்னாலான முயற்சிகளைச் செய்கிறான்.

## விடுதலைப் புலிகளின் இலட்சியக் கனவு

தமிழர் தாயகம் என்பது தமிழரின் தன்னாட்சிப் போராட்டத்திற்கு மையமானது, ஆதாரமானது, இந்தத் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாட்டையும் தனித்துவத்தையும் அழித்துவிடுவது, சந்திரிகா அரசின் போர்த்திட்டத்தினது மூலோபாயம். இதனால் இந்த இராணுவத்திட்டத்தை முன்னெடுப்பதில் சிங்கள அரசு முழு முனைப்பாக நிற்கிறது. இதனால் தான் இத்திட்டத்திற்கு சிங்கள தேசத்தின் முழு வளமும் கொட்டப்படுகிறது. இதனால் தான் இத்திட்டத்திற்கு சிங்கள பேரினவாத சக்திகள் முழு ஒத்துழைப்பையும் கொடுத்து வருகின்றன.

இந்த அழிப்புத் திட்டத்திற்குத் தான் சமாதானப்போர் என்ற அழகு முலாம் பூசப்பட்டு உலகத்தின் ஆதரவும் திரட்டப்பட்டிருக்கிறது.

இந்த இராணுவத்திட்டம் தமிழினத்திற்கு ஆபத்தானது. தமிழரின் தேசிய அடையாளத்தை அழித்துவிடும் நோக்கம் கொண்டது. தமிழரின் அரசியல் எதிர்காலத்தையே ஆழமாகப் பாதிக்கக்கூடியது.

இந்தப் போர் தமிழரின் தாயகத்திற்கான போர். இந்தப் போருக்கு நீங்கள் உங்களால் முடிந்த பங்களிப்பைச் செய்ய வேண்டும். தமிழர் தாயகத்தின் பாதுகாவலனாக நின்று, உறுதியோடு போராடும் உங்கள் விடுதலை இயக்கத்தின் போராடும் சக்திக்கு வலுவூட்டிப் பலமூட்ட நீங்கள் தயங்காது முன்வரவேண்டும்.

பிறந்த மண்ணைப் பிரிந்து, அந்நிய நாடுகளில் வாழ்ந்துவரும் நீங்கள் என்றோ ஒரு நாள் தாயகம் நோக்கிய பயணத்தைத் தொடர்வீர்கள்.

அன்று எமது தாயகம், அடக்குமுறையாளனின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு, ஒரு சுதந்திர தேசமாக, இறைமையுள்ள நாடாக அமைந்திருக்கும்.

அந்தச் சுதந்திர தேசத்தைக் கட்டியெழுப்பி, ஒரு வளம்மிகு நாடாக உருவாக்குவதற்கு உங்களது பொறுப்பாகவும் பணியாகவும் இருக்கும்.

இதுவே எமது இலட்சியக்கனவு. இந்த இலட்சியக்கனவு ஒருநாள் நிறைகாண்பது திண்ணம்.

★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர்ச்செலவு அதிகரிப்பால் எழுந்த பொருளாதாரச் சுமைகள் காரணமாக அரசாங்கத்தால் நிர்வகிக்க முடியாமல் போய் தனியார்மயப்படுத்தல் மூலம் விற்கப்படும் அரச சொத்துக்களில் எயர்லங்கா நிறுவனம் இணைந்துவிட்டது.

ஐக்கிய அரபு எமரேட் நாட்டின் விமானசேவை நிறுவனமொன்று எயர்லங்கா நிறுவனத்தின் 40–வீதப் பங்கை 420 கோட் ரூபா கொடுத்து வாங்கி, அதன் நிர்வாகத்தையும் கையேற்றுள்ளனர்.

எயார்லங்கா நிறுவனத்தை எமிரேட் நிறுவனத்திடம் கையளித்த செயலை சிங்களத் தேசாபிமானிகளால் ஜீரணிக்க முடியவில்லை.




அபிவிருத்தி பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்த சிங்கள புத்திஜீவிகளில் பலர்– அதில் ஏமாற்றமடைந்து தோல்வியை ஏற்றுக் கொண்டு இதற்கு இனப்போரே மிகமுக்கிய காரணி எனவும் ஒப்புக்கொள்கின்றனர்.

ஒரு காலத்தில், இலங்கையின் பொருண்மிய வளர்ச்சியுடன் சமதையாக ஒப்பிடப்பட்ட சில ஆசிய நாடுகள் இன்று பொருண்மிய ரீதியில் பாரிய வளர்ச்சி கண்டு உச்ச நிலைக்குச் சென்றுவிட்டன. ஆனால், இலங்கைத்தீவு இப்போதும் பொருண்மிய ரீதியில் 30 வருட பின்னடைவுடன் உள்ளது என்ற உண்மையையும் சிங்கள பொருண்மிய வல்லுனர்கள் புள்ளிவிபரங்களுடன் ஒப்பிட்டு பெருமூச்சுவிடுகின்றனர்.

# எயார் லங்கா விமான நிறுவனம்

# விலைபோகும் தேசியப் பெருமை

உலகெங்கும் வாழும் சிங்கள மக்களது தாய்நாட்டு நினைவுகளைக் கிளறிவிடும் ஒரு நகரும் குறியீடாக, எயர்லங்கா முத்திரை குத்தப்பட்ட விமானங்கள் விளங்கி வருகின்றன. இத்தகையதொரு தேசிய சின்னத்தை வெளிநாட்டு விமான சேவைக்கு 10–வருட குத்தகையாகக் கொடுத்துவிட்ட செய்தி பெரும்பாலான சிங்களவர்களை மனம் நோக வைத்துவிட்டது.

சிங்களவரின் மனப்புளுக்கத்தை சண்டேரைம்ஸ் (ஏப்,5) வார ஏடு தனது ஆசிரியர் தலையங்கம் மூலம் பிரதிபலித்துள்ளது.

எயார்லங்கா நிறுவனம் தனியார் மயப்படுத்தப்பட போகின்றது என்று முன்னர் வெளிவந்த செய்தியை அரசாங்கம் மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. சிறீலங்காவின் தொலைத்தொடர்பு நிறுவனமும் பொ.ஐ. முன்னணி அரசாங்கம் மறுத்துவருகின்றது. கொழும்பு துறைமுகத்தின் சில பகுதிகளும் தனியாருக்கு விற்கப்படப்போகின்றன என்ற செய்தியையும் அரசாங்கம் மறுக்கின்றது. ஆனால் இப்போது அரச சொத்துக்களில் எதையும் எந்த நேரத்திலும் தனியார்மயப்படுத்த சந்திரிகா அரசாங்கம் முடிவெடுக்கலாம் என்ற நிலையே இருந்துவருகின்றது.

பொருளாதார நெருக்கடியை இவை தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

சிறீலங்காவின் பொருளாதார

1960–களின் ஆரம்பத்தில் இலங்கைத் தீவின் தனிநபர் ஆண்டு வருமானம் சுமார் 150 டொலர்களாக இருந்தது. அப்போது தென் கொரியாவும் – தாய்வானும் இதேயளவு தனிநபர் வருமானத்தைக் கொண்டிருந்தன. இதேவேளை, இந்தோனேசியாவும் தாய்லாந்தும் இலங்கையின் தனிநபர் வருமானத்தை விட குறைவான வருமானத்தையே கொண்டிருந்தன. (அட்டவணை 1–ஐப் பார்க்கவும்). அந்தக் கால கட்டத்தில் ஆசிய நாடுகளில் சிங்கப்பூர், ஹொங்கொங், மலேசியா மட்டுமே தனிநபர் ஆண்டு வருமானத்தில் முன்னணியில் நின்றன. இவை 300 டொலர்களை தனிநபர் ஆண்டு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருமானமாகக் கொண்டிருந்தன.

ஆனால், 30 வருடகாலத்தின் பின்னர் 1990—களின் ஆரம்பத்தில் சிங்கப்பூரின் தனிநபர் ஆண்டு வருமானம் 20,000 டொலர்களாக இருக்க இலங்கையின் தனிநபர் ஆண்டுவருமானம் வெறும் 600 டொலர்களாக மட்டுமே இருந்தது. (1997—இல் இது 700 டொலர்களாக இருந்தது) இதேவேளை, இலங் கையை விட பின் தங்கிநின்ற தாய்லாந்தில் தனிநபர் ஆண்டு வரு மானம் 3,000 டொலர்களாகவும்— இந்தோனேசியாவில் 1050 டொலர்க ளாகவும் வளர்ச்சி கண்டிருந்தன. (அட்டவணை 11 ஐ பார்க்கவும்).

1979—ம் ஆண்டு கொழும்புக்கு விஜயம்செய்திருந்த சிங்கப்பூரின் சிற்பி வி.குவான் யூ கேள்வி ஒன் றுக்கு பதிலளிக்கையில் "1979—இல் சிங்கப்பூர் கண்டுள்ள பொருண்மிய வளர்ச்சியை இலங்கைத்தீவானது 1990—இல் அடையலாம். ஆனால் தமிழரின் இனப்பிரச்சினை தீர்க்கப் படவேண்டும்" என்று அப்போதே நிபந்தனையுடன் தீர்க்கதரிசனம் கூறியிருந்தார்.

1979—இல் சிங்கப்பூரின் தனிநபர் ஆண்டு வருமானம் 3830 டொலர் களாகும். சிங்கப்பூரின் சிற்பி எதிர்வு கூறியதற்கிணங்க, 1990—இல், தாய் லாந்தும்— மலேசியாவும் சிங்கப்பூரின் 1974 களில் இருந்ததைப் போலவே இன்றும் இருக்கின்றது.

இலங்கையைப் போன்றே மலேசி யாவும் பாரியதொரு இனப்பிரச் சினையை எதிர்கொண்டிருந்த ஒரு நாடு. மலேசியாவின் மொத்த சனத் தொகையில் 52 வீதமானோர் மலே இன மக்கள். 37 வீதமானோர் மலே இனத்தவர். எனினும், ஒப்பீட்டள வில் வெற்றிகரமான முறையில் தனது இனப்பிரச்சினையை மலே சியா கையாண்டு— பொருண்மிய வளர்ச்சியைக் கண்டுவருகின்றது. ஆனால், சிங்கள அரசோ இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அன்றிலி ருந்து தமிழ் இன அழிப்பையே கைக்கொண்டதானால், இனமுரண் பாடு வர வர கூர்மையடைந்து சாதாரணமுறையில் தீர்த்துவைக்க முடியாத சிக்கலான பிரச்சினையாக பரிமாணம் பெற்றுவிட்டது. இப் போது, போர்ச்செலவு சிங்களத்தின் பொருண்மியத்தை ஒப்பிட்டுக் கொண்டிருக்கின்றது, "ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் 22 ரூபா பாது காப்புச் செலவிற்கென கரியாகின் றது" என்று சந்திரிகா அரசாங்கத் தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவ ரான தர்மசேனே சௌநாயக்க பகிரங்கமாக ஆதங்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்புச் செலவீனத்தைப் பொறுத்தவரையில் தென்னாசிய நாடுகளில் பாகிஸ்தானையும் முந்திக் கொண்டு சிறீலங்கா முதல் இடத் தைப் பிடித்துவருகின்றது.

சிறீலங்காவின் வருடாந்த பாது காப்புச் செலவீனத்தைவிட இந்தியா தனது பாதுகாப்புச் செலவீனத் திற்கென 10 மடங்கு பணத்தை மட்டுமே செலவிடுகின்றது. இலங் கைத்தீவைவிட 60 மடங்கு மக்கள் தொகையையும் 50 மடங்கு, நிலப் பரப்பையும் கொண்டது இந்தியா. அத்துடன் சீனா, பாகிஸ்தான் என வெளியில் இருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் மற்றும் உள் நாட்டு கிளர்ச்சிகளையும் எதிர் கொண்டபடி இருந்தும், அது ஒப் பீட்டளவில் சிறீலங்கா அரசைவிட பாதுகாப்புச் செலவீனத்திற்கென தனது தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை ஒதுக்கும் உலகின் ஒரு சில நாடுகளில் சிறீலங்காவும் இடம்பிடித் துள்ளது.

உயிரழிவையும் — பொருள் அழி வையும்— பொருண்மிய நாசத்தையும் உண்டாக்கும் இந்தப் போரால், சிங்கள அரசாங்கம் எதையும் சாதிக் கப்போவதில்லை. போரால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங் களை அனுபவிக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால், தமிழினத் தின் தனித்துவங்களை போர்வாயி லாக அழித்துவிடலாம் என்ற சிங்க ளத்தின் சிந்தனை வெறும் கற்பனை தான் என்பதை என்றோ ஒருநாள் அது கண்டுகொள்ளத்தான் போகின் றது.

★💎★

| 1960 களின் ஆரம்பத்தில் தனிநபர் ஆண்டு வருமானம் (ஏறக்குறைய) | | |
|---|---|---|
| சிங்கப்பூர் | 300 | டொலர்கள் |
| மலேசியா | 300 | " |
| ஹொங்கொங் | 150 | " |
| இலங்கை | 150 | " |
| தென்கொரியா | 150 | " |
| தாய்வான் | 150 | " |
| தாய்லாந்து | 96 | " |
| இந்தோனேசியா | 51 | " |

அட்டவணை 1

| 1990 களின் ஆரம்பத்தில் தனிநபர் ஆண்டு வருமானம் (ஏறக்குறைய) | | |
|---|---|---|
| சிங்கப்பூர் | 20,000 | டொலர்கள் |
| தென்கொரியா | 9,000 | " |
| மலேசியா | 4,000 | " |
| தாய்லாந்து | 3,000 | " |
| இந்தோனேசியா | 1,050 | " |
| இலங்கை | 600 | " |

அட்டவணை 2

**போரால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால், தமிழினத் தின் தனித்துவங்களை போர்வாயிலாக அழித்துவிடலாம் என்ற சிங்களத்தின் சிந்தனை வெறும் கற்பனை தான் என்பதை என்றோ ஒருநாள் அது கண்டுகொள்ளத்தான் போகின்றது.**




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாகிஸ்தானின் ஏவுகணையும் தென்னாசியாவில் பனிப்போரும்!

1991–ஆம் ஆண்டு சோவியத் யூனியன் சிதைவடைந்ததைத் தொடர்ந்து ஆயுதப் போட்டியும், பனிப்போரும் முடிவிற்கு வந்துவிட்டதாக பல அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர். அத்தோடு அமெரிக்கா வகுக்கவிருந்த புதிய உலக ஒழுங்கில் இதற்கு இடம் அற்றுப் போகும் எனவும் ஆருனம் கூறினர். ஆனால், சோவியத் யூனியனின் சிதைவு உலக ரீதியான ஆயுதப் போட்டியிலும், பனிப் போரிலும் காத்திரமானதொரு தாக்கத்தை விளைவிப்பவையாக இருந்திருப்பினும் பிராந்திய ரீதியில் கிறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தில் இதன் பாதிப்பு மிக மிகக் குறைந்தளவு தாக்கத்தையே, ஒருவகையில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றே கூறலாம்.




இதன் ஒரு வெளிப்பாடாகவே இன்று பாகிஸ்தான், கடந்த திங்கட் கிழமை பரீட்சித்துள்ள 'ஹோரி' என்னும் நடுத்தரவீச்சு ஏவுகணையினைக் கொள்ளலாம். பாகிஸ்தானின் அறிவிப்பின்படி இவ் ஏவுகணையானது 1500 கிலோ மீற்றர் தொலைவிற்குச் சென்று தாக்கக் கூடிய வல்லமை பொருந்தியதும் 700 கிலோ மீற்றர் தொலைவிற்குச் சென்று தாக்கக்கூடிய வல்லமை பொருந்தியதும் ,700 கிலோ கிராம் வெடிபொருட்களை ஏற்றிச் செல்லக் கூடியதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு இவ் ஏவுகணைக்கான தொழில் நுட்பம் முற்று முழுதாகத் தமது நாட்டினதே எனவும் பாகிஸ்தான் கூறுகின்றது. ஆனால் இவ் ஏவுகணையின் ஆற்றல் மற்றும் தயாரிப்பு என்பன குறித்து பல மாறுபட்ட கருத்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன. அதாவது இவ் ஏவுகணை 1500 கி.மீற்றர் சென்று தாக்கக்கூடியதல்ல எனவும், இவ் ஏவுகணைக்கான தொழில் நுட்பத்தை சீனாவே பாகிஸ்தானுக்கு வழங்கியதெனவும். இவ் ஏவுகணையின் சில முக்கிய உதிரிப்பாகங்கள் சீனாவினுடையது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனையே மேற்குலகமும் பெரும்பாலும் நம்புவதாக வெளியாகும் தகவல்கள் கூறுகின்றன.

ஆனால் இவ் ஏவுகணைக்கு யார் உதவினார்கள்? எந்த நாட்டுத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டது? எந்த அரசு உதிரிப்பாகங்களை கொடுத்து உதவியது? என்பன குறித்து எப்பேறப்பட்ட கருத்துக்கள் இருப்பினும் சரி ஒருவிடயம் உண்மையானதாகும். பாகிஸ்தான் தனது பெயரில் நடுத்தர வீச்சு ஏவுகணைகளைத் தயாரிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொண்டுள்ளது என்பதே அதுவாகும்.

இந்த நிலையில் தென்னாசியாவில் மீண்டும் ஓர் ஆயுதப் போட்டியும் பனிப்போரும் தீவிரமாவது தவிர்க்கமுடியாததொன்றாக மாறியுள்ளது. ஏற்கனவே இந்தியா ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் கணிசமான முன்னேற்றத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. இதில் சில ஏவுகணைகளை இராணுவத்தினரின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துமுள்ளது.

இந்த வகையில் குறுந்தூர வீச்சு ஏவுகணையான 'பிரிதிவி" முதன்மையானதாகும். 150—350 கிலோமீற்றர் வரையிலுள்ள இலக்குகளை குறிதவறாது தேடித் தாக்க வல்லதாகும். இது 500–1000 வெடிப்பொருட்களை எடுத்துச் செல்ல வல்லதாகும். இதேசமயம் இவ் ஏவுகணையானது அணுகுண்டுகளையும் தாங்கிச் செல்லக்கூடியதாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்ததாக இந்திய ஏவுகணைத் திட்டத்தில் நடுத்தர வீச்சு ஏவுகணையாளி 'அக்கினி' முக்கியத்துவம் பெறுகின்றது. 1500–2500 கிலோ இலக்கைத் தாக்கக்கூடியதான இவ் ஏவுகணையானது 1000 கிலோ வெடிபொருட்களைச் சுமந்துசெல்லக்கூடியதாகும். இவ் ஏவுகணையை இந்தியா 1994 பெப்ரவரியில் பரீட்சித்தபோது அமெரிக்காவின் கவனம் இப்பிராந்தியம் நோக்கிப் பெரிதாக ஈர்க்கப்பட்டது.

இதேசமயம் தரையில் இருந்து தரையைத் தாக்கும் ஏவுகணைகளைத் தவிர தரையில் இருந்து வானுக்குச் செலுத்தும். 'ஆகாஸ்', 'திரிசூல்' மற்றும் டாங்கி எதிர்ப்பு ஏவுகணையான 'நாக்' என்பன இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்தில் பெரும் அபிவிருத்தி கண்ட நிலையில் உள்ளவையாகும். அத்தோடு பரீட்சார்த்த முயற்சியில் வெற்றியடைந்துள்ளவையுமாகும்.

இந்தவகையில் பார்க்கையில் பாகிஸ்தானின் ஏவுகணைத் திட்டமானது, இந்தியாவைவிடப் பலவீனமானதாக இருப்பினும் இரு தரப்பினரும் இனி அடுத்த கட்டத்தைப் பற்றியே பெரிதும் சிந்திப்பவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஏற்கனவே இவ்விரு நாடுகளும் அணுவாயுதம் தொடர்பான கொள்கையில் ஒன்றையொன்று பிரதிபலிப்பவையாகவே உள்ளன. அதாவது இவ் இரு நாடுகளும் அணுவாயுத திட்டத்தில் கணிசமான அளவில் முன்னேறியவையாகவே உள்ளனர். இதனையே உலக இராணுவ ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர். ஆனால் இவை ஒன்றையொன்று காரணம் காட்டி அணுவாயுதப்பரவல் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்துவிட்டது மட்டுமல்ல, இது குறித்து காலத்திற்குக் காலம் முரண்பாடான தகவல்களையும் வெளியிட்டவண்ணமும் உள்ளன.

இந்த வகையில் பாகிஸ்தான் அணுவாயுதங்கள் சிலவற்றை ஏற்கனவே கொண்டுள்ளது எனவும் கருதப்படுகின்றது. இதனைப் பாகிஸ்தான் வலுவாக மறுத்ததும்கூடக் கிடையாது. இதேசமயம் இந்தியா தனது தேவைக்கேற்ப உடனடியாகவே அணுவாயுதத்தைத் தயாரித்துவிடும் ஆற்றல் கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இவ் ஏவுகணைப்போட்டி அணுவாயுத உற்பத்தி வரையும் கொண்டு சென்று விடினும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், ஏவுகணைகளுக்கு அடுத்தபடியாக அணு ஆயுதமே இவ்விரு நாடுகளும் நாடக்கூடிய அதி நெருக்கத்தில் உள்ள, அதேசமயம் தமது சக்தியை வெளிக்காட்டவும் கூடிய ஓர் ஆயுதமாக உள்ளது.

இதேவேளை, இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இவ் ஆயுதப் போட்டியானது, இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால பகையுணர்வு அடிப்படையிலானது எனக்கூறக்கூடியது. ஆயினும் தென்ஆசிய நாடுகளுக்கு இடையிலும் அதன் அண்டைய பிராந்தியங்களில் உள்ள நாடுகளுக்கும் இடாயிலான ஒரு பனிப்போரின் விளைவு என்றுகூட இதனைக்கூறலாம்.

**பாகிஸ்தான் இந்தியாவுடன் ஆயுதப் போட்டியில் ஈடுபடவும்– இப்பிராந்தியத்தில் தனது தலைமையில் இந்தியாவிற்கு எதிரான ஓர் பனிப்போரை நடத்தவும் அமெரிக்கா அதற்கு நீண்டகாலமாக நட்பு சக்தியாக இருந்து வருவதும் ஒரு காரணமாகும்.**

குறிப்பாக தென்னாசியப் பிராந்தியத்தின் பிரதான நாடான இந்தியாவிற்கு எதிரான சீனாவின் அணுகுமுறைகள் இப் பிராந்தியத்தின் பனிப்போர் நிலைக்கு இன்று அடிப்படையானதாகவுள்ளதெனலாம். அதாவது இந்தியாவுடன் ஏற்கனவே ஒரு தடவை போரிட்டு சீனா ஆசியாவில் தனக்கு சவாலான நாடுகளில் ஒன்றாக இந்தியாவை நீண்டகாலமாகவே கருதுகின்றது.

இதன் காரணமாக தென்னாசியாவில் இந்தியாவின் பிரதான விரோத நாடான பாகிஸ்தானுடனான உறவை அது என்றும் பலமானதாகவே வைத்துக் கொண்டுள்ளது. இவ் உறவானது ஒரு பனிப்போருக்கான முழு அம்சம் கொண்டதாகவே உள்ளது. அதாவது, இரகசிய இராணுவத் தளபாட உதவிகளில் இருந்து சகல உதவிகளும் இதன் மூலம் கிடைக்கப்பெறுகின்றது.

இதனை இன்று பாகிஸ்தானும் சீனாவும் மறுக்கலாம். ஆனால், பாகிஸ்தானுக்கு ஏ.எம் 11 ரக நடுத்தர மிக்க ஏவுகணைகளை வழங்கியுள்ளமையும் பாகிஸ்தானுக்கு அணுஆயுத தொழில் நுட்பத்தை சீனாவே கொடுத்து உதவியுள்ளது என்பதையும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகமுமே ஏற்றுக்கொண்டுள்ளன என்று கூறலாம்.

இதேசமயம், பாகிஸ்தான் இந்தியாவுடன் ஆயுதப் போராட்டியில் ஈடுபடவும்– இப்பிராந்தியத்தில் தனது தலைமையில் இந்தியாவிற்கு எதிரான ஓர் பனிப்போரை நடத்தவும் அமெரிக்கா அதற்கு நீண்ட காலமாக நட்பு சக்தியாக இருந்து வருவதும் ஒரு காரணமாகும்.

இதேசமயம், இப்பிராந்தியத்தின் பனிப்போரில் அமெரிக்காவின் பங்கும் இல்லாமல் இல்லை. சோவியத் ஜூனியனின் வீழ்ச்சியின் பின்னும் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணவில்லை. அத்தோடு, இந்தியாவின் ஏவுகணை, அணு ஆயுதக் கொள்கைகள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி குறித்த திட்டங்கள் என்பன அமெரிக்காவிற்கு உடன்பாடானவையாக இருக்கவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கான அமெரிக்காவின் மறைமுக ஆதரவும் இப்பிராந்திய ஆயுதப் போட்டியையும் பனிப்போரையும் தூண்டுபவையாகவே இருந்தன.

இந்த வகையில் இன்று பாகிஸ்தானின் ஏவுகணைத் தாயாரிப்பு என்பது இப்பிராந்தியத்தின் ஆயுதப் போட்டியை மட்டுமல்ல, இப்பிராந்தியத்தில் நிலவும் பனிப்போரையும் வெளிக்காட்டும் ஓர் அம்சம் என்றே கொள்ளலாம். இந்த நிலையானது தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் உலகில் எதிர்பார்க்கப்பட்டது போன்று ஆயுதப் போராட்டத்தையும் பனிப்போரையும் முற்றாகவும் முடிவிற்கு கொண்டுவரவில்லை என்பதையே நிரூபிப்பதாகவுள்ளன.

**ரமணன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 54-வது ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் திம்புக் கொள்கை வலியுறுத்தப்பட்டுள்ளது

**ஐ.நா.வின் 54—வது மனிதர் உரிமை ஆணைக்குழு மார்ச் மாதம் 16—ம் திகதி ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மண்டபத்தில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் திரு. கொபி அண்ணான், ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய ஆணையாளர் திருமதி மேரி றொபின்சன் முன்னணியில் கூடியது. இதன் ஆரம்பத்தில் திரு. கொபி அண்ணான், திருமதி மேரி றொபின்சன் ஆகியோரின் சிற்றுரைகளைத் தொடர்ந்து இக் கூட்டத் தொடருக்கான தலைவராக ஜெனிவாவில் தென் ஆபிரிக்காவின் தூதுவராகக் கடமைபுரியும் திரு. ஜெக்கப் சாலிப் தெரிவு செய்யப்பட்டார்.**

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு ஐம்பது நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அமைப்பு. இது வருடத்தில் ஓர் தடவை கூடி உலக நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைப் பரிசீலனை செய்யும். கடும் கண்டனத்துக்கு உள்ளாகும் நாடுகள் மீது ஐ.நா. தனது பல்வேறு விதப்பட்ட அழுத்தங்களைப் பிரயோகிக்கும். சென்ற காலங்களில் இப்படியான அழுத்தங்களுக்கு ஆளாக்கப்பட்ட நாடுகள் பல.

இம்முறை நடைபெற்ற இக்கூட்டத் தொடரில் பல நாடுகளின் பிரதமர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், செயலாளர்கள் போன்ற பல முக்கிய புள்ளிகள் உரையாற்றினார்கள். இதில் பிரான்ஸ் நாட்டின் பிரதமர் திரு. லயணல் ஜொஸ்பனின் பேச்சு, நோர்வே நாட்டு மனித உரிமைகளுக்கான அமைச்சரின் பேச்சு, மெக்சிக்கோ நாட்டு வெளிநாட்டு அமைச்சரின் பேச்சுக்கள் எம்மைப் போன்ற நசுக்கப்படும் இன மக்களுக்கு பெரும் ஆறுதல் கூறும் பேச்சுக்களாக அமைந்தன.

சிறீலங்கா அரசு, தமிழ் மக்கள் மீதான தமது கேவலமான மனித உரிமை மீறல்களை இக்கூட்டத் தொடரில் பெரும் கண்டனத்துக்கு ஆகாமல் பார்த்துக் கொள்வதற்கு கொழும்பிலுள்ள வெளிநாட்டு அமைச்சில் இருந்து ஓர் விஷேட குழு ஒன்றை இங்கு அனுப்பியிருந்தது.

தமிழர் மனித உரிமைகள் மையம் (TCHR), இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீதான சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை ஓர் அறிக்கையாகத் தொகுத்து அதற்கான அத்தாட்சிப் பத்திரங்களுடன் இக்கூட்டத் தொடரில் பங்கு கொள்ளும் சகல பிரதிநிகளுக்கும், மற்றும் முக்கிய புள்ளிகளுக்கும் விநியோகித்து இருந்தது. இதில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீதான கொலை, பாலியல் வல்லுறவு, காணாமல் போதல், கைது, சித்திரவதை போன்றவற்றை வரிசைப்படுத்தி இருந்ததுடன் வன்னி மக்களின் கஷ்டங்களை விபரமாகக் கொண்டிருந்தது. இவற்றை விபரமாக இக்கூட்டத்தொடரில் எடுத்துக் கூறத் தமிழ்ப் பிரதிநிதிகளும் அத்துடன் தமிழ் மக்களின் மனித உரிமைகளில் அக்கறை கொண்ட வெளிநாட்டு பிரதிநிதிகளும் இங்கு வருகை தந்திருந்தார்கள்.

> **ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் தற்போதைய செயற்பாடுகள், கூடிய விரைவில் சிறீலங்கா மீது ஓர் கண்டனம் வர காத்திருக்கிறது என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.**

இதேவேளை, சர்வதேச மன்னிப்புச் சபை (AMNESTY INTERNATIONAL) சிறீலங்காவின் மனிதஉரிமை மீறல்களில் அக்கறை கொள்ளுமாறு ஓர் வேண்டுகோளை இக்கூட்டத் தொடரின் தலைவரை வேண்டியிருந்தது. அத்துடன் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சிறீலங்காவுக்கு விஜயம் செய்த ஐ.நா. வின் பிரதிநிதி திரு. என்டயா வால்ட்டியின் அறிக்கை சிறீலங்கா அரசை மிகவும் கண்டிக்கும் வகையில் வெளியாகியிருந்தது.

இவர் தொடர்ந்து மனித உரிமை மீறல்களைச் செய்து வருவதாகவும், வடக்கு கிழக்கில் குடிகொண்டுள்ள சிறீலங்காவின் பாதுகாப்புப் படைகள் 99 வீதமான சிங்களவரையே கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

அத்துடன் இம்முறை வழமையைவிட அதிக எண்ணிக்கையில் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் தமது பேச்சுக்களில் சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களைக் கடுமையாகக் கண்டித்ததுடன், சர்வதேச சமுதாயம் சிறீலங்கா அரசைக் கண்டிக்க வேண்டும் என்றும்; 54—வது கூட்டத் தொடர் இலங்கைத் தீவில் நடக்கும் இனப்படுகொலைக்கு பரிகாரம் காணவேண்டும் என்றும் இக் கூட்டத்தொடரை வேண்டியது. இதில் சர்வதேச கல்வி நிறுவனம், வடக்குத் தெற்கு – XXI விடுதலை, மக்களின்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமையும் விடுதலையும், ஆசிய கலாச்சார அமைப்பும் முன்னேற்றமும், சர்வதேச பெண்கள் சமாதானமும் விடுதலையும் போன்ற பல அமைப்புக்கள் சிறீலங்கா அரசைக் கண்டித்திருந்தன.

இக்கூட்டத்தொடர் நடைபெறும் அதேவேளை, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான ஓர் ஒன்றுகூடலை இவ் ஐ.நா. மண்டபத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒழுங்கு செய்திருந்தார்கள். இவ் ஒன்றுகூடலை மிகவும் அனுபவம் வாய்ந்த அரசசார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த திரு.சாள்ஸ் கிறோவ் என்பவர் தலைமை தாங்கினார். இவ் ஒன்று கூடலில் கலாநிதி சதானந்தன் (செயலாளர் AGOTIE), திரு.ச.வி. கிருபாகரன் (பொதுச் செயலாளர் TCHR), செல்வி டியற்றி மக்கோனல் (TCHR லண்டன்), திரு.ஜேம்ஸ்கரன் (தலைவர் IFT) ஆகியோர் உரையாற்றினார்கள். தற்போதைய வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சகல கஷ்டங்கள், இன்னல்களையும் தமிழ்ப் பிரதிநிதிகள் தகுந்த முறையில் விளக்கியிருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஐம்பது நான்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஓர் கூட்டறிக்கையை இவ் ஆணைக் குழுவிடம் கையளித்திருந்தது. இவ் அறிக்கை வடக்கு கிழக்கிலிருந்து உடனடியாக சிறீலங்கா இராணுவம் வாபஸ் பெற வேண்டும் என்றும்; சிறீலங்கா அரசும்– விடுதலைப் புலிகளும் ஓர் நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்தும் வகையில் சகல முயற்சிகளில் இறங்க வேண்டும் என்றும்; அத்துடன் சிறீலங்காவில் சமாதானத்துக்கான முயற்சிகளை கண்காணிக்க ஓர் விஷேட ஐ.நா. பிரதிநிதியை நியமிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் எந்தவித அரசியல் தீர்வும் இலங்கைத்தீவில் ஏற்படுவதானால் அவை திம்பு கொள்கையான நான்கு அம்சங்களையும் அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்று கடந்த மாவீரர் தினத்தில் கூறியதை இவ் அறிக்கையில் மேற்கோள் காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றை கண்டு சகிக்கமுடியாத சிறீலங்கா வெளிநாட்டு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் திடீரென ஓர் ஜெனிவா விஜயத்தை மேற்கொண்டு அங்கு சகல மேல்மட்ட பிரதிநிதிகளையும் இரகசியமாகச் சந்தித்தார்.

**கூடிய விரைவில் சர்வதேச சமுதாயம், ஐ.நா.சபை மற்றும் உலக ஸ்தாபனங்கள் இலங்கைத் தீவில் தமது கவனத்தைச் செலுத்தும் காலம் கனிந்து வருகிறது என்பது உறுதி.**

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் தற்போதைய செயற்பாடுகள், கூடிய விரைவில் சிறிலங்கா மீது ஓர் கண்டனம் வர காத்து இருக்கிறது என்பதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.

எமக்கு, தமிழருக்கு தமிழரின் பிரச்சினை மிக முக்கியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. முன்பு இரத்தகளரியையோ, வன்முறைகளையோ காணாத தமிழருக்கு தற்போது சிறீலங்கா அரசின் வன்முறைகளைப் பார்த்து சகிக்கமுடியாமல் உள்ளோம். ஆனால், மேற்கு நாடுகள், ஐ.நா. சபையைப் பொறுத்தவரை ஜேர்மனியில் கிட்லரின் கொலைகளையும், ருவன்டா, புறூண்டி போன்ற நாடுகளின் படுகொலைகளை இலட்சக்கணக்கில் கண்ட காரணத்தினாலோ என்னவோ சிறீலங்கா மீது ஐ.நா. வின் நடவடிக்கை தாமதம் ஆகிவருகிறது. ஆனால், கூடிய விரைவில் சர்வதேச சமுதாயம், ஐ.நா.சபை மற்றும் உலக ஸ்தாபனங்கள் இலங்கைத் தீவில் தமது கவனத்தைச் செலுத்தும் காலம் கனிந்து வருகிறது என்பது உறுதி.இவ் 54–வது கூட்டத்தொடரில், கலாநிதி சாதானந்தன், திரு அன்ரன் பொன்ராசா, திரு ச.வி. கிருபாகரன்,செல்வி மான், திரு.த. கெங்காதரன், திரு ஜேம்ஸ் கரன், செல்வி டியற்றி மக்கோனல், போன்றோர் தமிழ் மக்களின் நிலைமைகளை எடுத்துரைத்தனர்

**கிருபா**

## மினித் தேர்வு

யாழ் குடாநாட்டில் மினித் தேர்விற்கான வாக்காளர் அட்டைகள் குறித்து யாழ்ப்பாணத்திலிருக்கும் பத்திரிகையாளர் ஒருவரிடம் பி.பி.சி நிருபர் ஒருவர் கேட்டார் ஆட்களை விடவும் வாக்காளர் அட்டைகள் கூடுதலாக உள்ளன போலத் தோன்றுகிறதே என்று. அந்தப் பத்திரிகையாளர் சொன்னார். அப்படித்தான் யாழ் மாநாகர சபை நல்லூர் பிரதேச சபை இரண்டிற்கும் 92 888 வாக்காளர் அட்டைகள் உள்ளன. 24–ம் திகதி வரை 32830 வாக்காளர் அட்டைகள் மட்டுமே அதாவது 1/3 பங்கு மட்டும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அப்படியாயின் மிகுதி 2/3 பங்கு வாக்காளர் அட்டைகளும் எங்கே போடும்? இதென்ன ஐயா கேள்வி? 1994–ல் தீவகத்தில் நடந்த பொதுத் தேர்தலில் எங்கு போயினவோ அங்குதான். இது கூடத் தெரியாமல் என்கிறாராம் ஒரு வேட்பாளர். போலி வேட்பாளர்களே போட்டியிடும் போது போலி வாக்காளர்கள் வாக்களித்தால் என்ன குறைந்தா போய்விடும்?

## சம்பள வர்க்கம்

முதல் தேதிச்
சக்கர வர்த்திகள்

மாத நடுவில்
மன நோயாளிகள்

கடைசி வாரத்
தத்துவ ஞானிகள்

–சிற்பி–



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கள் குடியிருப்புக்கள் மீது சந்திரிகாவுக்கு ஒரு மாளிகை !



சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் பொதுச் சொத்துக்களை விற்று தவிர்க்கமுடியாத நிதித் தேவைகளை ஓரளவு நிவர்த்திக்க வேண்டிய கட்டாய சூழலில் இருக்கின்றது. அரசாங்கம் செய்யும் நிதி தொடர்பான சிபாரிசுகளை ஏற்க முடியாத நிலையில் திறைசேரி இருக்கின்றது. அரசாங்கத்தின் பல தரப்பட்ட தொழிலாளர்களினதும் மேலதிக கொடுப்பனவைச் செலுத்தி தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியாதளவிற்கு நாட்டின் நிதி நிலமை மோசமான நிலையிலுள்ளது.

யுத்தமும் அரசாங்கம் திட்டமிட்ட காலவரையறையை விஞ்சிச் சென்று கொண்டிருக்கிறது. இதனால் அரசாங்கத்தினால் யுத்தத்திற்கென ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பற்றாக்குறையாகவுள்ளது. அதாவது ஒருபுறம் யுத்தம் இடையில் நிற்கிறது. மறுபுறம் தொழிலாளர்களை மேலதிக கொடுப்பனவுகள் மூலம் திருப்திப் படுத்த முடியாமல் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்ற.

இந்த நிலையில்தான் ஜனாதிபதி சந்திரிகா முன்னைய ஜனாதிபதி மாளிகையில் தான் குடியிருப்பதில்லை என்ற மன வைராக்கியத்தை திருப்தி செய்யவென பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி பொதுமக்களின் காணிகளில் பெரும் செலவுடன் பொது நிதியைப் பயன்படுத்தி புதிதாக ஜனாதிபதி மாளிகை ஒன்றைக் கட்ட முயற்சிகள் மேற்கொள்கின்றார். நூறு ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்தது 1500 மில்லியன் ரூபா பெறுமதியான இத்திட்டத்தை செய்துமுடிக்கும் பொறுப்பு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஜனாதிபதியின் வாசஸ்தலமும் ஜனாதிபதியின் செயலாளருக்கான கட்டிடம் ஒவ்வொன்றும் ஐந்து ஏக்கர்களில் கட்டப்படவும், இரண்டு பாதுகாப்பு நிலைகள் ஒவ்வொன்றும் மூன்று ஏக்கர் நிலப்பரப்பிலும் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்படுத்தி நேரடியாகக் கவனிக்க பெர்னாண்டோ எனும் உயரதிகாரி ஒருவரையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

தற்போதைய முடிவின்படி மெடிவெல பகுதியில் திட்டம் செயற்படுத்தப்படுமானால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களில் 700 குடும்பங்கள் பாதிப்படையும். இதில் 100 குடும்பங்கள் நேரடிப்பாதிப்பிற்குள்ளாவர். பொதுமக்களின் காணிகளும் அரசினால் சுவீகரிக்கப்பட வேண்டிவரும்.

இதுமட்டுமல்ல ஜப்பான் நிறுவனத்தினால் நட்புறவுத் திட்டத்தின் அடிப்படையில் போடப்படவுள்ள வீதியை இந்த ஜனாதிபதி மாளிகைக்கு அருகாக திசைதிருப்பி விடவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அத்தோடு அரசாங்கத்தின் இத்திட்டத்தினால் தியவன ஓயாவைச் சுற்றியுள்ள நீர்த்தேக்கத் திட்டங்கள் பாதிப்படையும். அத்தோடு அப்பகுதியிலுள்ள பறவைகள் சரணாலயமும் இதனால் பாதிப்புறும் எனவும் சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மெடிவெலவிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியும் மாற்றவேண்டியுள்ளது. இது பற்றி ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கையில் “விடுதியை இடம்மாற்றுமாறு கூறியுள்ளனர். ஆனால் அதற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை” என்றார்.

இருப்பினும், மெடிவெலவில் ஜனாதிபதியின் இந்த வாசஸ்தலம் கட்டும திட்டத்திற்கு மெடிவெல வாசிகள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கத் தொடங்கிவிட்டனர். மெடிவெல கிராமத்தைக் காப்பாற்றும் குழு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளனர். இதன்மூலம் தமது காணி, வீடுகளைவிட்டு தாம் வெளியேறாது நீதிமன்றத்தின் மூலம் போராடப் போவதாகவும் கூறியுள்ளனர். மெடிவெல குடியிருப்பாளர்களில் ஒருவரான பெண்மணி டபிள்யூ.டி. சோமாவதி தெரிவிக்கையில், முதலில் சுதந்திரம்தான் முக்கியம். ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்

**கெல்மன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டால் அதைச் சுற்றி பாதுகாப்பு வலயம் போடப்படும். நாம் சுதந்திர மாக நடமாட அனுமதி கிடைக் காது. அதிகாரிகளின் வசதிக்காக நாம் துன்புறுத்தப்படுவோம் என்றார்.

லால் ரணசிங்க என்னும் மற்றொரு குடியிருப்பாளர் கருத்துக் கூறுகையில் எனக்கு நஷ்ட ஈடு தந்தாலும் நான் எனது வீட்டை விட்டுச் செல்லமாட்டேன். கடந்த ஐ.தே.க அரசாங்கம் எனது வயல் காணியையும் மற்றும் நிலத்துண்டையும் சுவீகரித்துவிட்டு ஒரு பேச்சிற்கு 233 ரூபா வீதம் பணம் தந்து ஏமாற்றியது. இப்போது இந்த அரசாங்கமும் எமது காணிகளை சுவீகரிக்க முயற்சிக்கிறது என்றார்.

சந்திரிகா அம்மையாரின் மாளிகை கட்டும் திட்டம் வெற்றியடையுமோ? அல்லது தோல்வியடையுமோ? என்பதைவிட அவர் மக்கள் முன்னிலையில் முன்னுக்குப் பின் முரணாக பேசி வருபவர் என்பதை இந்த மாளிகை கட்டும் திட்டம் தெளிவுபடுத்தியுள்ளது. ஏனெனில் ஆட்சிப் பொறுப்பை ஏற்க முன் கூறிவந்த பேச்சுக்களின்படி ஐ.தே.க மக்களின் சொத்தை வீண் விரயம் செய்ததாகவும் ஆட்சியாளர்கள் ஆடம்பர வாழ்வு வாழ்ந்ததாகவும் தாம் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு நன்மை பயக்கும் பல திட்டங்களை செயற்படுத்தவுள்ளதாகவும், தமது ஆட்சி ஜனநாயக பண்புகளின் அடிப்படையிலான மக்களாட்சியாக இருக்கும் என்றும் கூறியிருந்தார்.

இப்பொழுது பொதுமக்களின் காணிகளை சுவீகரித்து ஜனாதிபதி மாளிகை கட்டும் திட்டம் எந்த ஜனநாயகப் பண்பின் அடிப்படையில் போடப்பட்டது என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகிறது. ஆனால் வட– கிழக்கில் தமிழர்களை அவர்களது குடியிருப்புக்களிலிருந்து படைப் பலம் கொண்டு துரத்தி அடித்துவிட்டு அது தமிழர்களின் நல்வாழ்வுக்காக செய்யப்படுவதாக கூறிவரும் சந்திரிகா அரசு தென் பகுதியிலும் குடியிருப்பாளரை அவர்களது வீடுகளிலிருந்து துரத்திவிட்டு அதிலே தனக்கான மாளிகையைக் கட்ட விளைவது பெரும்பாலும் ஓர் முரணான செயலல்ல. ★★★

1970–களிலிருந்து எழுதி வரும் தாமரைச் செல்வி, கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் கிராமத்தவர். இவர் நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இதுவரையில் 'சுமைகள்' 'விண்ணில் அல்ல விடிவெள்ளி' 'தாகம்' என மூன்று நாவல்களும் 'வேள்வித்தீ' என்ற குறுநாவலும் வெளிவந்திருக்கின்றன. 'ஒரு மழைக் கால இரவு' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவரவுள்ளது. வன்னிப் பிரதேசத்தின் பெண்பசைப் பாளியாகவுள்ள இவர் ஓவியங்கள் வரைவதிலும் ஈடுபாடுள்ளவர். அத்துடன் வானொலி நாடகங்களையும் எழுதி வருகிறார்.



தான் வாழும் மண்ணையும் காலத்தையும் வெளிப்படுத்துவதிலும் சிங்களப் பேரினவாதத்தால் தமிழ் மக்கள் படும் இன்னல்களைச் சொல்வதிலும் இவர் தன் படைப்பினூடு செயற்படுகிறார். இந்த வகையிலேயே சிங்களப் படைகள் தன் கிராமத்தை அழித்து ஆக்கிரமித்துள்ள கொடிய வரலாற்றை தன் கதைகளினூடு பதிந்து கொள்கிறார்.

இவருடனான இந்தச் சந்திப்பில் கருணாகரனுடன் இளந்திரையன், ப.தயாளன் ஆகியோரும் பங்கேற்றனர்.

**நீங்கள் எழுதத் தொடங்கிய காலம், சூழல் பற்றிச் சொல்லுங்கள்?**

1973–ம் ஆண்டின் ஆரம்பத்தில் நான் வானொலி நிகழ்ச்சிகளுக்குத் தான் முதலில் எழுத ஆரம்பித்தேன். அதற்கு முன்னர் பாடசாலையில் படித்த போது சிறு நாடகங்கள் எழுதியிருக்கிறேன். ஆனால் ஊடகங்களின் மூலம் என் எழுத்துக்கள் வெளிவந்தது. 73–ல் தான். 1974–ம் வருடம் வீரகேசரியில் வெளிவந்த "ஒரு கோபுரம் சரிகிறது" என்ற சிறுகதையுடன் எனது பத்திரிகைப் பிரவேசம் ஆரம்பமானது, எனது குடும்பத்திலோ உறவினர்களிலோ இலக்கியத் துறையில் பரிச்சயமுள்ள எவருமே இருந்ததில்லை இப்போது நினைத்துப் பார்க்கும் போது எழுத வேண்டும் என்ற ஆர்வம் எப்படி என் மனதில் ஏற்பட்டது என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் சின்னவயதிலிருந்து புத்தகங்கள் வாசிக்கின்ற பழக்கம் இருந்ததாலும், என்னைச் சுற்றியுள்ள மக்களின் பிரச்சினைகளைக் காணக்கூடியதாய் இருந்ததாலும் எழுதுகின்ற வேகம் வந்திருக்கலாம் என்றே நினைக்கிறேன்.

அந்த ஆரம்ப நாட்களில் எந்த எழுத்தாளரின் அறிமுகமும் எனக்கு ஏற்பட்டதில்லை. எனது சுயமுயற்சியில் எழுதப்பட்ட சிறுகதை வீரகேசரிக்கு அனுப்பப்பட்டு அது நிராகரிக்கப்பட்டது. தொடர்ந்து எழுதிய சிறுகதையே 74–ல் வீரகேசரியில் பிரசுரமானது. இது எனக்கு உற்சாகத்தைத் தர தொடர்ந்து எழுதத் தொடங்கினேன்.

**உங்கள் குடும்ப சூழலில் இலக்கிய முயற்சிகள் எவ்வாறு உள்வாங்கப் பட்டன?**

எனது குடும்பம் ஒரு விவசாயக் குடும்பம். தந்தையார் பாரிய அளவில் விவசாயத்தில் ஈடுபடுவர், என்னுடைய ஒன்பது வயதிலேயே பரந்தன் பாடசாலையில் தமிழ் ஆசிரியராக இருந்த திரு. வை. நடராசா என்பவர் எனக்கு வாசிக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்தியவர். அப்போதே சகுந்தலை சரிதை, மகாபாரதம், இராமயணம் எல்லாம் அவர் தந்து படித்திருக்கிறேன். அடுத்தபடி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி விடுதியில் தங்கிப் படித்த போது அங்கேயுள்ள நூலகம் எனது வாசிக்கும் பழக்கத்தை அதிக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரிக்க உதவியது. இவைகளைப் படிக்கும் போது எழுதவேண்டும் என்ற ஆர்வம் என்னையறியாமலே என்னுள் வளர்ந்தது. எனது குடும்பத்தினர் இலக்கியத்தில் எந்த விதமான பரிச்சயமோ தொடர்போ இல்லாமல் இருந்தாலும் எனது இலக்கிய முயற்சிகளுக்கு எந்தத் தடையும் சொல்லவில்லை. பழமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் ஒரு குடும்பத்தில் இருந்ததால் உலகத்தை வீட்டு ஜன்னல் வழியாகவே பார்க்கின்ற நிலமையே எனக்கு இருந்தது. வானொலியும், பத்திரிகைகளும், புத்தகங்களுமே எனக்கு

# நேர்காணல்

## தாமரைச் செல்வி (ரதிதேவி கந்தசாமி)

வெளிஉலகத்தை அறிமுகம் செய்தன. எனது எழுத்துக்களை முதலில் படிப்பவர்கள் என் பெற்றோரும் சகோதரர்களுமே. உயர்தரமான இலக்கிய விமர்சனங்களை அவர்கள் தராவிட்டாலும் என்னை ஊக்கப்படுத்தியே வந்தனர்.

74–ம் ஆண்டின் கடைசிப்பகுதியில் வீரகேசரிப் பிரசுரங்களினால் கவரப்பட்டு ஒரு நாவல் எழுதி அனுப்பியிருந்தேன். அந்தச் சமயத்தில் அந்த சிறுகதையும், பத்திரிகைகளில் வெளிவந்திருக்கவில்லை. வீரகேசரி பிரசுர வெளியீட்டுப் பொறுப்பாளர் திரு. எஸ். பாலச்சந்திரன் எனது 'தீக்குளிப்பு' என்ற நாவலைப் பார்த்துவிட்டு அது பற்றிப் பேச என்னை கொழும்பு வந்து வீரகேசரி காரியாலயத்தில் சந்திக்கும்படி கடிதம் போட்டிருந்தார். அப்போதைய எமது வீட்டுச் சூழலில் கொழும்பு செல்வது என்பது மிகப்பெரிய விஷயமாக இருந்தது. அப்படி இருந்தும் என்னை என் தந்தை கூட்டிப்போனார். அன்று திரு. பாலச்சந்திரன் கதைகள் எழுதுவது பற்றி எவ்வளவோ ஆலோசனைகள் சொன்னார். பிரசுரத்திற்கு அனுப்பப்படும் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்படவேண்டும் என்ற விஷயமே அன்றுதான் எனக்குத் தெரிய வந்தது. கதை எழுதும் போது கவனிக்க வேண்டியவை பற்றி அவர் தந்த ஆலோசனைகள் தொடர்ந்த காலத்தில் என் எழுத்தை வளமாக்க உதவியிருப்பதை நான் நன்றியோடு நினைத்துக் கொள்வதுண்டு. அன்று அந்த நாவல் பிரசுரத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்றாலும் தமது 55–வது பிரசுரமாக எனது 'சுமைகள்' நாவலை 78–ல் வெளியிட்டிருந்தார்கள்.

**தான் வாழும் மண்ணையும் காலத்தையும் வெளிப்படுத்துவதிலும் சிங்களப் பேரினவாதத்தால் தமிழ் மக்கள் படும் இன்னல்களைச் சொல்வதிலும் இவர் தன்படைப்பிறுடு செயற்படுகிறார். இந்த வகையிலேயே சிங்களப் படைகள் தன் கிராமத்தை அழித்து ஆக்கிரமித்துள்ள கொடிய வரலாற்றை தன் கதைகளினூடு பதிந்துகொள்கிறார்.**

இன்றைக்கு இவ்வளவு தூரம் எழுத்துத் துறையில் அழுத்தமாய் ஊன்றி நிற்பதற்கு காரணமாய் 75–ம் ஆண்டில் எனது திருமணம் அமைந்தது. என் கணவரும் ஒரு இலக்கிய ஆர்வலராக இருப்பதனால் அவருடைய ஆதரவு முழுமையாக எனக்கு கிடைத்தது. கிராம வாழ்விலிருந்து வெளியே வந்து கொழும்பில் வாழ ஆரம்பித்தது எனக்கு பல இலக்கிய அனுபவங்களையும் அறிமுகத்தையும் தந்தது. நிறைய எழுத அவகாசமும் கிடைத்தது. மறுபடியும் கிராமத்துக்கே திரும்பியிருந்தாலும் இன்றுவரை எழுதவும் முடிகிறது.

**எழுபதுகளில் தேசிய இனப்பிரச்சினை கூர்மயடையத் தொடங்கியது. இலக்கியங்களிலும் அது பிரதிபலித்தது. உங்கள் கதைகளில் இந்தப் பிரக்ஞை தாமதமாகியே உணரப்பட்டுள்ளதே?**

நீங்கள் சொல்வதில் சிறிது உண்மை இருக்கலாம். ஆனால் நான் எழுதவில்லை என்றும் சொல்ல முடியாது. நீர்கொழும்புப் பகுதியில் முன்பு தமிழராய் வாழ்ந்தவர்கள் பின்பு சூழ்நிலை காரணமாக சிங்களவராய் மாறிப்போன கருவை வைத்து 'ஒரு தலைமுறை மாறுகிறது' என்று 'சுடர்' சஞ்சிகையில் ஒரு சிறுகதை எழுதியிருந்தேன். இந்தச் சிறுகதை அப்போது 'ஒரு புதிய பார்வை' என்று விமர்சிக்கப்பட்டது. வேறும் சில சிறு கதைகள் எழுதியிருக்கக்கூடும். சமூகப் பிரச்சினைகளை மிஞ்சி தேசிய இனப்பிரச்சினை முனைப்படைந்த 80–களின் போது நான் இவை பற்றிய சிறு கதைகளை நிறைய எழுதியிருக்கிறேன்.

**உங்கள் சமகாலப் பெண் எழுத்தாளர்கள் உங்களுடன் இணைந்து அமைப்பு ரீதியாகச் செயற்பட்டதுண்டா?**

இல்லை, ஆனால் அந்த நாட்களில் எழுதிய பல பெண் எழுத்தாளர்கள் எனது நண்பிகளாகவே இருந்திருக்கிறார்கள். ஏழாலை தமிழ்ப்பிரியா, கொழும்பு அருண் விஜயராணி, மண்டூர் அசோகா, கரம்பன் சாரதா சண்முகநாதன், சிவமலர் செல்லத்துரை...... இவர்கள் அனைவரும் ஆரம்பத்தில் கடிதம் மூலமே அறிமுகமானவர்கள். நாங்கள் அமைப்பு ரீதியாக செயல்படாவிட்டாலும் கடிதம் மூலமாக இலக்கியக் கருத்துக்களை பரிமாறிக் கொண்டிருந்தோம். அருண் விஜயராணி, நான், மண்டூர் அசோகா,



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனோ விஜேந்திரா நால்வரும் வாரம் ஒரு அத்தியாயமாக 'நாளைய சூரியன்' என்ற நாலுவாரத் தொடர் கதையை வீரகேசரியில் எழுதியிருந்தோம். இது தவிர வேறு இலக்கிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

**நீங்கள் குறிப்பிடும் பெண் எழுத்தாளர்கள் எல்லோரும் இணைந்து அமைப்பு ரீதியாக செயற்படவேண்டுமென்ற உணர்வு, அவசியம் ஏற்படவில்லையா?**

நாங்கள் கொழும்பிலிருந்து 77–ம் ஆண்டு இனக்கலவரத்துடன் எங்கள் கிராமத்திற்கே திரும்பக் குடிவந்தோம். அந்த கிராமத்து சூழ்நிலையில் எந்த அமைப்பு ரீதியான செயற்பாடுகளும் செய்ய முடியவில்லை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சில பெண்களின் அமைப்புக்கள் செயல்பட்டதாக பின் நாளில் அறிந்திருக்கிறேன். ஆனால் அந்த அமைப்புக்களுடன் எனக்கு எந்தத் தொடர்பும் ஏற்படவில்லை. பின் நாட்களில் எனது சிநேகிதிகள் வெளிநாடு சென்றும், எழுத்துலகிலிருந்து ஒதுங்கியும் போனதால் அமைப்பு ரீதியாக செயல்படும் நிலை தோன்றாமலே போய்விட்டது.

**எண்பதுகளிலிருந்து பெரும்பாலான கதைகளில் தேசிய இனப்பிரச்சினையையே முதன்மையாக வெளிப்படுத்தி வருகிறீர்கள். இந்த மாற்றம் எப்படி ஏற்படத் தொடங்கியது?**

இது ஒரு முக்கியமான கேள்வி. இதற்கு, சுருக்கமாக சொல்வதானால் யுத்தம் எனது வீட்டு வாசல் வரை வந்துவிட்டது எனலாம். ஆனையிறவு முகாம் எமக்கு 4–மைல் தூரத்தில் அமைந்திருந்ததனால் ஒரு யுத்த நெருக்கடிக்குள்ளேயே நாம் வாழவேண்டியிருந்தது. எறிகணைவீச்சு, விமானத்தாக்குதல், இராணுவத்தினரின் நகர்வு என்ற பல நெருக்கடிகளை எதிர்நோக்கிய வாழ்க்கை 87–ல் இராணுவம் எமது வீட்டை முற்றாகத் தகர்த்தது. அதில் அதுவரை காலமும் நான் எழுதிய படைப்புக்களின் பிரதிகள், பரிசுச் சான்றிதழ்கள் அத்தனையும் அழிந்துவிட்டது. அதன் பின்னர் பெற்றோருடன் இருந்தோம். அதன் பிறகு பிரசுரமான கதைகளின் பிரதிகளும் 90 ஜூனில் எம் பெற்றோரின் வீடு எரியூட்டப்பட்டபோது எரிந்து அழிந்துவிட்டன. வீடு வாசல் சொத்து அத்தனையையும் இழந்ததைவிட எனது படைப்புக்களை இழந்ததையே அதிக துயரமாய் உணர்கிறேன். இன்றும் என் மனதில் ஆறாத காயமாகவே இது இருக்கிறது. அனுபவபூர்வமாக என் மனதில் ஏற்பட்ட பாதிப்புகள் மக்கள் வாழும் குடியிருப்புக்கு அருகிலேயே ஒரு இராணுவ முகாம் இருந்த காரணத்தால் கிராம மக்கள் தொடர்ச்சியாக பட்ட அவலங்கள்... என் படைப்புக்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கின. இது ஒரு எழுத்தாளரால் தவிர்க்க முடியாத ஒன்று என்றே சொல்வேன்.

**இன்றைய யுத்தகால வாழ்வில் பெண்கள் அனுபவிக்கும் பிரத்தியேக நெருக்கடிகளையும், பெறும் அனுபவங்களையும் உணரக்கூடிய அதிக சாத்தியங்களை ஒரு பெண்ணென்ற வகையில் நீங்கள் படைப்புகளூடாக முன்வைக்க முயலவில்லையா?**

யுத்தகால வாழ்வில் இந்த இடப்பெயர்வின் நெருக்கடிகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அளப்பெரியவை. அநியாயமாய் திணிக்கப்பட்ட இயல்புக்கு மாறான இந்த இடப்பெயர்வு வாழ்க்கையின் சுமைகளை அநேகமாய் ஒரு குடும்பத்தில் பெண்தான் தாங்கிக் கொள்கிறாள். உளவியல் ரீதியான அந்த பாதிப்புக்களை மன உணர்வுகளை முழுமையான விதத்தில் சமீப காலத்தில் எழுதவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். நமது சூழலில் சமயலறையிலிருந்து குடும்ப நிர்வாகம், வாழ்க்கையின் பல செயற்பாடுகள் வரை இந்த நெருக்கடி நேரத்தில் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் சிரமங்களையெல்லாம் எழுதவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. எழுதுவதற்கு கூட இந்த இடப்பெயர்வினால் நான் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதை இந்த நேரத்தில் சொல்ல வேண்டியிருக்கிறது.

**தனக்கொரு வீடு, கிணறு, வேலி என்று ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே பலதசாப்பதங்களாக வாழ்ந்து வந்த ஒரு இனம் அந்த வாழ்விலிருந்து வீசியெறியப்பட்ட மரத்தின் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது**

**நமது சிறுகதைகளில் பெரும்பாலானவை யதார்த்தக் கதைகளாகத் தோற்றம் காட்டுபவை. ஆனால் கதைகளின் முழுமையில் யதார்த்தத்தையும் மிகை புனைவையும் இணைத்தே உருவாக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. இது இது நமது சிறுகதைகளின் வளர்ச்சியை ஒரு வகையில் தடைப்படுவதுடன் கருத்தியல் மற்றும் யதார்த்தம் பற்றிய தவறான புரிதல்களையும் உருவாக்கிவிடுகின்றதல்லவா?**

ஆம், உண்மைதான். இவை இப்படித் தான் என்று உண்மையாகவும் இயல்பாகவும் அடையாளம் காட்டுவது தான் யதார்த்தம் என்பது. சமூகத்தின் தேவைக்கேற்ற விதத்தில் யதார்த்தத்தை உள்வாங்கி அதை ஒரு கலை வடிவமாக வடிப்பதுதான் இயல்பான படைப்பாக இருக்கும். இப்படைப்புக்களை எழுதுவதன் மூலம் எழுத்தாளனோ படிப்பதன் மூலம் வாசகனோ உண்மையைத் தரிசிக்க வாய்ப்புக் கிடைக்கிறது. மிகையான கற்பனையை எழுதுவதனாலும் வாசிப்பதனாலும் எஞ்சி நிற்பது வெறும் ஏமாற்றமே. அந்த கற்பனை மூலம் சில விஷயங்களை நாம் எழுதும்போது சில உண்மைகளை மறைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு விடுகிறது. இதனால் ஒரு படைப்பின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. இறுதியில் இலக்கியப் படைப்புக்கள் எல்லாம் வெறும் கற்பனைதானோ என்ற ஐயப்பாட்டை மக்கள் மத்தியில் தோற்றுவித்துவிடும். இது நமது வாழ்வியலையும் காலத்தையும் அடையாளம் காட்டும் சிறுகதை வளர்ச்சிக்கு தடையாகவே அமையும்.

**ஈழத்தில் கடந்த பத்து ஆண்டுகளில் நாவல்களின் வரவு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதன் காரணம் என்ன?**

சிறுகதைகளை குறுகிய காலத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் எழுதிவிட முடியும். நாவல் எழுதுவது என்பது அப்படி அல்ல. அதற்கு விரிவாகவும் தொடராகவும் சிந்திக்கவும் எழுதி முடிக்கவும் கால அவகாசம் நிறையத்தேவைப்படுகிறது. அப்படி எழுதி முடித்தாலும் அதற்கான பிரசுர களம் இங்கே மிகக் குறைவு. அதனால் நாவல் எழுதுவதற்கான ஊக்கம் குறைந்து விடுகிறது. நாவலை விலை குடுத்து வாங்கிப் படிக்கின்ற வாசகரின் எண்ணிக்கையும் அதிகரித்து வெளியீட்டாளர்களும் நாவல் வெளியிட முன் வந்தால் அதிகளவு நாவல்கள் வெளிவர சந்தர்ப்பம் கிடைக்கும்.

**இடப்பெயர்வு பற்றிக் கூறியுள்ளீர்கள். இடப்பெயர்வும் அது வழங்கும் புதிய வாழ்வும் சமூகப் பண்பாட்டுத் தளத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன?**

தனக்கொரு வீடு, கிணறு, வேலி என்று ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே பலதசாப்பதங்களாக வாழ்ந்து வந்த ஒரு இனம் அந்த வாழ்விலிருந்து வீசியெறியப்பட்ட மரத்தின் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த அவலம் நிறைந்த இடப்பெயர்வு வாழ்வை முற்றாக ஒரு வார்த்தையின் மூலம் வெளிப்படுத்துவது சாத்தியமற்றது. இது உடனிருந்து அனுபவித்து உணர்ந்துகொள்ள வேண்டிய ஒன்று, உயிர் வாழ்ந்தாலே போதும் என்ற நிலை இப்போது மக்களுக்கு ஏற்பட்டு விட்டது. மற்றைய விஷயங்கள் எல்லாமே இரண்டாம் பட்சமாகப் போய் விட்டன. குறிப்பாக இவ்வளவு நாளாய் கட்டிக் காத்து வந்த தனித்துவங்களை இழந்துவிட்டது இந்த இடப்பெயர்வு வாழ்வில் குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

**தேசிய அளவிலான இலக்கிய இயக்கங்களும் பிரதேச மட்டத்திலான இலக்கிய அமைப்புகளும் நீண்டகாலமாக செயற்பட்டு வந்துள்ளன. வன்னியின் கலை, இலக்கியச் செயற்பாட்டில் இவை எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தன; ஏற்படுத்தி வருகின்றன?**

வன்னியில் நான் வாழ்ந்த சூழலில் எந்த இலக்கிய அமைப்புக்களினதும் அறிமுகத்தையும் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. மற்றைய இடங்களுடன் ஒப்பிடும் போது வன்னியில் எழுத்துறையில் ஈடுபட்டவர்களும் குறைவாகவே இருந்தனர்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை, யாழ் இலக்கிய வட்டம் உட்பட பல இலக்கிய அமைப்புக்கள் யாழிலும் பிற இடத்திலும் இயங்கி வருவது பற்றி பத்திரிகைகள் மூலமாக அறிந்திருக்கிறேன். ஆனால் இந்த அமைப்புக்களுடன் எனக்கு எந்த விதமான தொடர்பும் இருக்கவில்லை. எனது இலக்கிய செயற்பாடுகள் என் சுய முயற்சியால் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. மேற்படி இந்த இலக்கிய அமைப்புக்கள் ஒரு போதுமே வன்னியில் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தியிருக்கவுமில்லை. இலங்கைத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் என்று யாழ் நகரில் ஒரு புதிய அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதாக அறிந்தேன். அதில் வன்னியைச் சேர்ந்த எவரும் சேர்த்துக்கொள்ளப்பட்டதாகவோ நான் அறியவில்லை. எந்த இலக்கிய அமைப்புக்களிலுமே வன்னி எழுத்தாளர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருந்திருக்கின்றனர். ஆக்கபூர்வமான செயற்பாடுகளை இந்த அமைப்புக்கள் வன்னியில் மேற்கொண்டிருந்தால் எத்தனையோ எழுத்தாளர்கள் உருவாகியிருக்கவும் இலக்கிய வளர்ச்சிக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

**80_களின் பின்னர் பல கவிஞர்களின் கவிதைகள் 10_க்கு மேற்பட்ட தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இவை, ஈழத்துக் கவிதை வளர்ச்சி பற்றிய மதிப்பீட்டுக்கும் ஈழத்துக் கவிதைகள் வெளியே பரவலாக அறியவும் உதவியிருக்கின்றன. ஆனால், சிறுகதைத் தொகுதிகள் இவ்வாறு வெளிவரவில்லையே?**

உண்மைதான், கவிதைத் தொகுப்புக்கள் வந்த அளவிற்கு சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவரவில்லைத்தான். ஈழத்துக் கவிதை, நாடகம் பேசப்படும் அளவுக்கு சிறுகதைகள் பேசப்படுவதில்லை. இதற்கு காரணம் நல்ல சிறுகதைகள் இங்கு எழுதப்படவில்லை என்பதே உண்மை. இங்குள்ள பல சிறுகதைகள் தேசிய இனப்பிரச்சினையையும் அதன் விளைவுகளையும் பேசியிருக்கின்றன. மூத்த எழுத்தாளர் வரை நல்ல கனமான படைப்புக்களை படைத்திருக்கிறார்கள். மலையகப் பரிசுக் கதைகள், வெளிச்சம் சிறுகதைகள் என்று மிகக் குறைவான தொகுப்புக்களே வந்திருக்கின்றன. ஏதாவது இலக்கிய அமைப்புக்கள் இந்தப் பாரிய பணியை மேற்கொள்ள முன்வரவேண்டும். தரமான சிறுகதைகளை பிரதேச ரீதியாக தொகுத்து வெளியிடலாம். 'ஈழத்து சிறுகதைகள்' தொடக்கம் முதல் இன்றுவரை என்று தொகுக்கலாம். இப்படியான முயற்சிகள் இன்றைய காலத்தைப் பிரதிபலிக்கும் அடையாளமாக இருக்கும். இது ஈழத்து சிறுகதை வளர்ச்சி பற்றிய முழுமையான அறிமுகத்துக்கும் வழி அமைத்துத் தரும்.

★★

## நாட்டுக்குத் தேவை

ஒரு சிறியவிமானத்தில் ஒரு பாதிரியார், ஒரு விஞ்ஞானி, ஒரு சிறுவன் பயணஞ் செய்துகொண்டிருந்தபோது, விமானம் கோளாறாகிவிட்டது.

"இங்கே மூன்று பரசூட் தான் இருக்கிறது. நான் விபத்து நடந்தது என்பதைத் தெரிவிக்க வேண்டும்," என்று சொல்லி, ஒரு பரசூட்டை எடுத்துக் கொண்டு குதித்துவிட்டார் விமானி.

விஞ்ஞான், "உலகத்துக்கு என் சேவை தேவை," என்று சொல்லி, இரண்டாவது பரசூட்டை எடுத்துக்கொண்டு குதித்துவிட்டார்.

பாதிரியார், சிறுவனிடம், நீ எவ்வளவோ காலம் வாழவேண்டிய குழந்தை. மிஞ்சியிருக்கும் பரசூட்டை நீ எடுத்துக்கொண்டு குதி," என்றார்.

"கவலை வேண்டாம், ∴பாதர். இன்னும் இரண்டு பரசூட் இருக்கிறது. சற்றுமுன் தன் சேவை உலகத்துக்குத் தேவை என்று சொல்லிக்கொண்டு குதித்தாரே விஞ்ஞானி, அவர் எடுத்துச் சென்றது பரசூட் அல்ல. என்னுடைய ஸ்கூல் பை," என்றான் சிறுவன்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர்த்துக்கலில் நடந்த விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஜெரால்ட் ரொபின்சன் (Jerald Robinson) எழுதிய துணிச்சல் (The Adverture) என்ற நாவல் விடுதலைக்காகப் போராடும் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இந்நாவலின் 10-ம் 11-ம் அத்தியாயங்களை ஆங்கிலம்வழி தமிழில் இங்கே தருகிறார்- தமிழ்க்கவி.

# சிறுகதை

அவன் தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டான், பவ்வியமான சிரிப்பை முகத்தில் தவழவிட்டான்,

“நாங்கள்... இல்லை... ஏழைகள் வேலை தேடி வந்தோம் ஐயா!... நானும் என் மகனும்” என்றான்.

அந்த இளம் படையினன் அவனை உற்றுப்பார்த்தான்.

“இந்த இடத்தில் என்ன செய்து கொண்டிருந்தாய்?”

“நாங்கள் ..நான் புகைப்பதற்காக” அவன் தொடர்தான், நான் நினைத்தேன்”

படையினன் இடைமறித்தான், “நீ நினைத்தாய், ஏதாவது திருடலாமெ[illegible]

‘இல்லை இல்லை ஐயா...” கொஞ்சம் நொந்து போன குரலில் மறுத்தவன் “நான்... இங்கு உதவி கிடைக்குமா... என்று எனக்கு உண்மையில் இது இராணுவ பிரதேசம் என்று தெரியாது...”

அந்த படையினன் என்னைக் குனிந்து பார்த்தான்.

“இந்தப் பையனுக்கு என்ன வயது?”

“என் மகன் ஜோன். ஆக பன்னிரண்டு ஐயா!”

‘நாங்கள் ஒரு எட்டு வயதுப் பையனைத் தேடுகிறோம், கிளர்ச்சியாளன். ஜீன்சின் மகன்’

“எங்களுக்கு அவனைத் தெரியாது ஐயா!”

அவசரமாக மறுத்தான் அவன்.

அந்தப் படையினன் மீண்டும் என்னைப் பார்த்தான். கொஞ்சம் தாமதித்து விட்டு,

“அவன் உன் மகனைப் போலவே கறுப்பு என அறிவிக்கப்படுகிறது” என்றான்.

“நிமிர்ந்து நில் ஜோன்” என்றவன், திரும்பி “பாருங்கள் என்மகன் எவ்வளவு உயரம், எட்டு வயதில் எப்படி இந்த உயரம் வரும்” என்றான்.

அந்த படையினன் என்னைப் பார்வையால் அளந்து கொண்டிருந்தான். “உனக்கு எத்தனை வயது பையா?” என்று திடீரென்று கேட்டான்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பன்னிரண்டு ஐயா" நான் தயங்காமல் கூறினேன்.

"உன் தோல் ஏன் கருப்பாக இருக்கிறது?" நான் நிமிர்ந்து மைக்கைப் பார்த்தேன். அவன் என்ன கருதுகிறான் என்று எனக்குப் புரியவில்லை.

"அவனுடைய தாய்..."

"படையினன் இடை வெட்டினான். தொடர்ந்து

"நான் பையனைக்கேட்டேன்" என்றான் கோபமாக,

"என் அம்மா ஒரு நீக்கிரோ ஐயா"

மைக் ஆசுவாசமாக மூச்சுவிட்டது எனக்கு கேட்டது. படையினன் அடுத்த கேள்வியை என்னை நோக்கி வீசினான். "எங்கிருந்து வருகிறீர்கள்?"



என்முன்னே இருந்த மலையைக்காட்டி "அங்கிருந்து." என்றேன்.

"பையன் சொல்வது சரி அவன் பாசறையிலிருந்து.." மைக்கை நோக்கி படையினன் கூற.

"அது அவன் பாதருடைய பாடசாலைக்கு, மலைக்கு சென்றான்."

படையினன் ஒரு கணம் அவனை உற்றுப் பார்த்து விட்டு "என்னுடன் வாருங்கள்" என்றான்.

"ஏன் ஐயா"? கொஞ்சம் மறுத்த மைக், எங்களிடம் இதைவிட அதிகம் உங்களுக்கு தேவையான எதுவும் இல்லை ஐயா! நாங்கள் வீட்டுக்கு போக விரும்புகிறோம்."

"நீங்கள் வீட்டுக்கு பிறகு போகலாம்... ஒவ்வொரு சந்தேக நபரையும் அணிவகுப்புக்கு அனுப்பும்படி எங்கள் கப்டனின் உத்தரவு"

ஏனைய படையினர் எம்மை சுற்றி வளைத்துக் கொண்டனர்.

"எங்களை எங்கே கொண்டு செல்கின்றீர்கள்?" மைக் கேட்டான்.

"மாண்பு மிகு கேணல் அவர்களுடைய இடத்துக்கு...ம் நடவுங்கள்"

அவன் வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினான். நாங்கள் பின் தொடந்தோம். மற்ற இராணுவத்தினரும் பின் தொடர்ந்தனர். எனது தோளில் மைக்கின் கை அணைத்திருந்தது. அவன் கிசுகிசுத்தான்.

"நீ உன் பேரனை கண்டமாதிரி காட்டிக் கொள்ளாதே..."

"ஆனால் அவர் என்னைக் கண்டு கொண்டால்.." நான் கிசுகிசுத்தேன்.

"அதைப்பற்றி நாம் அப்போது கவலைப்படலாம். நீ அவரைப் பிரிந்து நீண்ட நாள் ஆகிவிட்டது. நன்றாக வளர்ந்துவிட்டாய். எனவே, அப்படி நடப்பது சாத்தியமில்லை"

"இருவரும் என்ன கிசுகிசுக்கிறீர்கள்?" படையினன் கேட்டான்.

"ஒன்றுமில்லை ஐயா" மைக் விரைவாக தொடர்ந்தான்" அது நாங்கள் பசிபசியால் களைத்து விட்டோம்.

வீதியின் முடிவில் ஒரு பட்டி போன்ற இடம் வந்ததும் நாம் அதற்குள் செல்ல விடப்பட்டோம். அந்தப் படையினன் ஒரு அதிகாரியைக் கூப்பிட்டான்.

"என்ன கண்டு கொண்டாய்."

அந்த அதிகாரி தலையை ஆட்டினான்.

"ஒன்றுமில்லை"

அந்த லெப்ரினென்ற் கவனித்த படியே குதிரையைத் திருப்பி பாசறையின் பக்கமாக வீதியால் போனான்.

அங்கே மனிதர்கள், பெண்கள், குழந்தைகள் என அநேகம் பேர் என் பாட்டனார் முன் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தனர். அவர்கள் எம்மை சுவாரசியமில்லாமல் பார்த்தனர். ஒவ்வொருவரும் தத்தமது கவலையில் இருந்தனர். மைக் என்னை ஒரு புறமாக தள்ளினான்.

"உனக்கு இவர்களில் யாரையாவது தெரியுமா?"

நான் தலையை ஆட்டி 'இல்லை' என்றேன்.

என் வயிறு இரைந்தது. எனக்கு சாப்பிட ஏதாவது வேண்டும்.

வெயில் சூடாக இருந்தது. எனக்கு களைப்பும் தாகமுமாக இருந்தது.

"இந்த வீட்டின் பின் புறம் ஒரு கிணறு இருக்கிறது" என்றேன்.

"அதை மற" மைக் அவசரமாக சொன்னான்.

'உனக்கு கிணறு இருக்குமிடம் தெரிகிறதா என்பதை அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்!"

என் முகத்தில் ஏற்பட்ட வியப்பை அவன் கவனித்திருக்க வேண்டும். அவன் தன்னை நோக்கி என்னை இழுத்து அணைத்தவாறே "கண்ணே.... நாங்கள் படுத்து இளைப்பாற ஒரு நிழலுள்ள இடத்தைக் கண்டு பிடிப்போம்" என்றான் மென்மையான குரலில்.

நாங்கள் அங்கேயே அருகே ஒரு இடத்தைக் கண்டுபிடித்தோம். மைக் ஒரு வண்டியின் மரச் சக்கரத்தில் முதுகைச் சாய்த்து ஓய்வெடுத்தான். நான் அதன் அச்சுக்குக் கீழே படுத்து சிறிது நேரத்தில் உறங்கியும் போனேன்.

எவ்வளவு நேரம் உறங்கினேனோ எனக்குத் தெரியாது. மைக் என்னை அசைத்து 'கண்களைத் திற அப்பனே' என்றபோது நான் எழுந்து உட்கார்ந்தேன். கண்களை கசக்கி விட்டுக்கொண்டேன். சூரியன் உச்சிக்கு வந்திருந்தது. நான் அரைமணிக்கு மேலாக உறங்கவில்லை.

இராணுவத்தினர் ஒரு வீட்டின் முன்புறத்தை நோக்கி ஒவ்வொருவரையும் தள்ளிச் சென்றனர். நாங்கள் எழுந்து கொண்டு அவர்களோடு சேர்ந்து முன்னோக்கிச் சென்றோம்.

ஒரு இராணுவத்தினன் படிக்கல்லின் மீது தாவி ஏறினான். அதில் நின்று எங்களை நோக்கி கட்டளையிட்டான்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இரண்டு வரிசையில் நில்லுங்கள்" என்னைச் சுற்றிப் பார்த்தான். எங்களில் சுமார் ஐம்பது பேர் வரிசையில், என் வயதில் சிலர் காணப்பட்டாலும் பெரியவர்களாகத் தெரிந்தார்கள். நாங்கள் முன்னோக்கி நகர ஆரம்பித்தோம். வரிசையில் முன்னே செல்ல நான் முயன்ற போது மைக் என்னை வரிசையின் நடுவில் நின்ற ஒரு பருத்த பெண்ணின் பின்னே தள்ளிவிட்டான்.

முன் கதவு திறக்கப்பட்டது அந்தக் கூட்டத்தின் முன் ஒரு —வயோதிபரை நிற்க உதவியபடியே இரு இராணுவத்தினர் தோன்றினர். என் மூச்சை ஒரு தடவை இழுத்துக் கொண்டு முன்னே செல்ல ஆரம்பித்தேன். ஆனால், மைக் உருக்குப் போல என் கையைப் பிடித்திருந்தான்.

அது என் பாட்டனார். ஆனால் அவருக்கு என்னை நினைக்கவில்லை. அவர் அணிந்திருந்த வெள்ளைச் சேட்டும் நைந்து கிழிந்திருந்தன. கடைவாயின் ஓரம் இரத்தம் வடிந்து, அதை கீழே சட்டைக் கொலரில் தேய்த்த அடையாளம் இருந்தது. கண்கள் வெறுமையாக வேதனையான பார்வையுடன், உதடுகள் துடிக்க துரும்பு போல தள்ளாடிக் கொண்டு நின்றார். அவர்கள் ஒரு கொட்டிலில் நுழைந்ததும், ஒரு அதிகாரி அவர்களுக்கு நேரே பின்புறம் வந்துநின்று கொண்டான். அவன் கேணல் தர பட்டியை அணிந்திருந்தான்.

அவன் எங்களைப் பார்த்தான். பின் என் பாட்டனாரைப் பார்த்தான். மெல்லிய கருத்த பென்சில் கோடு போன்ற மீசை அவன் தோற்றத்தைப் பயங்கரமாக்கியது. அவன் வாசிப்பது போல அலட்சியமாக கரகரத்த குரலில் கூறினான்.

"இந்த மக்கள் அந்தப்பள்ளத்தாக்குக்குள் ஒரு முகாம் இருப்பதாக கூறுகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் அங்குள்ள ஒவ்வொருவரையும் உனக்குத் தெரியும். உன்னால் அடையாளம் காட்டமுடியும். எங்களுக்குத் தேவையானது இதுதான். இவர்கள் ஒவ்வொருவரையும் பார். இவர்களில் யாரையாவது சந்தேகமிருந்தால்எம்மிடம் சொல்"

"எனக்குத் தெரியும்" பாட்டன் கஸ்ரப்பட்டு பேசினார்.

"நான் ஏற்கெனவே உனக்குச் சொல்லிவிட்டேன்" கேணல் தாட்சணியமில்லாத குரலில் பேசினான். சநாம் பார்க்கிறோம்' என்றவன் படியின் மேல் நின்ற படையினை நோக்கி, "அவர்களை வரிசையாக நடத்து" என்று கூச்சலிட்டான்.

அந்த இரட்டை வரிசை அசையத் தொடங்கியது. (பாட்டன்) பப்பா கீழே எங்களைப் பார்த்தும் பார்க்காமல் விட்டார். நானும் மைக்கும் சரி நேராக வந்துபோது, கேணல் சத்தமிட்டான்.

'ஏ... பையா முன்னே நில், நாங்கள் பார்க்கக்கூடியதாக...'

ஒரு கணத்துள், நான் சுதாரித்துக் கொண்டேன்! அவன் யாரைக் குறித்தான்?... நான் ஒரு வினாடி நிற்க என் முதுகு குளிர்வதை உணர்ந்தேன். மைக் என்னை முன் வரிசையில் தள்ளிவிட்டான். நான் மேலே பார்த்தபடி ஆச்சரியப்பட்டு நின்றேன்.

என் பாட்டனாரை நேராக அவர் கண்களூடாகப் பார்த்தேன். சட்டென்று மின்னல் நெருப்பாக எழுந்து மெதுவாக கடந்தது.

கண்களை மூடித் திரும்பவும் திறந்த போது எல்லாம் அடங்கி வெறுமனையான பார்வையை எம்மீது படரவிட்டார் முன்னரைப்போல.

கேணல் எங்களை நெருங்கி நின்று கவனித்தான். "சரி" என்றவன் சற்று தாமதித்து "ம்... நகருங்கள்" என்றான்.

வரிசை அசைந்து முன்னோக்கி நகர்ந்தது, எனது முதுகுத் தண்டை குளிர் ஊடுருவியதை உணர்ந்த நான் மைக் நகர்ந்ததும் விடுபட்ட உணர்வைப் பெற்றேன். அப்போது எம் மைக் கைது செய்த லெப்ரினண்ட், கேணலின் காதில் ஏதோ குசுகுசுவெனப் பேசியதைக் கண்டேன். கேணல் குறிப்பாக "நிறுத்து" என்று கூச்சலிட்டான். வரிசை நின்றது.

'நீ'... என்னை நோக்கி 'விரலைச் சுட்டியவன் வெளியே வா' என்றான்.

நான் மைக்கைப் பார்த்தேன். அவனுடைய முகம் வெறுமையாய் உணர்ச்சியற்றிருந்தது. ஆனால் கண்கள் மின்னின. அவன் என் கைகளைப் பிடித்தபடி படிகளின் முன் போனான். கேணல் முன் குனிந்து வணங்கி ஏற்கனவே பாட்டனாரின் பக்கம் திரும்பி நின்றான்.

"என் லெப்ரினண்ட் சொல்கிறான்; இந்த இருவரையும் உன் மருமகனுடைய வீட்டருகே பிடித்தார்களாம். அவர்கள் சொல்கிறார்கள் மலையிலிருந்து வேலை தேடி வந்தார்களாம், உனக்கு அவர்களைத் தெரியுமா?

பப்பா, கீழே எங்களைப் பார்த்தார். மிகவும் ஆவலற்ற பார்வை அது. "நான் அவர்களை ஏற்கனவே பார்த்துவிட்டேன்." தொனி வராமலே கூறினார்.

மைக் என்னை நெருங்கி நின்றான். மீண்டும் நான் குளிரை உணர்ந்தேன். என் முதுகுத் தண்டு சில்லிட்டது. நான் திரும்ப முயன்றேன். ஆனால் அவனுடைய கையால் என் முகத்தை நேராக வைத்தான்.

"யார் அவர்கள்?" கேணல் கேட்டான், என் பாட்டன் பதிலுரைக்க நீண்ட நேரம் எடுத்தது. கடைசியில் அவருடைய உதடுகள் பிரிந்து சொற்கள் வந்தன.

"நான் கிழவன்..." மிக நசிந்த குரலில் கூறினார். "எனக்கு பெயர்கள் நினைவில்லை" குரல் நடுங்கியது. "ஆனால் அவர்கள் வேலை தேடி அடிக்கடி வருபவர்கள்"

கேணல் திரும்பி என்னைக் கணிப்பது போலப்பார்த்தான்.

'இந்தப் பையன் கறுப்பு உன்னுடைய மருமகனும் கறுப்பு'

"எங்களில் அநேகரில் நீக்கிரோ இரத்தம் கலந்துள்ளது." அந்த வயோதிபர் அமைதியாகக் கூறினார். "இது குற்றமென்று பிரகடனம் செய்யப்படவில்லை."

மீண்டும் கேணல் அமைதியானான். அவன் யோசனையோடு பப்பாவைப் பார்த்தான். பின் தன் கைத்துப்பாக்கியை உருவி என்னைக் குறிவைத்தான். "பிரச்சினையில்லை இவன் வாழ்வதா? சாவதா?

ஒரு துன்பச் சாயல் பாட்டனாரின் முகத்தில், கண்களில் தோன்றி, கேணலை நோக்கித் திரும்பியபோது மறைந்தது.

"இதில் பிரச்சினையெதுவுமில்லை"

கேணல் ரவையை, துப்பாக்கியின் ரவை அறைக்கு ஏற்றினான். பப்பா மறுபுறம் திரும்பிக் கொண்டார். கேணல் என்னைப் பார்க்கவில்லை. அவன் பப்பாவைக் கவனித்துக் கொண்டிருந்தான்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திடீரென்று மைக் என்னை அப்பால் தள்ளிவிட்டான், 'ஐயா' அவன் கத்தினான், "உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். கருணை... கருணை காட்டுங்கள் ஐயா! கடவுளுக்காக... கடவுளுக்காக கருணை காட்டுங்கள்"

கேணல் துப்பாக்கியை என்னிடமிருந்து திருப்பி மைக்கிடம் குறித்தான். பப்பா மைக்கைப் பார்த்தார். "இருவரையும் கொல் அல்லது கொல்ல விடு" என்றார் அலட்சியமாக, "இந்த இழிவான செயலுக்கு முடிவு கட்டு, என்னை வருத்துகிறது."

கேணல் அவரை ஏறிட்டுப் பார்த்தான் பின் துப்பாக்கியை வெறுமையாக்கி உறையில் போட்டான். மைக் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டான். "ஆயிரம் நன்றி உங்களுக்கு"

கேணல் கையை அசைத்தான், "முன்னே செல்லுங்கள்."

மைக் மறுபடி என்னை வரிசையில் தள்ளிவிட்டான். மெதுவாக நாங்கள் அசைய வரிசை எங்களின் பின் அசைந்தது. கடைசியில் நாங்கள் அந்த நடைபாதையைக் கடந்தோம். நாம் அமைதியாக நின்றோம். நான் மைக்கைப் பார்த்தான். "அவர் என்னைக் கண்டு கொள்ளவில்லை" மெதுவாக கூறினேன்.

"அவர் உன்னை அறிந்து கொண்டார்"

"ஆனால்.." மைக்கின் கை என் தோளைத் திருகியது.

அந்தக் கேணல் எம்மை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான். என்முன் வந்ததும் நின்றான்.

"உன் பெயர் என்ன?"

"ஜோன்' நான் பதிலளித்தேன்.

"என்னுடன் வா" அவன் திரும்பினான். மைக் கீழ்ப்படிக் கட்டில் இறங்கி முன் நடந்தான். நான் அவனைப் பின் தொடர்ந்தேன். நாங்கள் மீண்டும் உள்ளே சென்றோம்.

கேணல் ஒரு படைவீரனை அழைத்து "அந்தக் கிழவனை இங்கே கொண்டுவா, மற்றவர்களை அனுப்பு!" என்றான். அந்தப்படையினன் என் பாட்டனாரைப் பிடித்து இழுத்துக் கொண்டு கீழே வந்தான். மிகவும் வருந்தத்தக்க ஓசை பின்னே கேட்டது. மக்கள் கூட்டம் கோபமாக கத்தியபடியும், என் பப்பாவை திட்டியபடியும் தொடர்ந்து வந்தது.

"அவர்களைப் போகும்படி சொல், இல்லையேல் தேவைப்படின் கட்டுத் தள்ளு" என்றான் கேணல் 'யா...யா' என்றபடி லெப்ரினென்ற் தன் கைத் துப்பாக்கியை உருவினான். மக்கள் கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே காற்றில் சுட்டபடி முன்னேறினான். வீதி வெறிச்சோடியது. கேணல் எம்மை நோக்கித் திரும்பினான்.

"இந்த கிழவனுக்கு நீங்கள் வாழ்வதா சாவதா என்பதைப் பற்றி அக்கறையில்லை" அமைதியான முறையில் கூறினான்.

"இப்போது உங்களுக்கும் அதேயுணர்வு அவர் மீது, இருக்கிறதா பார்ப்போம்"

இப்போது மணி மூன்றாகிறது. சூரியன் நெருப்பை வாரிக் கொட்டிக் கொண்டிருந்தான். எமது உடல் உருகிக் கொண்டிருந்தது. உமிழ்நீரால் உதடுகளை நனைத்துக் கொண்டோம். வெடித்து உப்புக்கரித்தது உதடு. உஸ்ணத்தால் என் உடல் உள்ளே துடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் பப்பாவைக் கீழே படியில் வைத்திருந்தது வேறு என்னைத் தடுமாறச் செய்தது.

"அவனை வண்டிக்கு எடுத்துச் செல்லுங்கள்" கேணல் உத்தரவிட்டான்.

கிழவர் அவர்களை உதறிவிட்டார். "என்னால் நடக்கமுடியும்" என்றார் பெருமையாக.

படையினர் கேணலை கேள்விக் குறியுடன் பார்த்தனர். கேணல் தலையை ஆட்டினான். முற்றத்தின் நடுவே நின்ற அந்த பார வண்டியை நோக்கி அவர் நடக்க... நாங்கள் பின் தொடர்ந்தோம். வண்டியை அடைந்ததும் அவர்களை நோக்கித் திரும்பினார். உலோகத் தகடு போன்றிருந்த அவர் முகத்தில் களைப்பு தெரிந்தாலும் கண்கள் தெளிவாகவும் அமைதியாகவும் இருந்தன. அவர் பேசவில்லை.

"ஆடைகளை உரித்து விடு" கேணல் கட்டளையிட்டான். படைவீரர்கள் விரைந்து முன் சென்றனர். அந்த வயோதிபர் கைகளால் அவர்களைத் தடுக்குமுன், ஏற்கனவே அவர்கள் உடைகளைக் கிழித்து அவர் முன் போட்டனர். அவருடைய தளர்ந்த மெலிந்த உடலின் வெண்மை நிறம், உடை மூடியிருந்த பகுதி மேலும் வெண்மையைக் காட்டியது. உடைகள் இல்லாமல் மிகவும் சிறியவராக, தோல் சுருங்கிய நிலையில் தசை நடுங்கியது. அவருடைய பிட்டம் சுருங்கி ஏதுமற்ற தாய் ஆதரவற்று தோற்றுப் போய் நிற்பதான தோற்றத்தைத் தந்தது.

"அவனை அந்தச் சக்கரத்தில் கட்டுங்கள்"

இருபடையினர் பருந்து போல பாய்ந்து அவரைச் சக்கரத்தில் சாய்த்தனர். கைகளும் கால்களும் அகலமாக சக்கரத்தின் விளிம்பில் கட்டப்பட்டன. சக்கரத்தின் நடு அந்த அச்சு அவருடைய முதுகில் அழுத்தியது. அச்சின் அசௌகரியமான, பயங்கரமான அழுத்தத்திலிருந்து, விலக அவர் உடலை அசைத்துக் கொண்டார். வேதனை நிரம்பிய முகச் சுழிப்பை உதறி எதிர்ப்பைச் சேர்த்துக்கொண்டார். கண்களை மூடி தலையைச் சாய்த்து சூரியனுடைய நேரடியான தகிப்பை விலக்கமுயன்றார்.

கேணல், படைவீரனுக்கு சைகை செய்யவே ஒருவன் அவருடைய தலையை நேராக்கி சக்கரத்தின் விளிம்புடன் அழுத்தி ஒரு தோல் பட்டியால் அவருடைய நெற்றியை சக்கரத்துடன் பிணித்து தலையின் அசைவை நிறுத்தினான்.

"டொன் ராபில்!" கேணலுடைய குரல் மிகவும் தாழ்வாக ஒலித்தது. 'டொன் ராபீல்' இவரை; என் பப்பாவை யாரும் இப்படி அழைத்து நான் கேட்டதில்லை. பப்பா அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தார்.

"இது தேவையே இல்லை டொன் ராபீல்!" மிகவும் பணிவாக கூறினான் கேணல்.

பப்பா பதில் பேசவில்லை.

"உனக்குத் தெரியும், அந்தப் பையன் எங்கே ஒளித்து வைக்கப்பட்டுள்ளான்."

பப்பாவின் கண்கள் அசையவில்லை.


"நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். எனக்குத் தெரியாது, றோஜா, அவனை... அவனை எங்கோ கொண்டுசென்றுவிட்டான்" ............

மிகுதி அடுத்த இதழில் தொடரும் .........



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தவிப்பு

புவன சிங்காரன்

அங்கிருந்து வரும்
சேதி எதுவும் திருப்தியாயில்லை
அந்நியர்
காலடிகளால் சிதைகின்ற
என்னூரிலிருந்து
இனிய சேதி வருவதில்லை.

வருவதாய்ச் சொல்லிப் போனவர்கள்
'போய் விட்ட சேதி மட்டும்
அடிக்கடி வந்து சேர்கிறது.

எங்களூரில்
என் தோழர்கள்
அனாதைகளாய்த் தொலைந்து போகிறார்கள்.
இங்கிருக்கும் எனக்கு
சோகமே செய்திகளாய் எட்டுகின்றன.

ஒருவர் பின் ஒருவராய்
வீழ்ந்து போகும்போது
எப்போது எங்களுக்கு
விடியல் அங்கிருந்து வரும் என்ற
அவர்களின் கேள்வி
காதில் அறைகிறது.

எப்போது நாம்
இங்கிருந்து சூரியனைக் கொண்டு
செல்வோம்.

# இருள் மோகம்

ஏன் ஒரு தலைமுறையே
தொலைந்து போகிறது?

யாரிடம் நோக;
யாருக்குச் சொல்லியழ?

விடியலுக்கு அர்த்தம் புரியாத
ஒரு தலைமுறை
எப்படி உருவாகிறது?

கண்ணீரும் இரத்தமும் சிந்தி
வளர்ந்த விருட்சம்
கைவிடப்படலாமோ!
ஏனிந்த துயர்நிலையம்மா?

நூற்றாண்டுத் துயரங்கள்
எப்படி ஓரிரண்டாண்டில்
மறந்துபோகிறது?

இருட்டில் வீதிகளையே
காணாத வாழ்வு
எப்படிப் பிடித்துப் போயிற்று?

துவிச்சக்கர வண்டிகளை
உருட்டிப் பழக அனுமதிக்கும்
வாழ்க்கையில்
என்ன லயிப்பு?
ஏன் இப்படி?



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






பிரான்ஸ்

# ஐரோப்பாவில் மேதின ஊர்வலங்கள்

நோர்வே

ஜேர்மனி






www.tamilarangam.net







அச்சுப்பதிப்பு 0181 - 646 2885

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்